
பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை 20/=

புதுமை : 01 | 24 செம்ரெம்பர் 2016 | விதி : 15



# திலீபன்:
## இன்னும் எரியும் நெருப்பு

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



தொடர்கதை

# ஆறாவடு 15

சயந்தன்

"இன்றைக்கு பறாளாய் முருகன் அருளால் அன்னதானத்தில சாப்பிட்டுட்டன்" என்று வெற்றி சிரித்தான். வேறு யாரும் சிரிக்கவில்லை. வெற்றி கிணற்றடியில் கால்களை அலம்பினான். வாளித் தண்ணீரை ஒரு கையால் சரித்து தலையைக் குனிந்து மறுகையால் தண்ணீர் குடிக்க முயற்சித்தான். தண்ணீர் முழுவதும் வெளியில் சிந்தியது. நிலாமதி வாளியை வாங்கி ஊற்றினாள். அவன் இரண்டு கைகளையும் ஏந்தி மள மள வென்று குடித்தான்.கையிடுக்குகளால் வழிந்தோடிய தண்ணீர் கழுத்தினை நனைத்து மார்பில் இறங்கி சந்தனத்தைச் சேறாக்கியது. சால்வையால் அழுத்தித் துடைத்தான். "சரி நான் வர போறன், உங்கடை உதவிக்கு நன்றி" என்று வெளியேறினான். அவன் படலையடிக்குப் போனபோது அம்மா உரத்துச் சொன்னாள். "பட்டினி கிடக்க வேண்டாம். எப்பவெண்டாலும் வந்து சாப்பிடுங்கோ தம்பிமாரே"

அதற்குப் பிறகு வெற்றி அடிக்கடி வந்து போனான். அவ்வப்போது அவனோடு வெறும் நண்பர்கள் வந்தார்கள். ஒரு பின்னேரக் கருக்கலில் அப்படி நண்பர்களோடு வந்த வெற்றி, "உங்களுக்குத் தெரியாமல் ஒரு காரியம் செய்து போட்டம். மன்னிச்சுக்கொள்ள வேணும்" என்றான். நிலாமதி "என்ன" என்றாள். அவர்கள் மண்வெட்டியோடு புளிய மரத் தடிக்கு போனார்கள். திரும்பி வந்தபோது உரப் பையில் சுற்றிய துப்பாக்கிகளையும் கிரேனைட் குண்டுகளையும் கொண்டு வந்தார்கள். அன்றைக்குப் பிறகு அந்த வீட்டில் ஆயுதங்கள் வந்து போகத் தொடங்கின.

உள்ளே வைக்க மாட்டார்களாம் என்றும் கேள்விப்பட்டிருந்தாள்.

சந்தியில் இரண்டு துப்பாக்கிச் சத்தங்கள் அடுத்தடுத்துக் கேட்ட அன்றைய மதியத்தில் வெற்றி நிலாமதி வீட்டுக்கு வந்திருந்தான். சைக்கிள் ஹாண்டிலில் தொங்கிய சொப்பிங் பையில் பனை யோலையில் மடித்துப் பொதி செய்யப் பட்டிருந்த ஆட்டு இறைச்சி இருந்தது. 'கரியரில்' துப்பாக்கியை உரப்பையில் வைத்து மடித்துச் சுற்றியிருந்தான். அதன் மேலே பெரிய நீர் மட்டமும், சீவிலிக் கூடும் இன்னும் இரண்டு தச்சு வேலைச் சாமான்களும் இருந்தன. வாய் நிறைய வெற்றிலை போட்டிருந்தான். கதைக்கும் போது வெற்றிலைக் குழையை ஒரு கன்னத்தில் ஒதுக்கியிருந்தான்.

"இதில ஆட்டிறைச்சி இருக்கு, உங்கட கைப்பக்குவத்தில மணம் குணத்தோடை ஒருக்கா சமைச்சுத் தாங்கோ..." என்று நிலாமதின் அம்மாவிடம் சொன்னான். "உங்களுக்குப் பிரச்சினை இல்லாட்டி சமைச்சுத்தா ஏலுமோ" என்று கொடுக்கிற பழக்கத்தை இப்பொழுது அவன் நிறுத்தியிருந்தான். அம்மா சமைக்கும் வரை அவன் காத்திருந்தான். "எப்பிடி சுகமாயிருக்கிறியளோ..." என்றொரு கேள்வியோடு அம்மா சமையலில் மூழ்கினாள். நாட்டு நடப்புக்களைக் குறித்து அவனிடம் ஏதும் கேட்பதற்கு அவளுக்குத் தயக்கமாயிருந்தது.

முன்பொரு தடவை, "இதுக்கெல்லாம் எப்ப முடிவு வரும்" என்று அவள் எதார்த்தமாய் கேட்ட போது துப்பாக்கியைத் துடைத்தபடியிருந்த வெற்றி தலையை நிமிர்த்தி "ஏன் நாங்கள் எப்ப வராமல் விடுவம் என்று பாக்கிறியளோ" என்று கேட்டிருந்தான். பிறகு "நாங்களே முடிஞ்சு போனாலும் இதுகளுக்கை தான் சுத்திக்கு கொண்டு திரிவம் அம்மா" என்றான். அவனது அம்மா என்ற வார்த்தை வாஞ்சையோடு அழகாயிருக்கும்.

வெற்றி இறைச்சிக்கறியை வட்டமான சில்வர் சாப்பாட்டு பெட்டியில் கொண்டு வெளியேறிய போது நிலாமதி பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்குள் திரும்பினாள். வெற்றியைக் கண்ட போது இதுநாளும் அறியாத உணர்வொன்று உச்சந் தலையிலிருந்து உள்ளோடிக் குளிர்வித்தது. வாயில் இயல்பாகச் சிரிப்பு மலர்ந்தது. கொஞ்ச நாட்களாக இப்படித் தோன்றுகிறது. படலையடியில் வைத்து "ரோட்டில வானரங்கள் ஏதும் நிக்குதோ" என்று வெற்றி கேட் டான். ஒருநாள் பேச்சினிடையே அனுமான் தான் இலங்கையில் நுழைந்த முதலாவது இந்திய ஆக்கிரமிப்பாளன் என்று அவன் சொல்லியிருந்தான். நிலாமதி இல்லை யென்று தலையாட்டினாள். அப்பொழுது இரட்டைப் பின்னல்கள் தோள்களின் முன்னே விழுந்து பின் போயின. அவன் வேறேதும் கேட்கமாட்டானா என்று தோன்றியது. பிறகு அவளாகவே "போன முறை கொண்டு போன சாப்பாட்டுப் பெட்டியும் கொண்டு வந்து தரேல்ல" என்று பேச்சை நீட்டினாள்.

"அதை நீங்கள் வழக்கம்பரை ஆமிக்கு காம்பில தான் போய்க் கேக்க வேணும். அவங்கள் தான் நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ரவுண்ட் அப் பண்ணினவங்கள்..." என்றவன் சற்று அமைதியாயிருந்தான்.

பிறகு "எங்களில் ஒருவன் செத்தும் போனான்" என்று விட்டு சைக்கிளை மிதித்து வளைவுகளில் மறைந்தான். நிலாமதி தனக்குள் பதற்றத்தை உணர்ந்தாள்.

அன்றைக்குப் பின்னேரம் சந்தியில் நந்தகுமாரன் என்கிற இளைஞனின் கைகளில் "நான் துரோகி" என்றெழுதப்பட்ட கடிதமொன்றை சத்தமாகப் படிக்கக் கொடுத்த வெற்றி அவனின் தலையில் துப்பாக்கியை வைத்து சுட்டான் என்ற செய்தி பரவிய போது நிலாமதி விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அன்றைக்கு இரவு முழுவதும் அவள் அழுதாள். அந்த நாளுக்குப் பிறகு வெற்றி காணாமற் போனான்.

“அன்றைக்குப் பின்னேரம் சந்தியில் நந்தகுமாரன் என்கிற இளைஞனின் கைகளில் "நான் துரோகி" என்றெழுதப்பட்ட கடித மொன்றை சத்தமாகப் ப்டிக்கக் கொடுத்த வெற்றி அவனின் தலையில் துப்பாக்கியை வைத்து சுட்டான் என்ற செய்தி பரவிய போது நிலாமதி விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.”

நெடுங்காலத்தின் பின்னர் ஒரு காலையில் அவன் திரும்பி வந்த போது நிறைய பசியோடும் களைத்தும் இருந்தான். முகம் வாடியிருந்தது. அவனோடு இளைஞர்களும் வந்திருந்தனர்.

அம்மா வீட்டிலிருக்கவில்லை. நிலாமதி இறுகியிருந்த முகத்தோடு அவர்களை வரச் சொன்னாள். துப்பாக்கிகள் சுவரோடு சாய்த்து வைக்கப் பட்டிருந்தன. கிரனைட் குண்டுகள் செருகப் பட்டிருந்த ஹோல்சர்களைக் கழட்டி அருகில் வைத்தார்கள். "என்ன சாப்பாடு இருந்தாலும் கொண்டு வாங்கோ. பசியிலை தலை சுத்துது" என்றான். நேற்றைய இரவு தண்ணீர் விட்டு வைத்த பழம் சோறு குசினிக்குள் குளிர்ந்தபடி இருந்தது. அடுப்பில் விறகுத் தணலை மூட்டி வெட்டிய கருவாட்டுத் துண்டங்களை அதற்குள் வைத்தாள். கருவாடு சுடுகிற மணம் வீட்டை நிறைத்தது. வெளியே வெற்றி "எடே கருவாடடா" என்று நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தது கேட்டது.

வெற்றியிடம் இரு விளிம்புகளும் கூரான, பளபளக்கிற கத்தியொன்றிருந்தது. அதற்கெனவடிவமைக்கப்பட்ட உறையொன்றினுள் அது செருகப்பட்டிருந்தது. தனித்திருக்கும் பொழுதுகளில் உறையினின்று அதனை வெளியில் எடுத்து பெருவிரலால் அதன் கூர்மையைத்தடவிப் பார்த்து மீண்டும் உள்ளே செருகிக் கொள்வான் அவன். அதை போன்ற கூரிய கத்திகள் கூர்க்கா ஆமிக்காரர்களிடமும் இருப்பதாக நிலாமதி அறிந்திருந்தாள். அவர்கள் கத்தியை வெளியே எடுத்தால் இரத்தம் பார்க்காமல்

(வலிகள் இன்னும்...)

## நம்பிக்கை

துணை பிரிந்த குயிலொன்றின்
சோகம் போல
மெல்ல மெல்ல
கசிகிறது ஆற்று வெள்ளம்.
காற்றாடும் நாணலிடை
மூச்சுத் திணறி
முக்குளிக்கும் வரால் மீன்கள்.
ஒரு கோடை மாலைப்பொழுது
அது.



என்னருகே
வெம்மணலில்
ஆலம்பழக் கோதும்
ஐந்தாறு சிறு வித்தும்
காய்ந்து கிடக்கக்
காண்கின்றேன்
என்றாலும்,
எங்கோ வெகு தொலைவில்
இனிய குரல் எடுத்து
மாரி தன்னைப் பாடுகிறான்
வன்னிச் சிறான் ஒருவன்

## நீலம்

தோழி

காலமாய் நுரைகள் உடைகிற
மணலில்
சுவடுகள் கரைய
சிப்பிகள் தேடிய உலா
நினைவிருக்கிறதா?

கடலிலும் வானிலும் தொடர்கிற
நீலமாய்
நம்மிலும் ஏதோ
படர்கிற தென்றேன்.
மீன்கொத்திய நாரையாய்
நிமிர்ந்தாய்
உன் கண்களில் எனது பிம்பம்
அசையும்.

ஆண்டு பலவாகினும்
நரையிலா மனசடா
உனக்கென்றாய்.

தோழி

இளமை என்பது வாழும் ஆசை.
இளமை என்பது கற்றிடும்
வேட்கை.
இளமை என்பது முடிவிலா தேடல்;
இளமை பிறரைக் கேட்டலும்
நயத்தலும்.
இளமை என்பது வற்றாத ரசனை
இளமை என்பது நித்திய காதல்.
இளமை என்பது
அயராத ஆடலும் பாடலும் கூடலும்
என்றேன்.

தோழா உனக்கு எத்தனை வயசு?
தோழி எனக்கு
சாகிற வரைக்கும் வாழ்கிற வயசு.

வ.ஐ.ச. ஜெயபாலன்



சிக்மலிங்கம் றெஜினோல்ட்

# உன்னதர்களைச் சுமந்த ஊரெழு

ஊரெழுவில் எனக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள். ஒன்று சின்னபாலா அல்லது ஐயர் பாலா என்கிற இளையவன் அல்லது பால நடராஜன். மற்றவர் தி. உதய சூரியன். அடுத்தது திலீபன். சின்ன பாலா, 1970 களின் முற்பகுதியில் போராட்டத்தில் இணைந்தவர். உரும்பிராய் சிவகுமார னோடு சின்னபாலாவின் போராட்ட வாழ்க்கை தொடங்கியது. ஆனாலும் அவர் எனக்கு நெருக்கமானது,1980 களின் முற்பகுதியிலேயே. அப்பொழுது அவர் ஈரோஸ் இயக்கத்திலிருந்தார். அந்த இயக் கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். ஈரோஸின் அரசியல் செயற்பாடுகளுக் கான பொதுமை என்ற பத்திரிகை சின்ன பாலாவின் பொறுப்பில்தான் வெளி வந்தது. அதற்கு முன்பு, ஈரோஸ் 1970 களில் வெளியிட்ட தர்க்கீகம் பத்திரிகை யிலும் சின்னபாலாவின் பாத்திரம் மையத் துக்குரிய ஒன்று. சின்னபாலா, அரசியலில் மட்டுமல்ல, இலக்கியத்திலும் இயங்கிய ஒரு காலமிருந்தது. இளையவன் என்ற பேரில் காணி உறுதி, வீடு, போர்க்களம் என மூன்று சிறுகதைத்தொகுதிகளை எழுதி வெளியிட்டார். காணி உறுதி கவனத்திற்குரிய கதைகளைக் கொண்ட தொகுதி. இலக்கியத்தில் அவருடைய அடையாளம் சிறுகதை எழுத்தாளர், இளையவன். போராட்டத்தில் அவரு டைய அடையாளம் முன்னோடி, சின்ன பாலா அல்லது ஐயர் பாலா. சின்னபாலா வின் அரசியல் நூல்கள் மழையைத் தராத வானம் திம்பு முதல் ரோக்கியோ வரை. இந்த இரண்டு புத்தகங்களும் நம்முடைய சமகால அரசியலுக்கு முக்கியமானவை.

ஈரோஸ் இயக்கம் கலைக்கப்பட்ட பிறகு, சின்னபாலா ஈழநாதம் பத்திரிகை யின் ஆசிரிய பீடத்தில் இயங்கினார். யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பிறகு அவருடைய அரசியலும் மாறியது. சுரேஸ் பிரேமச்சந்திரனுடன் சேர்ந்தியங்கினார். அந்தக் காலத்தில் ‘காலைக்கதிர்’ என்றொரு பத்திரிகையை வெளியிட்டார். பத்துப்பன்னிரண்டு இதழ்கள் வந்திருக்க வேணும். பிறகு, அதுவும் நின்றது. அதற்குப் பிறகு அவர் கொழும்புக்குப் போனார். அங்கே தினமுரசு சின்ன பாலாவை அழைத்தது. தினமுரசின் ஆசிரிய பீடத்தில் இயங்கினார். டக்ளஸ் தேவானந்தா, சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் 1970 களில் ஈரோஸில் இயங்கியவர்கள். அந்த உறவே சின்ன பாலாவை இவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தது. ஆனால், விதி நீளவில்லை. சின்னபாலா கொழும்பில் கொல்லப்பட் டார். ஊரெழுவின் முதற்போராளியின் மரணம் அது.

சின்னபாலாவுக்கு அடுத்த தலை முறையைச் சேர்ந்தவர் திலீபன். படிக்கிற காலத்திலேயே அரசியல் ஈடுபாட்டினால், புலிகள் இயக்கத்தில் சேர்ந்தவர். மருத்து வத்துறையில் படிக்கத் தெரிவான திலீப னுக்கு இயக்கத்தில் அரசியல் வேலையே கிடைத்தது. யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளராக நியமிக்கப்பட் டார். அது கிட்டுவின் காலம். புலிகள் மட்டுமல்ல, ஏனைய இயக்கங்களும் எழுச்சியடைந்திருந்த நாட்கள். அப்போது ரெலோ, ஈரோஸ், புலிகள், ஈ.பி.ஆர்.எல். எவ் என்ற நான்கு இயக்கங்கள் ஈழதேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற பேரில் ஒருங்கிணைந்திருந்தன. தலைவர் கள் கைகோர்த்து அழகிய படங்களும் வெளியாகியிருந்தன. சனங்களுக்கும் இதெல்லாம் ஒரு பெரிய நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. இலங்கை அரசாங்கத் தின் ஈரல் கருகிய நாட்கள் அவை. ஒருங்கி ணைந்திருந்த இயக்கங்களுக் கிடையில் அரசியல் தொடர்புகளைப் பேணுவதில் திலீபன் முன்னின்று உழைத்த ஒருவர். என்னதானிருந்தாலும் தமிழர்களுடைய ஒற்றுமைக்கு அதிக வயது எப்போதும் இருப்பதில்லை. ரெலோ மீதான தாக்குத லோடு கூட்டணி சிதறியது. சிறிசபாரத்தினம் கொல்லப்பட்டார். இதைப்பற்றி வெளியே சேதி சொல்வது திலீபனின் பொறுப்பு. என்ன சொல்லலாம் என்பதில் திலீபனுக்குக் குழப்பம். எப்படி இதை யெல்லாம் நியாயப்படுத்தலாம்? என்று சிந்தித்தவரிடம் கிட்டு சொன்னார், “நீ ஒரு போராளி. இயக்கத்தில் இருந்தால், உனக் கெண்டு சொந்தமாக ஒரு கருத்து இருக்க முடியாது. இயக்க நிலைப்பாடு எதுவோ அதுதான் உன்னுடைய நிலைப்பாடு. இயக்கம் சரியெண்டு முடிவெடுத்தால் அதை நீ ஏற்றுக்கொள். அதுதான் உன்னுடைய கடமை” என்று. சிறிசபாரத்தினத்தின் கொலைக்கான காரணத்தைப் பற்றி திலீபன் பத்திரிகை களுக்கு அறிக்கை வெளியிட்டார்.

காலம் மாறியது. இலங்கையின் இனப் பிரச்சினையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டினால், இந்திய அமைதிப்படை இலங்கைக்குள் வந்திறங்கிய போது. தமிழ்ச் சனங்கள் கைகளை அசைத்து வரவேற்றனர். பூமாலை போட்டு மகிழ்ந் தனர். ஆனால், இந்த மகிழ்ச்சி நீடிக்க வில்லை. தமிழீழத்திற்குப் பதிலாக மாகாணசபை என்றபோது இயக்கங்க ளுக்கு முகம் வாடியது. புலிகளுக்குக் கசந்தது. என்றாலும் அந்தச் சூழலில் யாராலும் ஒன்றுமே செய்ய முடியாது. இந்தியா, இலங்கை அரசாங்கத்தையும் ஆட்டிப்படைத்தது. இயக்கங்களையும் இறுக்கிப் பிடித்தது. இதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த சங்கதிகள்.


இந்தியாவிடம் ஐந்து அம்சக் கோரிக் கைகளை வைத்து, புலிகள் போராட்ட மொன்றை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டத்தில் உண்ணாவிரதமிருந்தது திலீபன். திலீபன் உண்ணாவிரதமிருக்கும் போது, அது மெய்யாகவே ஒரு உண்ணா நோன்பாகப் போய் முடியும் என்றும் அதில் திலீபனின் உயிர் பலியிடப்படும் என்றும் பலரும் எதிர்பார்க்கவில்லை. உண்ணாவிரதமிருந்த திலீபன், மெல்ல மெல்ல வாடிச் செத்துக் கொண்டிருந் தான். அப்படி அவன் செத்துக் கொண்டி ருப்பது, சனங்களிடம் கொதிப்பை உண் டாக்கியது. சனங்கள் அலையலையாக நல்லூரில் திரண்டனர். அது இப்போது திருவிழாவுக்கும் வேடிக்கைக்குமாகத் திரண்ட கூட்டத்தைப்போன்றதல்ல. ஒரு மனிதன் வாடிச் செத்துக் கொண்டி ருப்பதையிட்டுக் கலங்கிய கூட்டம். அந்த மரணத்தைத் தடுத்து விடமுடியாதா என்று பதறிய கூட்டம். ஒப்பாரியும் ஓலமும் கதறலும் கவிதைகளுமாக அந்த நாட்கள் இருந்தன. பள்ளிப் பிள்ளைக ளில் இருந்து பெரியவர்கள் வரை அங்கே திரண்டு போராடினார்கள். எல்லாம் நடந்தன. ஆனால், அரசியலில் எதுவுமே நடக்கவில்லை. அரசியல் மனம் கருணை யற்றது. அது ஒரு கடினமானதொரு இயந்தி ரமே. அதனிடம் அன்புக்கோ, கருணைக் கோ, இரக்கத்துக்கோ இடமில்லை. கருணையில்லாத அரசியலின் விளைவா கத் திலீபனின் உயிர் பன்னிரண்டாம் நாள் பிரிந்தது. ஊரெழுவின் அடையாளமாகிய இன்னொரு போராளியின் மரணமாகியது அது. அந்த மரணத்தின் நினைவுகள் கடந்து செல்ல முடியாத அளவுக்கு வரலாற்று மனதில் காயமாகி விட்டது.

மூன்றாவது நண்பர், தி. உதயசூரியன். மாறுபட்டதொரு நுட்பமான சிந்தனையா ளன். உதயசூரியனை மல்லிகை அலுவல கத்திலேயே முதன்முதலில் சந்தித்தேன். படித்துக்கொண்டே, இதழ் வேலையைச் செய்தான். அல்லது இதழ் வேலையைச் செய்து கொண்டு படித்தான் என்றும் சொல்லலாம். பொதுவாகக் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வருகின்றவர்கள், இப்படித்தான் உருவாகுவார்கள். யாழ்ப் பாண நகரம் அப்படி உருவாக்கிய ஆளு மைகளில் ஒருத்தர் உதயசூரியன். மண்ணுக்கடியிலிருந்து வந்தவன் என்று தன்னைப்பற்றி அடிக்கடி சொல்லிக் கொள்வான். அந்த மண்ணின் அடையாள மும் செழிப்பும் வரட்சியும் உதயசூரிய னில் இருந்தது. எல்லாம் கலந்திருப்பது தானே மனித இயல்பு. இயற்கையின் அமைப்பும் இதுதானே. கண்ணம்மா என்ற புதிய வகைப் படைப்பு முதல், உலகமயமாதல் சில அவதானிப்புகள் என்பதுவரையில் சில புத்தகங்களை எழுதியிருந்தான். பிள்ளைகளின் சிறார்க ளின் மாணவர்களின் அகஉலகம் பற்றிய தொடர் கண்ணம்மா. வெளிவாய்ப்பாடு களைப் படித்து, ஒப்புவிக்கும் சூழலில், அதற்கு மறுதலையாக, நம்முடைய சூழலை மையமாக வைத்துச் சிந்திக்கப் பட்ட - சுய அடையாளமும் இயல்பு முள்ள படைப்பு. சிப்பிக்குள் முத்து. குடத்துள் விளக்கு.

ஊரெழு செம்பாட்டு மண் பிரதேசம். யாழ்ப்பாணத்தில் நல்ல வளமான மண்ணையும், நல்ல நிலத்தடி நீர் வசதி யையும் கொண்டுள்ள ஒரு இடமாகும். நீர்வேலியைப் போல வாழைக்கும் பேருள்ள இடம். மரவள்ளிக் கிழங்கும் நல்லா விளையும். பொதுவாகவே காய் கறிகளுக்குப் பெயர் பெற்றது. யாழ்ப்பாணத்தில் திராட்சை, உருளைக் கிழங்கு போன்ற புதிய பயிர் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்ட 1970, 80 களில் ஊரெழுத் தோட்டங்கள் புதுப்பொலி வோடிருந்தன. அந்த நாட்களில் தோட் டங்களில் வேலை செய்கிற கூலி உழைப்பாளர்களுக்கு உரிய சம்பளமும் கௌரவமும் வேணும் என்று ஒரு கிராமியப் போராட்டம் நடந்தது. இதைவிட, இந்தக் கூலி உழைப்பாளர் களுக்கு சொந்த நிலம் இருக்கவில்லை. இதனால் நிலத்துக்கான போராட்டத்தை யும் கிராமிய உழைப்பாளர் சங்கம் முன்னின்று நடத்தியது. காணிப் போராட்டம், கூலிப்போராட்டம் என்று இந்தப் போராட்டங்கள் நடந்தன. இந்தப் போராட்டங்களோடு, அங்கே கலாசார ரீதியான விழிப்புணர்வுக்கும் அடிநிலை மக்களுடைய கலாசார அடை யாளத்துக்குமாக நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் கூட நடத்தப்பட்டன. கிராமிய உழைப்பாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதற்கெல்லாம் ஊக்க விசையாக இருந்தனர். அது கூலி உழைப் பாளர்களுடைய உரிமைகளைப் பற்றிக் கொஞ்சம் கவனமெடுத்துப் பேசப்பட்ட நாட்கள். அதனால், நீண்டகாலமாகவே தோட்டங்களில் மாய்ந்து கொண்டிருந்த கூலிகளுக்கு ஒரு சிறிய பாதுகாப்பும் முன்னேற்றமும் ஏற்பட்டது. சில புதிய குடியிருப்புகளையும் கிராமங்களையும் கிராமிய உழைப்பாளர் சங்கம் உருவாக்கியது.

ஆனால், இதெல்லாம் பின்னாளில் மாறி, ஊரெழு என்றால் மனதில் கலக்கம் உண்டாகிற மாதிரி ஆனது. இந்திய அமைதிப்படை மிகப்பெரியதொரு படைமுகாமை ஊரெழுவில் அமைத்தது. அங்கிருந்த படையினர் அந்தச் சுற்று வட்டாரத்தில் பெரியதொரு ஆட்டத்தை ஆடி முடித்தனர். அதிலே ஒரு தொகைச் சனங்கள் செத்து மடிந்தன. 1995 க்குப் பிறகு, ஊரெழுவில் இலங்கைப் படைகள் குடிகொண்டன. 1995 இலி ருந்து 2009 வரையிலும் ஊரெழு என்றால் ஈரல் கலங்குமளவுக்கு நிலைமை இருந் தது. வெள்ளைவான்களும் இனந்தெரி யாத முகங்களும் அநாமதேயத் தொலை பேசி அழைப்புகளும் ஊரெழுவிலி ருந்தே வருகின்றன என்று பலரும் பேசினார்கள். ஊரெழு என்ற பெயரே பலரையும் கலங்கவைத்தது. உறங்காத விழிகளும் அடங்கா மனமுமாக ஒரு காலம் சனங்களின் முகத்தில் குந்தியிருந்தது.

எல்லாவற்றுக்கும் ஒரு முடிவுண்டல்லவா. இப்பொழுது மறுபடியும் ஊரெழு வில் தோட்டங்கள் செழிக்கத் தொடங்கி யுள்ளன. கடைகளும் தெருக்களும் கலகலப்பாகியுள்ளன. சில நாட்களுக்கு முன்னே அங்கே போயிருந்தேன். ஊரெழு என்றால் பிள்ளையார் கோயில் என்ற மாதிரி அடையாளம் சொல்ல முற்படுகி றார்கள். முன்னோடிகளையும் மறுத்தோடி களையும் காலம் எங்கே வைத்திருக்கி றது? வரலாறு முன்னோடிகளுக்கும் தியா கிகளுக்கும் அளித்துள்ள இடம் என்ன?




அருணன்

# திலீபன்: இன்னும் எரியும் நெருப்பு

இந்தியாவே உலகிற்கு அகிம்சையைப் போதித்தா உலகத்தவர் ஒரு மயக்கமான கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். அகிம்சா மூர்த்தி என வர்ணிக்கப்படும் மகாத்மாவான மோகன் கரம்சந் காந்தி அதாவது இந்தியாவின் தேசபிதா அவர்களுக்கே துப்பாக்கிக் குண்டுகளைப் பரிசாக வழங்கிய நாடும் இந்தியாதான் என்பதனை எவரும் கருத்தில் கொள்வதில்லை.

அதுதான் சர்வதேச ஜனநாயக அரசியலின் இயல்பு காந்தியைச் சுட்டுக்கொன்ற நாதுரான்ட் விநாயக் கோட்சே - என்பவர் சார்ந்திருந்த இந்துத்துவ அமைப்பின் அரசியல் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியே இந்தியாவை இன்று ஆட்சி செய்கின்றது. இது ஒரு முரண் நகை யான விடயமே. காந்திஜீ அவர்கள் கொல்லப்பட்ட அன்றே, காந்தீயம் வெறும் பேசு பொருள் ஒன்றாக மாறிவிட்டதே நிஜம்.

வரலாறு எப்பொழுதும் கடந்தகாலப் பெருமைகளைப் பேசியபடி, நிகழ்கால அசிங்கங்களை மூடிமறைக்கும் மூர்க்கத்தனமான பிரயத்தனங்களிலேயே ஈடுபட்டு வருகிறது.

பலவான்களின் மோசமான பலவீனங்களையும் நியாயப்படுத்தும் வல்லாதிக்க வெறிபிடித்த ஜனநாயக மரபு அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பலவீனமான மக்களின் பலங்களையும், பலவீனமாக அடையாளப்படுத்தும் அநாகரிக அரசியலுக்கு அங்கீகாரம் அளிப்பதனையும் மரபாகக் கொண்டிருப்பதே அவமானத்துக்குரிய விடயம்.



இந்தியாவின் காந்தீயம் பேசும் ஜனநாயக அரசியல், இலங்கைத் தமிழர் விவகாரத்தை, தனது சொந்த அரசியல் அபிலாசைகளுக்காக, தனது சுயநல வெறியுடன், கடந்த மூன்று தசாப்தகாலங்களாக இவ்வாறான அணுகுமுறைகளைக் கையாண்டு வருவது மூடிமறைக்கக் கூடிய விடயம் அல்ல.

இந்தியாவின் அந்த அகிம்சை முகமூடி அணிந்த போலி முகத்தை வெளியுலகிற்குக் குறிப்பாக இந்தியா மீது அளப்பரிய நம்பிக்கை கொண்டிருந்த ஈழத்தமிழ் மக்களுக்கு துல்லியமாக வெளிச்சமிட்டுக் காட்டிய நாள் 26.09.1987 அன்று ஆகும்.

- அது திலீப தீபம் அணைந்த நாள்.

- அகிம்சை வழி அறப்போராட்டத்தை காந்தியின் கண்ணாடியூடாகப் பார்த்துக் கொண்டிருந்த உலகம் திலீபனின் கண்ணாடியூடாக உணர்வெழுச்சியுடன் பார்க்கத் தொடங்கியதும் அன்றைய தினமே.

- சிங்களப் பேரினவாதம், இந்திய வல்லாதிக்க பலம், இரண்டினதும் கோர தாண்டவங்களுக்கு எதிராகப் போராடிய ஒரு ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்டு, ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்ட, சிறுபான்மை இனத்தின் மகத்தான மனோபலத்தை உலகம் புரிந்து கொள்ளத் தொடங்கியதும் அன்றைய நாளில் தான்.

★ ★ ★

பிறப்பின்போது, ஊரெழுவின்பார்த்திபனாய் அடையாளப்படுத்தப்பட்ட ஒருவன் உலகிற்கு திலீபனாக அடையாளப்படுத்தப்பட்டு, பிரமிப்புடன் உணரவைக்கப்பட்டு மூன்று தசாப்தம் ஆகிவிட்டது.

நல்லூர்க் கோயில் வீதிகளில் கால்கள் பதியும் வேளைகளில் அவன் விட்ட இறுதி மூச்சின் உணர்வலைகளின் உஷ்ணம் அற்ப சலுகைகளுக்காக தாம் ஆத்மாவையே அடிமைச்சாசனம் எழுதி ஒப்புக்கொடுத்தவர்களைத் தவிர மானுடம் பாடும் அனைவரையும் இன்றுவரையும் காக்கும் என்பதும் உண்மை. அது அவனது ஆறாத சுதந்திர தாகத்தை ஆத்மார்த்தமாக உணர்த்திக் கொண்டே இருக்கின்றது என்பதும் யதார்த்தமே.

இலங்கைத் தமிழர்களின் விடுதலை உணர்வின்அசைக்கமுடியாதஅடையாளம் திலீபன். ஆயுத வழிமூலம் மட்டும் அல்ல அகிம்சை வழியிலும் இறுதி வரை உறுதி குலையாது போராடுதல் என்ற வரலாற்று அடையாளமும் அவன்தான்.

அந்த மெல்லிய உடம்புக்குள், இவ்வளவு வைரநெஞ்சம், அனைத்துத் தடைகளையும் உடைத்தெறியும் நியாய முனைப்புடன் இயங்கிக் கொண்டிருந்ததை, யார் அறிவார்?

வாரிவிட நேரமின்றிக் கைவிரல்களால் கோதிவிடப்படும் தலைமுடியுடன், விடுதலை தேடும் விழிகளுடன், சுதந்திர வேட்கை பொங்க, ஓயாது இயங்கிக் கொண்டிருக்கும் அந்த உடல் நல்லூரில் அகிம்சையைப் போதித்த அந்தப் பன்னிரண்டு நாட்கள் மட்டுமே ஓய்வுடன் அமைதிகாத்து இருந்த கோலம் நினைவில் வருகிறது.

ஐந்து அம்சங்களைக் கொண்ட, மிக மிக நியாயமான, அதேசமயம் எளிமையான கோரிக்கைகளைத் தமிழ் மக்களின் சார்பில் இந்திய வல்லாதிக்க அரசின் முன்வைத்து ஒரு சொட்டு நீர்கூட அருந்தாது உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பிக்கத் துணிந்த போது அகிம்சைத் தத்துவத்தை மட்டுமல்ல காந்தீயக் கொள்கைகளையே கைவிட்டு சொல்லளவில் மட்டுமே காந்திதேசமாக முகம் காட்டும் நாடாக இந்தியா மாறி வெகு காலமாகிவிட்டதைத் திலீபன் உணர்ந்திருந்த போதிலும். அந்த வழியை தனது போராட்ட வடிவமாகத் தேர்ந்தெடுத்தான் என்பது வியப்பான விடயமே!

இந்தியப்படை அமைதிகாக்கவெனக் கூறிக்கொண்டு, தமிழர் பிரதேசங்களில் முகாம்கள் அமைத்து, ஆயிரக்கணக்கான ஆயுத பாணிகளாக நிலை கொண்ட போது யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் குடிகொண்டிருந்த படையினரை வெளியேவராதவாறு அறவழிப் போராட்டம் நடத்திய மக்கள் மத்தியில் அவன் ஆற்றிய வரலாற்றுப் புகழ்மிக்க உரையில், இந்தியப்படை ஒரு ஆக்கிரமிப்புப் படை என்பதைத் தெளிவாகவே உணர்த்தியிருந்தான்.

ஆனாலும் இந்தியாவின் ஆபத்பாந்தவர்களாகவும், இந்தியப் படையினரை அனாதரட்சகப் பணியாளராகவும் நம்பியிருந்த பெரும்பாலான எமது மக்களின் எதிர்பார்ப்புக்கள் அர்த்தமற்ற கனவுகள் தான் என்பதை உணர்த்த அவன் ஒரு தியாக வேள்வியில் தன்னையே ஆகுதியாக்கத் துணிவதைத் தவிர மாற்று வழி அவனுக்குத் தென்படவில்லை.

★ ★ ★

உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க முடிவெடுத்ததினம் திலீபனுடன் பேசிக் கொண்டிருந்த போது.

"என்னடாப்பா இப்படியொரு முடிவெடுத்திட்டாய். இதனால ஏதும் பிரயோசனம் இருக்கும் என்டு நினைக்கிறியா?"

"ஏன் அண்ண அப்படிக்கேக்கிறியள். நான் அகிம்சை வழியில் நியாயமான கோரிக்கைகளை வைத்துத்தான் போராடப் போகிறேன். காந்தியைப் போற்றும் இந்தியா இதனைப் புரிந்துகொள்ளாதா?"

"காந்திமட்டும் இந்தியாவின் முகம் அல்ல அதற்கு காந்தியைக் கொன்ற கோட்சேயின் முகமும் இருக்கிறது என்பது உனக்குத் தெரியாதா?"

- மௌனமாக இருக்கிறான்.

- சிலகணங்கள் கழிய,

"அப்படியெண்டா அண்ணை என்ர போராட்டத்தின் நியாயத்தன்மையை இந்தியா புரிந்துகொள்ளாது உதாசீனம் செய்தால்... நான் இறக்க நேர்ந்தால் இந்தியாவின் சுயரூபத்தை எங்கட சனம் புரிந்து கொள்ளுமல்லவா? நான் அதிர்ந்து போனேன் பின்னர் சுதாகரித்துக் கொண்டு சொன்னேன்.

"உன்னை நீயே அழித்துக்கொள்வதன் மூலம் தான் இந்தியாவின் சுய ரூபத்தை எங்கடை சனத்துக்கு உணர்த்த முடியும் என நீ நினைத்தால் அதில் உண்மையுள்ளதை நான் மறுக்கவில்லை"

"இந்தியா புரிந்து கொண்டாலும் சரி புரிந்துகொள்ளா விட்டாலும் சரி எங்கடை மக்களுக்கு எதோ பலன் கிடைக்கதானே போகுதண்ணை...."

நான் மௌனமானேன்,

கடைசியில் அவன் சொன்னதுதான் நடந்தது. அவன் தன் போராட்டத்தில் வெற்றி தான் பெற்றான். எமது மக்களிடம் இந்தியா மீதிருந்த மாயை அவன் மூலம் அகன்றது.

ஆகாசவாணியை அண்ணார்ந்து கேட்கும் அவலம் நீங்கியது. அதற்கு நாம் கொடுத்த ஈடிணையற்ற விலை, திலீபனின் உயிர்.

பொய்மையும் சூழச்சியும் சுய நலமும் மிக்க ஈழத்தமிழர்களை, நிவாரணத்திற்கும் சலுகைகளுக்கும் விலை போக வைத்து ஏமாளிகளாக்கி, இலங்கையை தனது கொட்டைப் பெட்டிக்குள் அடைத்து வைக்க நினைத்த இந்திய மேலாதிக்க இராஜ தந்திர மூலோபாயத்தை, வெறும் பன்னிரண்டு நாள் உண்ணா நோன்பால் திலீபன் தன் மரணப்பதிவின் மூலம் தகர்த்தெறிந்தான்.

அவனது அகிம்சை மனோபலத்தின் வலிமை அர்த்தமுள்ளதாகியது.

★ ★ ★

அவனிடம் இருந்த சுதந்திர தாகம் அவனை எப்போதும் ஒரு வேகத்துடனேயே இயங்க வைக்கும் தன்மையை ஏற்படுத்தியிருந்தது. அவனை அறிந்தோர் அதனையும் அறிவர்.

அவனது பன்முக ஆற்றல் வியக்க வைக்கும்தன்மை கொண்டது. தான் சார்ந்த இயக்கத்தின் தலைமைக்கும், இலட்சியத்திற்கும் கட்டுப்பட்டு இயங்கும் ஒரு செயல் பணியாளனாக அவன் தன்னை, முழுமையாக உருவாக்கிக்கொண்டான்.

கனவு மெய்ப்பட அவன் கடுமையாக உழைத்தான்.

அவன் எப்போது ஓய்வுகொள்கிறான் என்பது யாரும் அறியாத விடயம்.

கடும் வேலைப்பழுவின் களைப்பில் எப்போதாவது சோர்வு ஏற்படும் போது அவன் கேட்பான் "அண்ணை ராணி கொமிக்ஸ் இருந்தா தாங்கோ. பழசெண்டாலும் பறவாயில்லை"

கொடுப்பன்.

கணத்தில் அவன் முழுமையாக அதில் லயித்து விடுவான், படித்து முடிய அவன் மீண்டும் உற்சாகமாகிவிடுவான். அவனுக்குள் இருக்கும் பார்த்திபனை, ஒரு குழந்தை உள்ளம் கொண்டவனை..... அது துல்லியமாக இனம் காட்டிவிடும்.

பஷன் பழக்கோடியல் பானங்கள் கண்டோஸ் சொக்கிலேட் வகைகள் அவனுக்குப் பிடிக்கும்.

அதுவும் அவனது குழந்தை உள்ளத்தின் அடையாளம் தான்.

வேகமாக வாசிப்பான். வேகமாக எழுதுவான், வேகமாக தங்கு தடங்கலின்றிப் பேசுவான். எல்லாவற்றையும் விட அதிவேகமாகச் செயற்படுவான். அதாவது சிந்திக்கும் வேகத்தில் செயற்படும் ஆர்வம் கொண்டவனாக இருப்பான்.

செயற்பாடுகளில் தாமதம் செய்வதோ குறித்த வேலையை உரிய நேரத்தில் செய்யத்தவறுவதோ அவனுக்குச்சினத்தை ஏற்படுத்தும். அதனை வெளிப்படையாகவே காட்டிவிடுவான்.

அது திலீப இயல்பு மக்களை அமைப்பு ரீதியாக அணிதிரட்டி செயற்படவைப்பதில் அவனுக்கு நிகர் அவனே.

★ ★ ★

தீபத்தை எரிக்கத் தடை போடலாம்,

தியாகத்தை நினைக்க, மதிக்க, வணங்க எவராலும் தடை போட முடியுமா?

வரலாற்றுச் சின்னங்கள் இடித்து நொருக்கப்படலாம். வரலாற்றைச் சுமக்கும் மக்கள் அவற்றை அடுத்த தலை முறைகளுக்கு கடத்திச் செல்வார்கள்.

கற்களை விடவும் சொற்கள் வலிமையானவை. திலீபன் யாழ். கோட்டைக்கு முன்நின்று ஆற்றிய உரையை ஒருமுறை தனிமையில் கேட்டுப் பாருங்கள் அந்த உண்மை புரியும்.

அப்போது திலீப ஜோதி உங்களுடன் சுடர் விடுவதை புரிந்துகொள்ள முடியும்.

அது உங்கள் எதிர்காலத் தலைமுறைக்கு வழிகாட்டும்.

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## அவசர அலைபேசிகள் ஆபத்தைப் போக்குமா?

அசாதாரண சூழ்நிலைகள் ஏற்படும் போதோ அல்லது குற்றச் செயல்கள் அதிகரிக்கும் போதோ தமக்கு உடனடியாக அறிவிக்கும்படி பொலிஸார் அறிவிப்பதுண்டு. ஆனால் அந்த அறிவிப்புக்கள் வெறும் வாய்ப்பந்தலாகவே இருக்கும். ஏனெனில் பொலிஸார் சொன்னது போல ஏதேனும் அசம்பாவிதங்கள் நிகழும் போது, அவர்களின் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்த அவசர இலக்கங்களை தொடர்பு கொண்டால், "மே கௌத கதகரண்ணே ? மொஹத பிரஷ்ன ?" (யார் கதைக்கிறது ? என்ன பிரச்சினை ?) என்று தனிச் சிங்களத்தில் ஆவர்த்தனம் வாசிக்க, தொடர்பை எடுத்தவர் தனித்தமிழ் மட்டுமே தெரிந்தவராக இருந்தால் விழி பிதுங்கி, சொல்ல வந்த விடயத்தைச் சொல்ல முடியாமலே தொலைபேசியை வைத்து விடுவார். பெரும்பாலானோர் இப்படி "தனக்கெடாச் சிங்களத்தில்" கதைத்து பிடரிக்கு சேதத்தை வலிந்து உண்டாக்குவானேன்? என்று என்ன அசம்பாவிதம் நேர்ந்தாலும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்துவதே இல்லை. கண்ணெதிரே நடக்கும் அசம்பாவிதத்தை விடவும், அதை தமிழில் சொல்லிப் பொலிஸாருக்கு புரிய வைப்பதென்பதே பெரும் துன்பமாக இருந்தது.

இப்போது அந்தத் துன்பத்தில் இருந்து விடுவிப்பதைப் போல ஒரு அறிவிப்பு வந்துள்ளது.யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் 0766 224949 மற்றும் 0766 226363 ஆகிய அலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொள்வதன் மூலம் தமிழில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. உண்மையிலேயே இது வரவேற்கப்பட வேண்டிய விடயமே. இனிமேல் சிங்களம் தெரியாதவர்களும் தங்களுக்கு ஏதும் இன்னல்கள் நேர்ந்தால் அது குறித்து தயக்கமின்றி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தும் நிலை உருவாகியுள்ளது.

ஆனால் வெறுமனே தொலைபேசி இலக்கங்களை அறிவித்து விட்டு, பழையபடி தனிச் சிங்களத்தில் பதிலளித்தல் அல்லது அவை இயங்கா நிலையில் இருத்தல் என்பவை நிகழாமல் பார்க்க வேண்டும். பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு செய்யலாம் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யச் சென்றால் அங்கு தமிழ் தெரிந்த பொலிஸாரைக் காண்பது அரிதே. எனவே பெரும்பாலான சமயங்களில் தமக்குத் தெரிந்த அரைகுறைச் சிங்களத்தில் முறைப்பாட்டைச் சொல்ல, தமிழ் தெரியாத அந்தப் பொலிஸாரும் தான் விளங்கிக் கொண்டதை பதிவு செய்ய குருடர்கள் யானை பார்த்த கதையாக அந்த முறைப்பாடு ஒரு கோணத்துக்கு போயிருக்கும். அப்படியல்லாதவிடத்து தமிழ்ப்பொலிசார் வரும்வரை முறைப்பாட்டை பதிவு செய்ய பொலிஸ் நிலையங்களில் தூங்க வேண்டும். அப்படி காத்திருந்து முறைப்பாட்டை பதிவு செய்வதற்குள் ஒருநாள் வீணாகிப் போய்விடும்.

அதுபோன்ற அவலத்தை அவசர அலைபேசி இலக்கங்களும் தந்துவிடக்கூடாது. உண்மையாகவே அறிவித்தபடி இந்த அவசர அலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் தமிழில் முறையிட்டு, உடனடியாகத் தீர்வை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமானால் வடக்கில் இடம் பெறும் பல குற்றச்செயல்களைக் கட்டுப் படுத்தக் கூடிய சூழல் உருவாகும்.

●●●

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



## ~~ராம்குமார்~~ தற்கொலை உண்மை

"நீதி செத்து விட்டதோ என்றுதான் நினைக்கத் தோன்றுகின்றது. ஒரு வழக்கு தற்கொலை செய்து கொண்டது"

இரத்தின சுருக்கமாக ராம்குமார் மரணம் பற்றி சொல்கிறார் ஒருவர். அப்படித்தான் நமக்கும் நினைக்கத் தோன்றுகின்றது. வழக்குகள் ஜோடிக்கப்படுவதும், நிரபராதியை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதும், சிறைத்தண்டனையோ அல்லது மரண தண்டனையோ அனுபவிப்பதும் நமக்கு புதுக்கதைகள் அல்ல. நம்மைச் சுற்றி நாளுக்கு நாள் எங்கோ ஒரு மூலையில் இப்படியான நிகழ்வுகள் சம்பவித்த வண்ணமாகவே இருக்கின்றன.

சென்னையைச் சேர்ந்த பெண் மென் பொறியாளர் சுவாதி, நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் கடந்த ஜூன் 24-ஆம் திகதி காலை மர்மநபரால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கொலையாளியை பொலிசார் தேடி வந்த நிலையில், நெல்லை மாவட்டம் மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரியான ராம்குமார் என்பவரை பொலிசார் கைது செய்து புழல் சிறையில் அடைத்து இருந்தனர். இதுதான் இந்த குறுநாவலில் முதல் வந்த திகிலூட்டும் சம்பவம்.

தமிழ் நாடே அல்லோகல்லோலப்பட்டது. ஒரு இளம் பெண் இப்படி அநியாயமாக கொல்லப்பட்டு விட்டாளே என்று சுவாதி மீதான அனுதாப அலை தமிழ் நாடெங்கும் அடித்தது. பத்திரிகைகள். சஞ்சிகைகள் எல்லாவற்றிற்கும் நல்ல தீனி கிடைத்து விட்டது.

ஆளுக்கு ஆள் ஒவ்வொரு கோணத்தில் இந்தக் கொலைச் சம்பவத்தை பக்கம் பக்கமாக எழுதினார்கள்.

ஆரம்பம் முதலே சுவாதி கொலை வழக்கு பல்வேறு சர்ச்சைகளை கிளப்பியது. இடையில், வெளிநாட்டில் வசிக்கும் தமிழச்சி என்பவர் அவ்வப்போது ஃபேஸ்புக்கில் பல்வேறு தகவல்களை வெளியிட்டு மேலும் சர்ச்சையைக் கிளப்பினார். இந்த கொலை வழக்கு குறித்து தகவல்களை வெளியிட்டு வந்த மகேந்திரன் திலீபன் என்பவர், சிறைக்குள் கடுமையாக தக்கப்பட்ட சம்பவமும் நடந்தது.

ஜூலை 1, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மீனாட்சிபுரத்தில் ராம்குமார் (22) என்ற இளைஞனை, சுவாதி வழக்கு தொடர்பாக பொலிசார் கைது செய்தனர். அப்போது, தற்கொலை செய்து கொள்வதற்காக ராம்குமார் தன் கழுத்தை அறுத்து தற்கொலை செய்துக் கொள்ள முயன்றதாக பொலிசார் கூறினர். உடனடியாக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். இது பொலிஸ் தரப்பில் வந்த செய்தி.

"இந்த வழக்கின் விசாரணையின் போது பல உண்மைகள் வெளியே வரும் என்பதால் ராம்குமாரைபேசவிடாமல்செய்யஆரம்பத்திலேயே அவரின் கழுத்தை அறுத்தார்கள். அதில் அவர் பிழைத்துக் கொண்டார்" இது பலரும் ஒரு ஊகமாக பேசிக்கொண்ட விடயம்

இந்த சூழலில், புழல் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த ராம்குமாரை ஜாமீனில் எடுக்க அவரது வழக்கறிஞரான ராம்ராஜ் நடவடிக்கை எடுத்து வந்தார். ஜாமீன் மனு மீதான விசாரணை வர இருந்த நிலையில், ராம்குமார் மர்மமான முறையில் புழல் சிறையில் மரணம் அடைந்துள்ளார்.

இந்தக் குறுநாவல் நெடுங்கதையாக நீள வழியில்லாது சிறு கதையாகவே முடிந்து விட்டது. மரணம் முடித்து வைத்து விட்டது

ராம்குமார் தற்கொலை செய்து கொண்டார் என்கின்றன செய்திகள். கடந்த ஞாயிறன்று சமையல் அறையில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்த மின் கம்பியைக் கடித்து மின்சாரத்தை உடலில் பாய்ச்சிக் கொண்டு ராம்குமார் தற்கொலை செய்து கொண்டதாக சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், உண்மையில் நடந்தது என்ன என்பது பற்றி பல்வேறு தகவல்கள் உலா வருகின்றன.

மின்சாரம் சிறைக்குள் எப்படி வரும் என்று கொதிக்கிறார் ராம்குமாருக்காக வழக்காடும் வழக்கறிஞர் ராம்ராஜ். மின் கம்பியைத் தொட்டால் ஆளைத் தூக்கி வீசுமே ஒழிய கொல்லாது என்கிறார் ராம்ராஜ்.

"அடிக்கடி அவரைச் சந்தித்த எனக்கு அவர் மனநிலை நன்றாகத் தெரியும். தான் நிரபராதியாக வெளியே வருவேன் என்று நம்பிக்கையோடு என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தவர் எப்படி தற்கொலை செய்வார்" என்று தர்க்கரீதியாக கேட்கிறார் இவர்.

"தான் எந்த நாளுமே பார்த்திராத சுவாதியை என் காதலியாக ஜோடித்து என்னை செய்யாத குற்றத்திற்காக இங்கே கொண்டுவந்து அடைத்து விட்டதாக என்னிடம் சொல்லி மனம் குமுறியிருக்கிறார் ராம்குமார்" என்கிறார் வழக்கறிஞர்.

சுவாதி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராம்குமாரின் மரணம் குறித்து தமிழ்நாடு மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை நடத்துகிறது. பத்திரிகையில் வந்த செய்தியின் அடிப்படையில் விசாரணை நடத்தும் மனித உரிமை ஆணையம், 2 வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய ஏடிஜிபிக்கு உத்தரவிட்டுள்ளது.

மீனாட்சிபுரம்தான் ராம்குமார் பிறந்த கிராமம். இங்குள்ள அவனது தந்தையை பத்திரிகையாளர்கள் அணுகியபோது தான் நிரபராதி. சீக்கரம் வெளியே வருவேன் என்று கூறியிருந்ததாகக் கூறும் தந்தை இது ஒரு சதி. உண்மை வெளிவரும் வரை ஓய மாட்டேன் என்று ஆவேசத்தோடு கூறி இருக்கிறார்.

பாவம் ஓரிடம் பழி வேறிடம் என்று சொல்வதுண்டு. ஒரு இளைஞனை சுற்றி பின்னப்பட்ட வலை அவன் தலை உருளுமளவிற்கு மோசமாக உருமாறி இருக்கின்றது.

"பாதுகாப்பான சிறைக்குள் ஒருவனால் தற்கொலை செய்ய முடியுமா?. அதிகாரத்தின் கோரக்கரங்களை நினைத்தால் அச்சமாக இருக்கிறது. நாளை யாருக்கு வேண்டுமானாலும் இது நிகழலாம். அவர்தான் கொலையாளியா என்கிற தெல்லாம் இரண்டாம் பட்சம். சிறை பாதுகாப்பானது என்கிற பொய்யை எத்தனை நாள் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறோம்" என்று கவலையோடு கேட்கிறார் ஒருவர்.

சுவாதி கொலை வழக்கில் கைதான ராம்குமார் விவகாரத்தில் கடைசி வரை பல கேள்விகளுக்கு விடையே கிடைக்காமல் போய்விட்டது. ராம்குமாரைப் போலவே இந்த வழக்கும் மர்மமான முறையில் முடிவுக்கு வந்துள்ளது.

ராம்குமார் கைதானது முதலே இந்த வழக்கில் பல முரண்பாடுகளை அனைவரும் பார்த்தனர். ஆனால் கடைசி வரைக்கும் அதை விளக்க பொலிஸ் தரப்பு முயற்சிக்கவே இல்லை. இப்போது ராம்குமார் மரணத்தோடு அந்த சந்தேகங்களும் மர்மமாகவே போய் விட்டன.

சுவாதியை கொன்றதாகக் கைது செய்யப்பட்ட போது ராம்குமார் மீது எவருக்கும் குறிப்பாக அவர் சார்ந்த சமூகத்திற்கு கூட துளியும் கருணை இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இப்போது சிறையில் நிகழ்ந்த ராம் குமாரின் மர்ம மரணம் யாரையோ காப்பாற்ற ஒருவனை பிடித்துவந்து பலி கொடுத்துவிட்டார்கள் என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது. எது நிஜம் ?

ஒருவேளை இதன் உண்மைக்கதையை துணிச்சலான ஒருவர் ஒரு திரைப் படமாக ஐந்து வருடங்கள் கழித்து எடுத்து வெளியிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ராம்குமாரின் மரணத்தை சில தினங்களுக்கு முன் எதிர்பார்த்தீர்களா? இல்லையே.

எதுவும் எப்பொழுதும் நடக்கலாம்.



முனைவர் ஜெ.அரங்கராஜ் (ஜெகநாதன் அரங்கராஜ்) தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ளார். யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடந்த 30 வருடங்களுக் கும் மேலாக தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகிறார். கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் இளநிலை வேளாண்மைப் பட்டம் (B.Sc. Agriculture)பெற்றவர். அதன் பின்னர் தமிழார்வம் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை தமிழிலக்கியப் பட்டத்தையும் (B.A. Literature) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முதுகலை தமிழ் (M.Phill.) பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காகச் சிங்கப்பூர் தமிழ்ப் பாடநூல்கள் மதிப்பீட்டினை மேற்கொண்டார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்ட ஆய்விற்காக (Ph.D.) எடுத்துக் கொண்ட விடயம் கி.மு.5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கியம் காட்டும் அயலகத் தொடர்புகள் ஆகும். முனைவர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பதிப்புத் துறையில் சில வருடங்கள் பணியாற்றினார். பின்னர் திருவனந்தபுரத்தில் உள்ள பன்னாட்டு திராவிட மொழியியற் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்களிடம் ஆய்வுப்பணியாற்றினார்.

தனது முதற்பட்டத்தை விவசாயத் துறையில் பெற்றிருந்தாலும் தமிழார்வம் காரணமாக தமிழ்த் துறையில் பட்டப்படிப்பினையும் பட்டப் பிற்படிப்புக்களையும் ஆய்வுகளையும் மேற்கொண்டார். தனது வாழ்வினை தமிழுக்காகவும் தமிழாய்வுகளுக்காகவும் அர்ப்பணித்துள்ள அரங்கராஜன் தொல்காப்பியம் முதலான சங்க இலக்கியங்களை பாவலர் பாலசுந்தரம் அவர்களிடம் பாடங்கேட்டார். ஏறத்தாழ 5 வருடங்கள் பாவலர் பாலசுந்தரம் அவர்களது வீட்டுக்குச் சென்று சங்க இலக்கியங்களை மரபுவழியில் பாடங்கேட்டார். அதேநேரம் தஞ்சாவூர்ப் பல்கலைக்கழக வெளியீடான வாழ்வியற் களஞ்சிய ஆசிரியர் ந.பாலுச்சாமியிடம் பாடங்கேட்டுத் தனது தமிழறிவை மேலும் வளர்த்துக் கொண்டார்.

தமிழ் இலக்கண இலக்கிய மேற்கோள் அடைவு என்ற ஆய்விற்காக செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் மேல் முனைவர் பட்டத்தைப் (Post Doctorate) பெற்றுக்கொண்டார். இதன் தொடர்ச்சியாகவே இந் நிறுவனத்தில் ஆய்வாளராக அண்மைக் காலம் வரை பணிபுரிந்தார்.

சுவாமி விபுலானந்தர் பேச்சும் எழுத்தும், சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுக் கட்டுரைகள் ஆகிய இரு நூல்களின் ஆசிரியர். இவர் பன்னாட்டுத் தமிழிதழ்களில பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளதுடன் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் கருத்துரைகளையும் வழங்கியுள்ளார். தனது முனைவர் பட்ட ஆய்வான "சங்க இலக்கியம் காட்டும் அயலகத் தொடர்புகள்" என்பதனை நூலாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

# தமிழர் மரபில் உண்ணாநிலை

முனைவர் ஜெ.அரங்கராஜ்



தம்மைப்பாதிக்கும் நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றுவது அனைத்து உயிர்களின் இயல்பாகும். இது, மென் முறையாகவும், வன்முறையாகவும் சூழலுக்கு ஏற்ப அமையலாம். அவ்வடிப் படையில் தனிமனிதனோ, இனமோ நெருக்குதலுக்கு உட்படுங்கால் மனிதர்கள் அதற்கெதிரான போராட்ட நிலைகளை எடுத்தல் என்பது இயல்பானதாகின்றன. போராட்ட முறைமைகளில் பலவகைகள் உண்டு. அவற்றில் தம்மைத் தாமே வருத்தி அதன்வழி சமுதாயத்தின் கவனத்தினைத் தமது கோரிக்கையின்பால் திருப்புதல் என்பது ஒருவகை ஆட்சி அதிகாரத்தின்முன் ஏதும் செய்ய வலுவற்ற நிலையில் உள்ளோர் தங்களைத் தாங்களே வருத்தும் அறம் மிகுந்த மறப் போராட்ட முறைமைகளைக் கைக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றில் மேற் கண்டதாய இருவகை போராட்ட முறைமையையும் காணவியலும். தம்மைத் தாமே வருத்திக்கொள்ளும் போராட்ட முறைமையில் மிகவும் வலுவுடையது உண்ணாநிலைப் போராட்டமாகும். உண்டிமுதற்றே உணவின்பிண்டம் (புறம்), உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (மணிமேகலை) என உணவின் தேவையைப் போற்றும் சமுதாயத்தில் ஒருமனிதன் தமக்குற்ற சிறுமைக்காக உண்ணேன் என உண்டி மறுத்து வீரச்சாவெய்தத் துணிந்தவிடத்து நாகரிகமுடைய அரசும், சமுதாயமும் அவன் உற்ற சிறுமையைக் களைந்து அவனைக் காக்காமல் இராது. காக்கத் தவறுவது நாகரிகமான சமுதாயத்திற்கு உகந்ததல்ல.

தமிழர் வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டு முன்பிருந்தே உண்ணாநிலைப் போராட்டம் பற்றிய செய்திகளை அறிவியலும் பழந்தமிழ் இலக்கியமான அகநானூற்றில் தமிழினத்தின் முதல் பெண் உண்ணாநிலையாளியைப் பதிவுசெய்கிறது.

**வாய்மொழித் தந்தையைக்**
**கண்களைந் தருளாது**
**ஊர்முதுகோசர் நவைத்த சிறுமையிற்**
**கலத்து முண்ணாள் வாலிது முடாஅள்**
**சினத்திற் கொண்ட படிவம் மாறாள்**
**மறங்கெழு தானைக்**
**கொற்றக் குறும்பியன்**
**செருவியல் நன்மான்**
**திதியற் குரைத்தவர்**
**இன்னுயிர் செகுப்பக் கண்டுனி மாறிய**
**அன்னி மிஞிலி போலமெய்ம் மலிந்து**
**(அகம்-262)**

எனும் அகப்பாடல்வழி,

கோசர்கள் என்போர் பழந்தமிழகத்தின் எல்லைப் பகுதியில் வந்து குடியேறிய அயலவர்கள். இவர்களது வயலில் அன்னி மிஞிலி என்னும் தமிழிச்சியின் தந்தையினுடைய மாடு மேய்ந்துவிட்டது. இதற்காக அவர் வருத்தப்பட்டு மன்னிப்பும் கேட்டார். அருளில்லாத அக்கோசர்கள் அவரது கண்களைப் பறித்து கொடுமை செய்தனர். இக் கொடுஞ்செயலால் வெகுண்ட அன்னி மிஞிலி உணவு உண்ணாமல் உடை மாற்றாமல் கோபத்தோடு போராடினாள். இதனை அறிந்த அப்பகுதி தலைவனான திதியன் அக்கோசர்களைக் கொன்று தண்டித்தான். அன்னிமிஞிலி மகிழ்ந்தாள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அயலவர்களை எதிர்த்து ஒரு தமிழிச்சி உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றமையை அறியலாம்.

தமிழ் மன்னர்களும் தங்களது மானத்திற்கும் உரிமைக்கும் இழுக்கு ஏற்படும் சமயம் உண்டி துறந்து உண்ணாநிலை கொண்டு உயிர் நீத்தனர். இச் செயலை வடக்கிருத்தல் என அழைத்தனர்.

**செய்குவங் கொல்லோ**
**நல்வினை யெனவே**
**ஐய மறாஅர் கசடீண்டு காட்சி**
**நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே**
**யானை வேட்டுவன் யானையும் பெறுமை**
**குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே**
**அதனால் உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குக்**
**செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற் (புறம்-214)**

கோப்பெருஞ்சோழன்

எனும் புறப்பாட்டில் உண்ணாநிலையின் மாண்பு பற்றி கோப்பெருஞ்சோழன் எனும் சோழமன்னன் கூறுவதினை அறியலாம். கோப்பெருஞ்சோழன் தன் மகன்கள்பால் வெறுப்பு கொண்டு வடக்கிருத்தல் எனும் உண்ணாநிலையால் உயிர்துறந்தான். இவனுடன் இவனது நண்பர்களும் புலவர் பலரும் உயிர் துறந்தனர்.

போரிலே வீரச்சாவடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு சிறப்பும் மாட்சியும் செய்வதற்கு இணையாக வடக்கிருந்து உயிர்நீத்த மாண்புடையோருக்கும் நடுகல் எழுப்பி வழிபடுதல் பண்டைக்காலம் தொட்டு இன்றளவும் தொடரும் தமிழர் மரபாகும்.

**பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே**
**ஆடுநர்க் கீத்த பேரன் பினனே**
**அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே**
**திறவோர் புகழ்ந்த திண்ணன்பினனே**
**மகளிர் சாயல் மைந்தர்க்கு மைந்து**
**துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கில்**
**அனையா னென்னா தத்தக் கோனை**
**நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன்று**
**பைதல் ஒக்கற் றழீஇ யதனை**
**வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்**
**நனந்தலை யுலக மரந்தை தூங்கக்**
**கெடுவி னல்வினை சூடி**
**நடுக லாயினன் புரவல னெனவே.**
**(புறம்-221)**

(பொத்தியார்)

எனும் பொத்தியாரின் புறப்பாட்டில் வடக்கிருந்து உயிர்நீத்த கோப்பெருஞ் சோழனுக்கு நடுகல்நட்டு சிறப்பு செய்யப்பட்டிருந்தமையை அறியலாம்.


பெருஞ்சேரலாதன் எனும் சேரமன்னன் கரிகால்சோழனுடன் சோழநாடு வெண்ணி எனும் இடத்தில் பெரும்போர் செய்தான். இப்போரிலே கரிகாலன் எறிந்த வேல் அவன் மார்பைத் துளைத்து முதுகைக்கண்டது. சேரமான் போரில் தோல்வியுற்றான். கரிகாலன் புகழ்பெற்றான். முதுகிலேபட்ட புண்ணால் மனம்திரிந்த சேரமான் வருந்தி இனிவாழ்தல் புகழில்லை எனக்கொண்டு வடக்கிருந்து உண்ணாமல் உயிர்துறந்து பெரும்புகழ் பெற்றான் என்பதனைப் பின்வரும் கழாத்தலையார் பாடல் வழியறியலாம்.

**மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப**
**இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்பச்**
**சுரும்பார் தேறல் சுற்ற மறப்ப**
**உழவரோதை மறப்ப விழவும்**
**அகலு ளாங்கட் சீறூர் மறப்ப**
**உவவுத்தலை வந்த பெருநா ளமயத்**
**திருசுடர் தம்முனோக்கி யொருசுடர்**
**புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்**
**தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த**
**புறப்பண் ணாணி மறத்தகை மன்னன்**
**வாள்வடக் கிருந்தன னீங்கு**
**நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே**
**(புறம்-65)**

(கழாத்தலையார்)

எனும் பாடலில் வாள் வடக்கிருத்தல் வீரமிகு வடக்கிருத்தல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தகும். தமது தன்மானத்திற்கு இழுக்கு ஏற்படும் போதும் தமிழர்கள் வடக்கிருந்து உயிர்துறந்துள்ளனர். சேரமன்னன் கணைக்காலிரும்பொறை இவனது தலைநகர் தொண்டி. இது பிளினி முதலாய மேற்குநாட்டுப் பயணிகளால் டின்டிஸ் என அழைக்கப்பட்டது. சேரமான் கணைக்காலிரும்பொறை கழுமலம் என்னுமிடத்தில் செங்கணான் எனும் சோழனுடன் போர்செய்தான். போரில் கணைக்காலிரும்பொறையின் படைசிதைய அவன் கைது செய்யப்பட்டு செங்கணனால் சிறையில் அடைக்கப்பட்டான். நீர்வேட்கையால் நீர்வேண்டுமென கேட்ட அவனுக்கு காவலர் தாமதமாக நீர் கொடுத்த போது அதனை அருந்தாது பின்வரும் பாடலைப்பாடி உண்ணாதிருந்து உயிர்துறந்தான்.

( அடுத்த வாரம்...)



○ வர்சி

# மனிதம் தின்னும் வருமானம்

**யாழ்.** குடா நாட்டில் இன்று அனேகமானோர் நோயாளிகளாகி விட்டனர். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை வைத்தியசாலைகளில் கிளினிக்குகளிலும், விடுதிகளிலும் நாளாந்தம் நிற்பதனைக் காணமுடிகிறது. ஆனாலும் பெருமளவானர்களுக்கு அரச வைத்தியசாலைகளுக்கு செல்வதென்றாலே அலர்ஜிக். இதனால் நடப்பது என்ன? தனியார் வைத்தியசாலைகளை நோக்கி செல்லும் நிலை. யாழ்ப்பாணத்தில் போகிற போக்கைப் பார்த்தால் வீட்டுக்கு வீடு தனியார் வைத்தியசாலைகள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

முன்னொரு காலத்தில் யாழ். குடா நாட்டில் தனியார் கல்வி நிறுவனங்களே மாணவர்களைக் கவரும் விதமாக தமது விளம்பரங்களைப் பெரிய எழுத்துக்களில் எழுதி "எம்மிடம் இந்தப் பாடத்திற்கு இந்த ஆசிரியர் உள்ளார்" என விளம்பரம் போட்டு மாணவர்களை வரவழைத்தனர். ஆனால் இன்று அந்த நிலை மாறித் தனியார் வைத்தியசாலைகள் போட்டி போட்டுக்கொண்டு வைத்தியர்களின் பெயர்களையும், அவர்கள் எத்தனை மணிக்கு வருவார்கள் என்ற விளம்பரத்தையும் போட்டு நோயாளிகளை கவர்கின்றார்கள். அதிலும் அரச வைத்தியசாலைக்கு சென்று நேரத்தை வீணடிப்பதைனையும் விட இங்கு சென்றால் பத்து நிமிடமோ அல்லது இருபது நிமிடமோ வைத்தியர்களுடன் பேசிவிட்டுவந்தால்தான் அவர்களுக்கு (நோயாளிகளுக்கு) ஆறுதல் என்ற நிலைமை வந்துவிட்டது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் தனியார் மருத்துவ நிறுவனங்களும் அவர்களிடம் சுளையாக கறப்பதனை தமது தொழிலாக கொண்டு செயற்படுவதனை எவரும் மறுப்பதற்கில்லை.

அத்துடன் தனியார் வைத்தியசாலைகளில் மருத்துவரிடம் காட்டினால் அவர் மேலதிக பரிசோதனைகளுக்கு அவர்களை பெரிய ஆஸ்பத்திரிக்கே வரச் சொல்லிக் கடிதமும் கொடுத்துவிடுவார். அந்த கடிதத்தை கொண்டு போனால் அங்கு அவர்களுக்குத் தனிச்செல்வாக்கு என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அரசு, தனியார் வைத்தியசாலைகள் தொடர்பில் என்னதான் கட்டுப் பாடுகளைப் போட்டாலும் அவை அந்த கட்டுப்பாட்டிற்குள் செயற்படுகின்றனவா?

யாழ். குடாநாட்டில் பிரபல்யமான தனியார் வைத்தியசாலை ஒன்று உள்ளது. இங்கு யாழ். குடாநாட்டிலுள்ள பிரபல்யமான மருத்துவர்கள் வருவது வழக்கம். அண்மையில் இந்த வைத்தியசாலையில் தனது காலின் நீண்ட நாளாக ஏற்பட்ட புண் மாறாமல் இருந்ததற்காகப் பெண் ஒருவர் காட்டச் சென்றுள்ளார். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர் "உங்களுக்கு 'வெரிக்கோஸ்' எனும் நோய் தாக்கியுள்ளது. இதனை ஒப்பிரேசன் செய்வதனைவிடவும் லேசர் மூலம் செய்வது சுகம்" எனக் கூறியுள்ளதுடன் மறுநாள் அந்த வைத்தியசாலைக்கு வருமாறும் ஒரு நாளில் செல்லலா மெனவும் கூறியுள்ளார். அவரும் மறுநாள் செல்லவே முதலில் கட்டணமாக 10 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது. அவரும் அந்த தொகையை செலுத்திய பின்னர் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மருத்துவர் வந்தார். 'வெரிக் கோஸ்' இற்குரிய சிகிச்சையை மேற்கொண்டுவிட்டு சென்றுவிட்டார். நோயாளியும் சிகிச்சை முடிந்துவிட்டது தானே என்று முன் கவுண்டரில் வந்து சிகிச்சைக்கான கட்டணம் எவ்வளவு என்று கேட்ட வேளை அவர்கள் சொன்ன தொகையைக் கேட்டு அவருக்கு மயக்கமே வந்தது போலிருந்தது. காரணம் வைத்திய சிகிச்சையாக ஒரு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் செலுத்த வேண்டுமெனவும் அதில் முன்னர் செலுத்திய 10 ஆயிரத்தையும் கழித்து மிகுதி தொகையைச் செலுத்தி விட்டு செல்லுமாறும் கூறப்பட்டது.

இதில் என்ன கொடுமை என்றால் "யாழ். நகரிலுள்ள வங்கியில் பணத்தை" எடுத்துதருகிறேன் என்னோடு வந்தவர்கள் நிற்கட்டும் என்று நோயாளி கூறவும் அவர்கள் சம்மதிக்காததுதான். இறுதியில் அவருக்குத் துணையாக வந்த பெண்மணி தான் அணிந்திருந்த தாலியையும் சங்கிலியையும் பக்கத்தில் இருந்த வங்கியில் அடைவு வைத்து அந்தப் பணத்தை செலுத்திய பின்பே அவர்களை வெளியில் விட்டது அந்த வைத்தியசாலை நிர்வாகம்.

எப்படியிருக்கிறது தனியார் வைத்தியசாலைகளின் பகற்கொள்ளை. சரி இவ்வளவு பணம் செலவாகும் என்றால் நோயாளியை பரிசோதித்த மருத்துவர் அவருக்கு இதுபற்றியும் சொல்லியல்லவா? இருக்க வேண்டும். அப்படியென்றால் இவர்களின் நோக்கம் வருமானம் மட்டும்தானா? அந்தப் பெண் ஓரளவு வசதியானவர் என்றபடியால் அந்த பணத்தை செலுத்தினார். ஆனால் வேறொருவர் என்றால் அந்த பணத்தை எப்படி உடன் செலுத்தி முடிப்பது?.

தனியார் வைத்தியசாலைகளில் இயலாது என்றால் மருத்துவர்கள் சொல்லும் வசனம் என்ன? "பெரிய ஆஸ்பத்திரிக்கு வாருங்கள் அங்கே சகலவிதமான வசதிகளும் உள்ளன. எல்லாவற்றையும் அங்கு செய்யலாம்" என்பார்கள். சரி அப்படி என்றால் பிறகேன் அந்த நோயாளியை தனியார் வைத்தியசாலையில் இவ்வளவு காலமாக வைத்திருந்தார்கள் என்று கேட்டால் அதற்கு விடை கிடைக்காது. மேற்குறிப்பிட்ட விடயம் சிறிய ஒரு உதாரணமே. இதனைப் போல் இன்னும் எத்தனையோ இருக்கும் யாரறிவார்?

எனவே வருமானத்தை மட்டுமே பார்க்காமல் மனித நேயத்துடனும் கொஞ்சம் நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ●

# அலம்பல் ஆச்சி

அட தம்பியவை முசுப்பாத்தி தெரியுமோ? ஆச்சி வடக்கு கிழக்குக்கு ஒரு சுற்றுப்பயணம் போயிட்டு A9 பாதையாலை வந்திருக்கிறா. மாங்குளம் கிளிநொச்சியெல்லாம் நல்லிணக்க விளையாட்டுதான். மைதானத்திலை நடக்கிறது விளையாட்டெண்டா நல்லிணக்க விளையாட்டை என்னெண்டு சொல்லுறது? எங்கடை நல்லாட்சி அரசாங்கம் எல்லாத்தையும் வெளிப்படையாத்தான் சொல்லுது. ஆனா அதை விளங்கிக் கொள்ளாத மோட்டுத் தமிழர்களாய் நாங்கள் இருக்கிறம். எவ்வளவு தெளிவாய்.. அறுத்து அறுத்து நல்லிணக்க விளையாட்டு எண்டு மைதானத்துக்கு முன்னாலை போட்டிருக்கிறாங்கள். உந்த நல்லிணக்க செயல் திட்டமெல்லாம் வெறும் விளையாட்டு அளவிலைதான் எண்டு குறிப்பா சொல்ல வருகினை போலை கிடக்கு. விளையாட்டுப் போட்டியள் வைக்கிறதோடை விளையாட்டு நல்லிணக்கம் முடிஞ்சுபோடும். விளையாட்டளவிலைதான் உந்த இன நல்லிணக்கம். எதுக்கும் அவதானமா இருங்கோ.

ஆச்சிக்கு கனகாலமா எங்கடை தலைநகருக்கு போகோணுமெண்டு ஆசை. அப்புவும் கூட்டிக்கொண்டு போகேல்லை. பின்ன நானே தனிய வெளிக்கிட்டுட்டன். தலைநகரம் நல்லவடிவாதான் இருக்கிது. அமைதியாவும் இருக்கிது. அந்த அமைதிக்குள்ளை எத்தினை கனவுகள் உறங்கிக் கிடக்கெண்டு அந்தக் காடுகளுக்குதான் தெரியும். ஒரு நாளைக்கு காடுகள் நகரும் தானே. அப்பேக்கை எங்கடை புளியும் பூக்கும். ஆனா இண்டைக்கு கன்னியா வெந்நீருற்றுக்கு புத்த பெருமான் அருள் வழங்கிக் கொண்டிருக்கிறார். எங்களுக்கு ஒரு மண்ணாங்கட்டியும் விளங்காது தானே. விளங்கியிருந்தா இண்டைக்கு சொந்த நாட்டிலை இருந்திருப்பம். யாழ்ப்பாணமெண்டா பெரிய கொம்பர்களெண்டு நினைக்கிற ஆக்களெல்லாம் ஒருக்கா கிணத்தைவிட்டு வெளியிலை போட்டு வா றது நல்லம். அப்பிடியே கிழக்குக்கும் போயிற்றுதான் வந்தனான். பாயோடை ஒட்டிப் போடுவியள் எண்டுதான் கிழக்குக்கு போகேக்கை சொல்லுவினம். செய்வினை சூனியம் செய்வாங்களெண்டும் பயப்பிடுத்துவினை. அட தம்பியவை. கிழக்குமக்கள்செய்யிறசெய்வினை என்னெண்டு தெரியுமோ? அதுகளின்ரை சாப்பாடும், மனசார செய்யிற உபசரிப்பும் தான். வடக்கு கிழக்குக் கிடையிலை ஒரு கண்ணுக்கு தெரியாத மனக்கசப்பு இருக்குதெண்டு ஆச்சியின்ரை ஏழாம் அறிவுக்குபடுகுது. ஒரு பெடிச்சி சொல்லிச்சிது. அவவின்ர அண்ணா கட்டினது யாழ்ப்பாணத்து பெட்டையையாம். கன காலமாச்சுதாம். இப்பயும் யாழ்ப்பாணத்து பொம்பிளை வீட்டுக்காரர், மாப்பிளை வீட்டாரோடை கொண்டாட்டம் இல்லையாம். காரணமென்னெண்டு பார்த்தா மட்டக்களப்பிலை யாழ்ப்பாணத்தார் கலியாணம் கட்டுறது குறைவாம். அப்ப நான் சொன்னனான். மட்டக்களப்பிலை கலியாணம் முடிச்சதாலைதான் கணபதிப்பிள்ளை காதலியாற்றுப்படை எழுதினவர் எண்டு. என்னவோ என்ரைபேரன் பேர்த்தியளுக்கெண்டாலும் அங்கனேக்கை பாத்துகீத்து கட்டி வைப்பம். யாழ்ப்பாணத்தை விட்டு வெளியிலை போகேக்கைதான் இழப்பின்ரை ஆழமும் விளங்குதடாப்பா. இழப்புக்களை மறந்துபோட்டு விழாக்களிலை இளிக்கிற அளவுக்கு வந்திட்டம் நாங்கள்.



○ செல்வி

அகிம்சையை கொள்கையிலை மட்டும் கொண்ட நாட்டுக்கெதிரா அகிம்சையை செயல்லை காட்டின பெடியன் திலீபன்ரை நினைவுக்காலம் இது. இது நினைவுக்காலமெண்டா மற்ற நாட்களிலை மறந்திடுவியளோ எண்டு கேட்காதேங்கோ. வருசம் முழுத்து நாளும் கோவில்லை பூசை ஆக்கிறதுக்கும் திருவிழாக்கும் வித்தியாசம் இருக்குத்தானே. எங்கடை நாட்டுக்காக கந்தகங்களாகிப்போன பெடி பெட்டையளை நாங்கள் நினைக்காமை வேறை ஆர் நினைப்பான்? அடையாள உண்ணாவிரதமெண்டு பேய்க்காட்டி நாடகம் போடுற இந்தக் காலத்திலை இருக்கிற ஆக்களுக்குஉண்ணாவிரதம் இருந்த அந்தப் பெடியின்ரை ஓர்மம் விளங்குமோ? கலைகளும் இலக்கியங்களும் கொண்டாடடப்பட வேண்டிய வைதான். ஆனா அதுக்கெண்டொரு நேரம் காலம் வேணும். கொல்லர் தெருவிலை ஊசிவித்தாலும் பரவாயில்லை. உடுப்புவிக்க வந்தா வில்படாது எண்டு காட்டுற அளவுக்கு எங்களிட்டை பலம் இல்லை. ஏனெண்டா உடுப்பு குறைவா இருக்கிற எங்களிட்டை உடுப்புவிக்க வாறேக்கை.. உடுப்பை வாங்கத்தான் பாப்பம். அது எந்த தியாகத்தின்ரை நாளெண்டாலும் சரி. ஏது எப்பிடியோ.. இரவல் சீலைகட்டினாலும் கொய்யகம் சொந்தமா இருந்தா சரிதான். என்னதான் புதுசு புதுசா உடுப்புகளை வேண்டிக் குவிச்சாலும் எங்களுக்கு சீலம்பாய் கட்டுறதான் மிஞ்சப்போகுது. சீலை வாங்கிறது பெரிய விசயமில்லை. சீலையளை பாக்கிறதும் பெரியகாரியமில்லை. அதை எங்கடை பண்பாட்டுக்கேற்ற போலையும் வெக்கைக்கு ஏற்ற போலையும் தான் கட்ட வேணும் என்டதை மறக்காட்டி சரிதான். அதை விட்டுட்டு அன்ன நடை நடக்கப் போய் காகம் தன்ரை நடையையும் மறந்தகதையாத்தான் முடியும். ஆனா உடுப்புக்களை பாக்கேக்கையும் இந்த நினைவுகளோடையும் தான் எங்கடை பெடி பெட்டையள் பாக்குங்கள் என்ட நம்பிக்கை இருக்குது. பாப்பம். நானும் போட்டுவாறன். ●




உமா சந்தோஷ்

# 'மைனர் மயிலன்'

மயிலிட்டி கேஸிலை இருந்து வந்த பிறகு ஒரு மாத ஓய்விலை நல்லா ஊரைச் சுத்தினான் மைனர். கீரிமலைக் குளியலும், கூவில் கள்ளும் ஆளை நல்லாத் உருண்டு திரளப் பண்ணிப் போட்டுது. சங்குவேலி லோயற்றை மனுசிதான் ஒருநாள் கோவிலிலை மைனரைக் கண்டுட்டு இங்கிலீஸ் தெரிஞ்ச ஓராளுக்குத் தங்கடை ஓபிசிலை வேலை இருக்கெண்டுட்டு வரச் சொன்னா.

வேலைக்குப்போன மைனரை லோயற்றை மனுசிக்கு நல்லாப் பிடிச்சுப் போச்சுது. மைனருக்கும் இது ஒரு சான்ஸ்ஸாப்போக, வேலைக்கு ஓமெண்டிட்டான். லோயற்றை கோர்ட்கேஸ் எல்லாத்தையும் பைல் பண்ணுறதும், ஆர் வருகினம், போயினம் எண்டு வந்தவையின்ரை விபரத்தை குறிச்சு வைக்கிறதுந்தான் மைனற்றை வேலை. லோயர் வீட்டை நிக்கிறது குறைவு. கோடுகளும் கேசுகளும் எண்டு ஒரே அலைச்சல். லோயர் வீட்டிலை நிக்கிற நேரமெல்லாம் மைனர் வலு "லோயலா" இருப்பன். மற்ற நேரமெல்லாம் புட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான்ரை வேலை தான் மைனருக்கு. கொஞ்ச நேரம் வேலை செய்வான். நேரத்துக்குச் சாப்பிட்டிடு வான். அதுக்குமேலை நல்லா நீட்டி நிமிந்து லோயர் வீட்டு செற்றியிலை நித்திரை. லோயற்றை மனுசிக்கு ஒண்டும் சொல்லேலாமைப் போச்சு. ஏனெண்டால் லோயற்றை பெலயீனத்தை அறிஞ்சு தன்ரை கெட்டித்தனத்தாலை அவவின்ரை வாயை வடிவாக் கட்டிப்போட்டான். லோயர் இல்லாத நேரத்தி மைனர் தானே வீட்டுக்கும் காவல். அந்த இடுக்கிலை தன்ர மேன் லோயருக்குப் படிக்கப்போறான் எண்டு ஊரெல்லாம் அரியகுட்டியற்றை பீத்தல் வேறை. லோயருக்கு மைனற்றை போக்கிலை சாதுவான ஐமிச்சம் தொட்டிட்டுது. தேவையில்லாமல் மனுசியோடையும் கொளுவப்பிடாது. அவர் லோயர் எல்லே? சான்ஸ்ஸுக்காகப் பாத்துக் கொண்டிருந்தார் அவர்.

ஒரு நாள் லோயர் கொழும்புக்குப் போன நேரம், அவற்றை வீட்டு முத்தத்திலை நிண்ட சைக்கிளைக் காணேல்லை. அந்தண்டு மைனரிட்டைத்தான் அவன்ரை கூட்டாளியள் வந்து போனதைக் கண்டதா தோட்டவேலை செய்யிற ஆள் சொன்னார். முந்தியும் லோயர் மைனற்றை கூட்டுச் சரியில்லையெண்டு இரண்டு, மூண்டு தரம் சத்தம் போட்டவர். லோயருக்கும் மைனற்றை தவறணைக் கூட்டம் வீட்டுக்கு வாறது அவ்வளவு விருப்பமா இல்லை. கொழும்பாலை வந்த உடனை சைக்கிள் கதையை ஊதிப்பெருப்பிச்சுப் போட்டார் லோயர். லோயற்றை அதிரடியை மைனராலை தாங்கேலாமைப் போக விற்றோ பண்ணத் தொடங்கீட்டான். மைனரை வேலையாலை தூக்கிறது லோயற்றை மனிசிக்கு விருப்பமில்லைத்தான், என்னெண்டு வாய்திறந்து வெளிப்படையாச் சொல்லிறது? மற்ற நாள் லோயர் கோட்டுக்குப் போன பிறகு போய் லோயற்றை மனுசியைக் கட்டிப்பிடிக்காத குறையா அழுது குளறி முந்நூறு ரூபா காசும் வாங்கிக் கொண்டு போனவனாம். அண்டு பின்னேரம் றெயில்வே ஸ்ரேஷனிலை கொழும்பு மெயில் றெயினுக்கு மைனர் நிண்டதை லோயரிட்டை ஆரோ வந்து சொல்ல, அண்டைக்குத்தான் கன நாளுக்குப் பிறகு லோயர் நிம்மதியா நித்திரை கொண்டவர். ஆனால் மனிசிதான் மண்டை இடிக்குதெண்டு பனடோல் போட்டிட்டுப் படுத்தவா.

அரிய குட்டியருக்கு மைனர் கொழும்பிலை ஐஞ்சாம் குறுக்குத் தெருவிலை சீனிக்கடையிலை நிண்டு மூட்டைக்குத் தடிபிடிக்கிறதா மெசேஜ் வந்தது. அது மட்டுமில்லை, மைனருக்கு இப்ப நேரம் காலமில்லாமல் வேலை. யாழ்ப்பாணத்திலை இருந்து கொழும்புக்கு வாற முதலாளியின்ரை சொந்த பந்தங்களை எல்லாம் ஊர் சுற்றிக் காட்டுறது, அவைக்கு தண்ணி வெந்நி வேண்டிக் குடுக்கிறது. சிங்களம் தெரியாத முதலாளிமாரோடை சாமான் வாங்கப் போறது. மைனருக்கு வாசி கூட. அடிக்கடி உடுப்புத் தைக்கிறதும், சென்ருப் போத்தல் வாங்கிறதும், அதை அடிச்சுக் கொண்டு கோல்பேஸ் போறதும், மைனர் ஒரே குசி.

உப்பிடித்தான் ஒரு முதலாளி யாழ்ப்பாணத்திலை இருந்து பெற்றோல் செட் விசியமா மினிஸ்ரர் ஒருவரைக் கண்டு கதைக்க வந்தவர். இவன்ரை கடை முதலாளி அவரை மைனரோடை சேத்துவிட்டுட்டார். மைனர் அந்த முதலாளியை கூட்டிக்கொண்டு ரான்சிலேற்றர் வேலை பாக்க மினிஸ்ரர் வீட்டை போனவன். போகேக்கை வலு எடுப்பா வெளிக்கிட்டுக் கொண்டு அந்த முதலாளின்ரை ஸ்பிறேயை வாங்கி அடிச்சுக் கொண்டு கார் முன்சீற்றிலை ஏறிக் குந்தீட்டான். அவர் கொண்டு வந்த எள்ளுருண்டை, நல்லெண்ணை, ஒடியல் சீவல் எல்லாத்தையும் வைச்சுக் கட்டின பெட்டியை மடியிலை வைச்சுக் கொண்டு அந்த முதலாளிக்கு தெரியாத கொழும்பு பற்றின விளக்கத்தை சொல்லிக் கொண்டு வந்தான். இடைக்கிடை றைவரோடை தனக்குத் தெரிஞ்ச சிங்களத்திலை வெளுத்து வாங்கி முதலாளிக்குத் தன்ரை வித்துவத்தைக் காட்டிக் கொண்டு இருக்கக் கார் மினிஸ்ரர் வீட்டை நோக்கிப் பறந்தது.


(சேட்டைகள் தொடரும்...)

# நிற்க, நடக்க உரிமை இல்லையா?

## மாயாவின் டயரி

காலம் எல்லாவற்றையும் மாற்றி விடுகின்றது. எல்லாவற்றையும் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம். பொதுவெளியில் பெண்கள் உலாவுதல் என்பது அச்சத்திற்குரிய ஒன்றாகவே எப்போதும் இருந்து வருகின்றது. சாதாரணமாக கடற்கரைக்கு செல்வத்திலிருந்து திருவிழாவுக்கு செல்வது வரை பெண்களின் ஒழுக்கம் அலசி ஆராயப்படுகின்றது. இதைப் பற்றியெல்லாம் பொதுவெளிகளில் வாய் திறந்தால் பெண்ணியவாதியென்ற ஒரு முத்திரையை ஒட்டி எங்களின் வாய்களை அடைத்துவிடும் பெரும் சேவையும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

சில தினங்களுக்கு முன்பு என் தோழியுடன் பண்ணைக் கடலடிக்குச் சென்றிருந்தேன். ஒரு கற்தூணில் நானும் அவளும் அமர்ந்து சாதாரணமாக சமூகத்தில் நடக்கும் விடயங்களை பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தோம். பத்து நிமிடங்கள் கடந்திருக்கும். எதிரில் ஆறடி உயரமுள்ள முப்பது வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் எங்களுக்கு எதிரில் இருந்த கற்தூணில் அமர்ந்து எங்களுடன் கதைப்பதற்கு முயற்சித்தார். சிறிது நேரத்தில் எங்களுக்கு அருகில் எழும்பி வந்து எங்களின் விபரங்களை அறிவதற்கு முற்பட்டார். கோபமாக பேசி "தொந்தரவு செய்யாதீர்கள்" என்று மரியாதையாகப் போகச் சொன்னோம். உடனே அவர் எங்கள் ஒழுக்கம் தொடர்பாக பேசத் தொடங்கினார். இப்படி கடற்கரைக்கு காற்று வாங்க வருகின்ற பெண்கள் எல்லாம் நல்ல குடும்பத்துப் பெண்கள் இல்லை என்றும் இன்னும் என்னென்னவோ கெட்ட வார்த்தைகளையெல்லாம் கூறியபடி அங்கேயே சுற்றித் திரிந்தார். அதற்கு மேலும் அங்கு நின்றால் எங்கள் உடலுக்கும் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை என்று அந்த இடத்தை விட்டே நீங்கி வீட்டை அடைந்தோம்.



வரும் வழியில் யோசித்தேன். படித்த பெண்கள், சமூகத்தின் அனைத்து நிலையிலும் உலவி வரும் நமக்கே அந்த இடத்தில் துளியேனும் துணிச்சலோ பாதுகாப்போ அற்ற நிலையில் சமூகத்தில் சாதாரணமாக உலவும் ஏனைய பெண்களின் பாதுகாப்பென்பது எவ்விதம் உள்ளது? பெண்களுக்கான அடிப்படைச் சட்டங்கள் சாதாரண அளவிலேனும் அறியப்படுகின்றதா? பொது இடங்களில் பெண்கள் நடமாடும் உரிமையைக் கூட தட்டிப் பறிக்கும் இந்த மாதிரியானவர்கள் மேல் யார் நடவடிக்கை எடுப்பது?

இது இவ்வாறு இருக்க சமூக வலைத் தளங்களில், சமூகத்தின் ஏனைய தளங்களில் பெண்களிற்கு கற்பு என்னும் விடயத்தை திணித்து மேலும் அவர்களை புனிதப்படுத்தும் செயல் என்பது சக பால் இனத்திற்கு இழைக்கின்ற மிகப் பெரும் வஞ்சகம் என்பதை அறிந்தும் அதை பின்பற்றுபவர்கள் எவ்வாறானவர்கள்?

முகப்புத்தகத்தில் பதிவதற்கு எவ்வளவோ விடயங்கள் இருந்தும் பெண்களின் பிறப்புறுப்பின் மீதான, பெண்ணுடல் மீதான காழ்ப்புக்களை கொட்டித் தீர்க்கும் ஆண்களை மானுடர்கள் என்று எவ்வாறு அழைப்பது? அண்மையில் நல்லூர் திருவிழாவில் 25 நாட்களும் அடியழித்த பெண்கள் பற்றிய கீழ்த்தரமான ஆய்வொன்றை ஒருவர் வெளியிட்டிருந்தார். மாதவிலக்கை தள்ளி போடும் மருந்துகளை பாவித்து அவர்கள் 25 நாட்களும் கோயிலிற்கு வந்திருந்தனர் எனவும் அப்படிப்பட்ட பெண்களை திருமணம் செய்யாதீர்கள் எனவும் இளைஞர்களுக்கு அந்தப் பதிவர் ஒரு அறை கூவலை விடுத்திருந்தார். பெயரறியாத பெண்களின் பின்புறத்தை திருட்டுத்தனமாக புகைப்படம் எடுத்து அந்த அறைகூவலோடு இணைத்திருந்தார். தமிழினம் என்னும் வார்த்தையை வைத்துக் கொண்டு பெண்களின் ஒழுக்கத்தையும் பிற்போக்குத்த தனங்களையும் யார் பதிவிட்டாலும் ஓடிச் சென்று அதற்கு விருப்பிட்டு அதற்கு வியாக்கியானமளிப்பது நம் சமூக வழக்கம் ஆயிற்றே.

நல்லகாலம் அம்மன் கோயிலில் திருவிழா இருபத்தைந்து நாட்கள் நடக்கும் போது, அம்மனின் புனிதத்தை சோதிக்காமல் விட்டார்கள். அதற்குத்தான் கையில் சூலத்தை அம்மன் வருடக்கணக்கில் தரித்திருக்கின்றார் போலும். அம்மனுக்கு சூலம். நமக்கெல்லாம்? சூலகம் மட்டும்தான்.

பகுத்தறியும் திறன் மனிதனுக்கே உரியது. சக மனுஷியை அடிமையென நினைக்கின்ற மன நிலையை மாற்றிக் கொள்ளும் வரை தேசத்தின் சுதந்திரத்தைப் பற்றி நாம் கதைக்கத் தகுதியற்றவர்கள். நகை முரணாக உள்ளது. நாகரீகம் எதற்காகப் படைக்கப்பட்டதோ அதன் தன்மையிழந்து நாம் மீண்டும் மனிதனிலிருந்து மிருகம் ஆகிக்கொண்டிருக்கின்றோம். இந்தப் பௌர்ணமியும் சுடுகின்றது. அது நாளை தேய்ந்துவிடும். இருப்பினும் நிலவுகள் தேய்வதுண்டு மரணிப்பதில்லை.

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீரம் சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்" (பாரதி)

# வாரப் பலன்



**மேடம்**
தெய்வ சிந்தனை. மேன்மை. பயிர் பலிதம். காரியத் தடை.

**ரிஷபம்**
பணவரவு. தொலை தூர பயணம். காரியனுகூலம். தேடல்.

**மிதுனம்**
பாராட்டு. சமூக சிந்தனை. மனைச் சிறப்பு. பிராணிகளால் நன்மை.

**கடகம்**
செல்வச் சிறப்பு. பல்வகை முயற்சி. பணமுடை. கல்விச் சிறப்பு.

**சிம்மம்**
காரியத் தடை. வாய்வுத் தொல்லை. மனச் சஞ்சலம். மீட்சி.

**கன்னி**
திருமணப் பேச்சு. வாகன வரவு. பசி. இல்லச் சிறப்பு. தாமச் செயல்

**துலாம்**
சிந்தனை. வலுவற்ற தன்மை. காரிய மேன்மை. கல்வித் தடை.

**விருச்சிகம்**
நம்பிக்கை. ஆலய தரிசனம். ஈகைச் சிறப்பு. பாராட்டுப் பெறுதல்.

**தனுசு**
கலகம். உறக்கக் குறைவு. உறவு. சகோதர மேன்மை. தெய்வ தரிசனம்.

**மகரம்**
கலை மேன்மை. காரியத் தடை. போனதை எண்ணி வருந்ததல்.

**கும்பம்**
சுகமேன்மை. பயிர் பலிதம். நிதி நலன். வருவாய்க் கேற்ற செலவு.

**மீனம்**
அமைதி. வியாபார பலிதம். கல்விச் சிறப்பு. காரிய தாமதம். காரிய மேன்மை.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் IC SVIAS 2016 என்ற சர்வதேச மாநாடு உலகமயமாக்கல் சூழலில் பாரம்பரியக்கலைகள் என்ற தொனிப் பொருளில் நடைபெற்றது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக இராஜதுரை அரங்கில் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு தொடக்க விழாவுடன் சர்வதேச மாநாடு ஆரம்பமாகியது.

உலகின் பல பாகங்களிலுமிருந்து ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இம் மாநாட்டின் ஆய்வரங்குகளில் இவர்கள் தமது ஆய்வுகளை நிகழ்த்தினர்.

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், எனப் பலர் இம் மாநாட்டில் பங்குபற்றினர். 18 ஆம் திகதி வரை இந்த நிகழ்வு நடைபெற்றது.








தமிழ் மக்கள் பேரவையின் முத்தமிழ் விழா மட்டக்களப்பில் சென்ற வாரம் நடை பெற்றது, பறையிசை, நடனம் உள்ளிட்ட விசேட ஆற்றுகைகளுடன் முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற்றது.





அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய யாழ். கம்பன் விழா கடந்த 15 ஆம் திகதி தொடக்கம், 18 ஆம் திகதி வரை நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடை பெற்றது. இலக்கிய விவாதங்கள், மன்றங்கள் என்பன நிகழ்வில் நடை நடைபெற்றன.

த. அகிலனின் மரணத்தின் வாசனை போர் தின்ற சனங்களின் கதை சிறுகதை நூல் பற்றிய உரையாடல் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம் பெற்றது. (16.09.2016)





பெருவிரல் கலை இலக்கிய இயக்கத்தின் ஏற்பாட்டில் திசேராவின் "யோவான் 14:2" சிறுகதை தொகுப்பு அறிமுகமும்,கலந்துரையாடலும், ஹோல்புரூக் "T.M.V யில்" நடைபெற்றது. (17.09.2016)





"இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலுள்ள தமிழர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலையிட்டு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்ளுகின்ற அதேவேளை கர்நாடக மாநிலத்தில் அமைதிகாக்க விரைந்து செயற்பட்ட இந்திய அரசைப் பாராட்டுகிறோம்" என்று எழுதப்பட்ட மகஜரை இந்தியத் துணைத்தூதரிடம் மறவன்புலவு திரு. க. சச்சிதானந்தம் கையளித்தார் அதன் போது தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் உள்ளிருந்தனர்.

கரும்பறவை



# பிரான்ஸ் வன்முறை: புலித்தடையை நீடிக்கும் எத்தனமா?

யாழ்ப்பாணத்தை நிர்வாகம் செய்த ஆங்கிலேயப் பிரதி நிதியொருவர் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி நடக்கும் மக்கள் கூட்டமென அப்போதைய தமிழ் மக்கள் தொடர்பாக குறிப்பை எழுதி தமது தலைமைக்கு அனுப்பி வைத்திருந்தார். எதிரிகளே போற்றும் அளவுக்கு ஒழுக்கத்தை நாம் நேசித்திருந்தோம்.

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பெயரால், அதன் விளைவால் புலம் பெயர்ந்த தமிழர்கள் அனைவரும் தாங்கள் தங்கியிருக்கும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்" இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் மாவீரர் அறிவிழியின் தந்தையும் கரும்பறவை, சங்கர் என்ற புனைபெயரில் தமிழ் ஊடகப்பரப்பில் அறியப்பட்டவருமான முன்னாள் போராளியொருவர்.

கடந்த 11 ஆம் நாள் பிரான்ஸில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் புலிகள் மீதான தடையைத் தக்க வைக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ள எவருடையதோ தூண்டுதலாக இருக்கலாம் என அவர் தனது சந்தேகத்தை இக் கட்டுரையினூடாக வெளியிட்டு உள்ளார்.

1970 க்கு முன்னர் இலங்கையில் வட பகுதிக்கான புகையிரத சேவையே இலாபத்தில் இயங்கி வந்தது. ஏனெனில் இதில் பயணம் செய்தோரே ஒழுங்காக பயணச்சீட்டு பெற்று வந்தனர். வானொலி துவிச்சக்கர வண்டி முதலானவற்றிற்கு ஒழுங்காக உரிமம் பெறுவதிலும் எம்மவரே முன்னணியில் நின்றனர். ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சிக்காலத்தில், நெருக்கடி முற்றினால், பிரதமர் ஸ்ரீமாவை பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடிய இடமாக ஆலோசிக்கப்பட்ட இடங்களில் முதலாவதாக யாழ்ப்பாணமே கவனத்தில் கொள்ளப்பட்டது. இவ்வளவு கட்டுப்பாடான, சட்டத்தை மதிக்கும் மக்கள் கூட்டத்தினை வன்முறையை நோக்கித் தள்ளியது, தொடர்ச்சியாக வந்த ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களின் செயல்களே.

13 ஆம் திகதி பிரான்சில் மாவை சேனாதிராசா மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஒரு விசித்திரமான உண்மையை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. 1974ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன் போது 8 ஆம் திகதி உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கஸ்தூரியார் வீதியில் அப்போது இயங்கி வந்த ஹோட்டல் பரடைஸில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பேராசிரியர் வித்தியானந்தன் தலைமை தாங்கினார். தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் தனிநாயகம் அடிகளார் குத்துவிளக்கேற்ற இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த முனைவர் சாலை இளந்திரையன் சிறப்புரை ஆற்றினார்.

## பொன். சிவகுமாரரின் கூட்டாளி

மாநாட்டின் இறுதி நாளான பத்தாம் திகதி, வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால், திருச்சியைச் சேர்ந்த நைனா முகம்மது என்ற பேராசிரியர் உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது இன்ஸ்பெக்டர் சந்திரசேகரா தலைமையிலான பொலிஸார் மின்கம்பிகளைச் சுட்டு வீழ்த்தி விட்டு கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி அங்கிருந்த மக்கள் கூட்டத்தைக் கலைத்தனர். இந்த வன்முறையில் ஒன்பது தமிழர்கள் உயிரிழந்தனர். அன்று மக்கள் பலரை துணிச்சலுடன் காப்பாற்றி அனுப்பியவர் உரும்பிராயைச் சேர்ந்த பொன். சிவகுமாரன், இவரே பிற்காலத்தில் சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது போராளியாவார்.

பொலிஸார் மேற்கொண்ட இந்த வன்முறைச் சம்பவமே அன்றைய தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்ட வழிமுறைக்கு தள்ளியது. அன்று தீவிரவாதிகளில் ஒருவராக கருதப்பட்டவர் மாவை. சேனாதிராசா. இன்று பிரான்ஸில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்பு மகாநாட்டில் கண்ணீர் புகைக்குண்டை வீசிய இளைஞர் போலவே, அன்று மாவையும் நீண்ட முடியைக் கொண்டிருந்தார். கூடவே சிவப்பு நிறத்திலான ரிபனும் கட்டி இருப்பார். அன்று யாழ்ப்பாணத்தில் கண்ணீர் புகைகுண்டு வீசியது ஸ்ரீ லங்காப் பொலிஸார். இன்று பிரான்ஸில் இதே வகைத்தாக்குதலை மேற்கொண்டது விடுதலைப் போராட்டத்தின் பெயரால் அரசியல் தஞ்சம் கோரிய தமிழ் மகன் ஒருவர்.

## முடி வளர்ப்போர் எல்லாம் சேகுவரா ஆகிவிட முடியாது

முடி வளர்ப்பதால் மட்டும் ஒருவர் சேகுவரா ஆகிவிட முடியாது. அதனால்



தான் பிரான்ஸ் வன் முறைச் சம்பவத்தை இணையத்தில் பார்த்த ஒருவர் "முதல்ல முடிய வெட்டுங்கடா" என்று குறிப்பிட்டார். இறுதி யுத்தத்திற்கு பயன்படாத வீரம் இனியென்னத்துக்கு? ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து விட்டது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். "ஒரே ஒரு சூரியன், ஒரே ஒரு சந்திரன், ஒரே ஒரு எம்.ஜி.ஆர்" என எம்.ஜி.ஆரின் மறைவின் போது கவிஞர் வைரமுத்து குறிப்பிட்டார். அதேபோல வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு, என எல்லாத் தமிழர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே தலைவர் பிரபாகரன் மட்டுமே. இந்த சந்திரனுக்கு பக்கத்தில் நட்சத்திரமாக, ஏன் மின்மினிப் பூச்சியாக எவரும் இருக்க முடியாது. இவர்களது செயல்கள் மக்களிடம் ஆதரவைப்பெறாது என்பது மட்டும் உண்மை.

போராட்டத்தை, மக்களை, நேசிப்பவர்களாக இருந்தால் ஆயிரம் வழிகளில் எமது மக்களுக்கு உதவலாம். குறிப்பாக பிரபாகரனை நேசிப்பவர்கள் அவரால் வளர்க்கப்பட்ட முன்னாள் செஞ்சோலை பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கு வழி செய்யுங்கள். வவுனியா டொன் பொஸ்கோ சிறுவர் இல்லத்திலும் அகிலாண்டேஸ்வரி இல்லப் பராமரிப்பிலும் இந்தப்பிள்ளைகள் இருக்கின்றார்கள். புலம் பெயர்ந்த தமிழர்களில் பலருக்கு வயது வந்த பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒழுக்கமான, எமது மண்ணை நேசிக்கின்ற இளைஞர்களை தேர்ந்தெடுத்து இந்த பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வையுங்கள். இது போதனையல்ல வேண்டுகோள்.



இந்த வேண்டுகோளை விடுக்கும் தகுதி எனக்கிருப்பதாக கருதுவதால் தான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். பிரான்ஸ் வன்முறையைக் கண்டிப்பதால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளனாக என்னை அடையாளப் படுத்த வேண்டாம்.

## முகமூடி கழன்று நிஜ முகம்

தமிழ் அரசியல் வாதிகளுக்கும் போராளிகளுக்கும் இடையில் பெரும்பாலான காலங்களில் முறுகல் நிலையே இருந்து வந்தது. ஏனெனில் அரசியல் வாதிகள் எப்போதும் அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பவர்கள். மறுதரப்பினர் அடுத்த சந்ததி பற்றி சிந்தித்தவர்கள். நாட்டில் பல ரூபங்களில் பிரச்சினை வெடித்தது. எனினும் குறிப்பிட்ட காலம் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என சம்பந்தன் ஐயா உட்பட (டக்ளஸ், சித்தார்த்தன் தவிர) அரசியல் வாதிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். திருமலையில் சம்பந்தன் ஐயா புலிக்கொடியையும் ஏற்றினார். இன்று நிலைமை மாறியதும் அனைவரும் தமது முக மூடிகளைக் கழற்றி விட்டு நிஜத் தோற்றத்துடன் காட்சி அளிக்கின்றனர்.

1980 வரை தீவிரவாதம் என்பது தமது தகுதியை உயர்த்தும் ஏணி என்ற கருத்தே தமிழ் அரசியல் வாதிகளிடம் மேலோங்கி இருந்தது. ஏணி அப்படியே நிற்க வேண்டியது தான். மேலே போய்ப் பார்க்க வேண்டிய அலுவல்களை பார்ப்பவர்கள் தாங்கள் மட்டுமே என்ற எண்ணம் அப்போதைய அரசியல் வாதிகளிடம் இருந்தது. இதனை அப்போதைய அரசியல் வாதியான அமிர்தலிங்கம் போட்டுடைத்தார். 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து விட்டதாக இரு அரசுகளும் அறிவித்தன. அப்போது துக்ளக் ஆசிரியர் சோவுக்கு பேட்டியளித்தார் அமிர். "இதுவரை காலமும் போராடிய இளைஞர்களின் நிலை என்ன?" என சோ கேட்டார். அதற்கு அமிர் "முன்னர் படித்துக் கொண்டிருந்தவர்கள் மீண்டும் படிப்பை தொடர்வார்கள். முன்னர் வேலை பார்த்தவர்கள் தமது முன்னைய தொழிலுக்கு செல்வர்" எனப் பதிலளித்தார். "நீங்களும் உங்கள் பழைய தொழிலான சட்டத்தரணிப் பணியைத் செய்யப்போவீர்களா" என சோ கேட்கவில்லை. ஏனெனில் இவர்களெல்லாம் அரசியலைத்தான் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் என்று அவருக்குத் தெரியும். இந்த நேர்காணல் வெளி வந்ததும் "நாங்கள் யாழ். பேரூந்து நிலையத்தில் வைத்து உண்டியல் குலுக்கி, அமிர் தனது பழைய சட்டத்தரணி வேலையை பார்க்க ஏதுவாக கோட், ரை, வாங்கிக் கொடுப்போமா" என போராளியொருவர் பிரபாகரனிடம் கேட்டார். அவர் சிரித்துக் கொண்டே மறுத்து விட்டார். எனினும் அப்போதைய ஈழமுரசு ஆசிரியர் கோபு ஐயா என்ற எஸ்.எம். கோபாலரத்தினம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் "அமிர் தனது சட்டத்தரணி தொழிலுக்கு திரும்ப வேண்டும் அல்லது தனது தொழில் அரசியல் தான் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.


(20 ஆம் பக்கம் பார்க்க...)

# கதிரமலைப் பள்ளு

தமிழ் இலக்கியப்பரப்பில் மிகவும் பிரசித்தமான இலக்கிய வடிவமாக பள்ளு இலக்கியங்கள் சொல்லப்படுகின்றன. சாதாரண மக்களோடு மிக நெருக்கமாகவும், அடித்தட்டு மக்களை பாத்திரமாகவும் கொண்டு பாடப்படுவது பள்ளு பிரபந்தத்தின் சிறப்பாகச் சொல்லப்படுகின்றது. சிலவேளைகளில் தெய்வங்களை பிரதான பாத்திரங்களாக கொண்டு பள்ளுப்பாடும் முறையினைத் தமிழ்ப் புலவர்கள் கொண்டிருந்தனர்.

இத்தகைய பள்ளு இலக்கியத்தின் தாயகமாக ஈழமே காணப்படுகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்ததாக பல தமிழறிஞர்கள் குறிப்பிடும் கதிரமலைப் பள்ளே தமிழின் முதலாவது பள்ளு இலக்கியமாகச் சொல்லப்படுகின்றது. பாடியவர் பெயர் சரியாக அறியப்படாவிட்டாலும், 1935 இல் இப் பள்ளு பிரபந்தம் ஏட்டில் இருந்து அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பன்னெடுங்காலமாக தமிழ் நாட்டிற்கு இணையாக ஈழத்திலும் புலமை மரபுகள் இருந்ததற்கான பெரும் சான்றுகளாக இவ்வாறான பழந்தமிழ் இலக்கியங்கள் இருக்கின்றன.


KATHIRAMALAI PALLU

Edited by

with

Printed by

# வெருளி



காலம் காலமாக நிலத்தை உழுது பயிரிட்டு வரும் எம்முடைய விவசாயச் சமூகம் கொண்டிருக்கின்ற சுவாரஸ்யமான உருவாக்கங்களையும் மரபுகளாகக் கொள்ளலாம், அந்த வகையில் தோட்டத்து வெருளி விவசாயிகளின் உயிரற்ற பாதுகாவலனாக நிற்கின்றது, வைக்கோல், பானை, தடி, உடை என்பவற்றைக் கொண்டு மனித உருவினைப் போல் ஒரு மனிதப் போலியைச் செய்து வயல்களிலும் தோட்டங்களிலும் நாட்டி விடுவதை வெருளி என்பர். பறவைகள், மிருகங்கள் அதனைப் பார்த்து விட்டு மனிதர்கள் என்று நினைத்து வயலுக்குள் வராது. இந்த வெருளியை நம்முடைய வயல் பண்பாட்டின் ஒரு அங்கமாகக் கொள்ளலாம். நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடிய கத்தரித் தோட்டத்து வெருளி என்ற பாடல் யாழ்ப்பாண நிலத்தில் அதிகம் பிரசித்தமான ஒன்று.

"

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! நன்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்! உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்!
கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! என்றும்
காவல் புரிகின்ற சேவகா!

எண்ணி உன்னைப்போல் இரவுபகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்! என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்!
வட்டமான பெரும் பூசணிக்காய் போல
மஞ்சள் நிற உறு மாலைப்பார்! தலையில்
மஞ்சள் நிற உறு மாலைப்பார்!
கட்டிப்பிறக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்! இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!
தொட்டு முறுக்காத மீசையைப்பார்! கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்! கறைச்
சோகிபோலே பெருங் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார்! ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்!

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ? உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ?
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண்டோடுதே வெடி
வாலைக் கிளப்பிக்கொண்டோடுதே
கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக்கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே கூடிக்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வரு கள்வனுனைக் கண்டு
நடுநடுங்கி மனம் வாடுமே ஏங்கி
நடுநடுங்கி மனம் வாடுமே

ஏழைக் கமக்காரன் வேளைக்குதவி செய்
ஏவற்காரன் நீயே யென்னினும் நல்ல
ஏவற்காரன் நீயே யென்னினும்
ஆளைப் போலப் போலி வேடக்காரன் நீயே
ஆவதறிந்தன னுண்மையே போலி
ஆவதறிந்தன னுண்மையே
தூரத்திலே யுனைக் கண்டவுட னஞ்சித்
துண்ணென் றிடித்ததென் நெஞ்சமும் மிகத்
துண்ணென் றிடித்ததென் நெஞ்சமும்
சோரச் சோரப் போலி வேடக்காரனென்ற

தெரிய வந்ததுன் வஞ்சகம் நன்று
தெரிய வந்ததுன் வஞ்சகம்
சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதை போல்
தேசத்திலே பலர் உண்டுகாண் இந்தத்
தேசத்திலே பலர் உண்டுகாண்
அங்கவர் தம்மைக்கண் டேமாந்து போகா
அறிவு படைத்தனன் இன்று நான் உன்னிலே
அறிவு படைத்தனன் இன்று நான்.

- நவாலியூர் சோமசுந்தரப்புலவர் "

# மீகாமன் கோட்டை



நெடுந்தீவு கடலுக்கு அண்மையில் காணப்படும் இக்கோட்டை ஆரம்பத்தில் மீகாமன் என்ற சோழ ஆட்சியாளனுக்கு சொந்தமானதாக இருந்ததாகவும், இந் நெடுந்தீவில் அரசாண்ட வெடியரசனுக்கும் மீகாமனுக்கும் இக் கோட்டையில் யுத்தம் நடைபெற்றதாக கர்ணபரம்பரைக் கதைகள் குறிப்பிடுகின்றன. அதன் பின்னர் மீகாமன் கோட்டை போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டு அவர்களுடைய கோட்டை அமைப்பு முறைக்குரிய செவ்வக வடிவான அமைப்பில் இக்கோட்டை கட்டப்பட்டது. அதன் பின்னர் இதனை ஒல்லாந்தர் கைப்பற்றிய போதும் இக்கோட்டையின் அமைப்பினை மாற்றாமல் பயன்படுத்தியுள்ளனர். அருகில் இருக்கும் துறைமுகத்தையும் கடல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த இக்கோட்டை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. நெடுந்தீவுக்கே உரிய முருகைக்கல்லினை உபயோகித்து இக்கோட்டை பலமான கட்டட அமைப்பாக நிறுவப் பெற்றுள்ளது. இன்று சேதமடைந்து பாரிய சுவர்கள் தூண்களுடன் பராமரிப்பு இன்றிக் காணப்படுகின்றது. வைத்தியசாலைக்கண்மையில் கடற்கரை ஓரமாக கட்டப்பட்டிருந்தது. இதனுள் சுரங்க அறை ஒன்றும் காணப்படுகின்றது. இதுவும் இன்று அழிந்த நிலையிலேயே உள்ளது. இதன் சுவர்கள் மிக அகலமானவை. இதன் உள்ளும் புறமும் உடைந்த ஒல்லாந்தர் பாவித்த பொருட்களும், செப்பு நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன.

# பருத்தித்துறை வடை

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சிறப்பான அடையாளமாக உள்ள உணவு முறைகள் இருக்கின்றன. அவை ஒரு உணவு என்பதையும் தாண்டி அப்பிரதேசத்தின் பண்பாட்டு அடையாளமாகவே மாறி விடுகின்றன. அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி பிரதேசம், அதிலும் குறிப்பாக பருத்தித்துறைப் பிரதேசத்திற்குரிய சிறப்பான சிற்றுண்டி உணவு வகையாக பருத்தித்துறை வடை சொல்லப்படுகின்றது. அடிப்படையில் இது தட்டுவடை என்று குறிப்பிடப்பட்டாலும், பருத்தித்துறை இவ்வடை செய்வதில் சுவையும், தரமும் கொண்டதாக அறியப்படுகின்றது. எனவே இதனை பருத்தித்துறை வடையென்ற பெயரில் குறிப்பிடுகின்றனர்.



உழுத்தம் பருப்பு, கோதுமை மா, செத்தல் மிளகாய், பெருஞ்சீரகம் போன்ற உணவு உள்ளீடுகளைக் கொண்டு சுவையான பருத்தித்துறை வடையை சுடுவது ஒரு கலையாகவே கொண்டாடப் படுகின்றது. இன்று உள்நாட்டில் மட்டுமன்றி தமிழர் வாழும் வெளிநாடுகளில் கூட மவுசு குறையாத பாரம்பரிய விருப்பத்தேர்வாக பருத்தித்துறை வடை காணப்படுகின்றது.




○ தேவதாஸ் படத்தினை அடுத்து லீலா பன்சாலியும், ஷாருக்கானும் அடுத்து ஒரு வரலாற்றுப் படத்தில் மீண்டும் இணைகிறார்கள். ஷாருக்கிற்கு ஜோடியாக கங்கனா ரணாவத் நடிக்கவுள்ளார்.




○ "ஏஆர்சி மொபைல் புரடெக்ஷன்" தயாரிப்பில் கீர்த்தி இயக்கத்தில் வாகிஷன் ராஜ்கரன் மற்றும் லிங்கேஸ் வரன் நடிப்பில் உருவான 'கசடதபற' குறும் படத்தின் போஸ்டர் தற்போது வெளி விடப்பட்டுள்ளது.



○ நட்சத்திர கலைக்கூடம் வழங்கும் "என்னோடு நீ இருந்தால்" குறும்படம் வரும் 18 ஆம் திகதி வெளியாகியுள்ளது. சனாதனன், அகல்யா, சிந்தியா, அகிலன், கண்ணன், பிரபாகரன், ரஞ்சித் குமார், கிருபாகரன், பிரேம்காந்த் ஆகியோரின் நடிப்பிலும், கார்த்திக், விஜயரட்ணத்தின் ஒளிப்பதிவிலும் வெளியாகியுள்ளது. இப் படத்தினை புஷ்பராணி சத்யா திரைக்கதை எழுதி இயக்க றொஷான் இசையமைத்து உள்ளார்.



'ரெமோ' படத்
பார்த்து வியந்த
இயக்குநர் பாக்கி
அவர்களின் தயா
படத்தினையும் இ
முற்பணமும் கொ
இதற்காக இயக்குந
பேசப்பட்டுள்ளது
தில் பேசிக் கொ

○ குழந்தை வளர்ந்து விட்டதால் பிரசன்னாவின் அனுமதியுடன் மீண்டும் நடிக்க வரும் சினேகா தீவிரமாக கதை கேட்டு வருகின்றார். முதல் படமாக மம்முட்டி நடிக்கும் படத்தில் ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

○ "மனசுக்குள் ஒரு மழைச்சாரல்" முழு நீளத் திரைப்படம் இப்போது வெளியீட்டுக்கு தயாராகி விட்டதாக படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். இத் திரைப்படமானது முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் ராஜா-02 திரையரங்கில் சிறப்பு காட்சிகள் மற்றும் சாதாரண காட்சிகளாக காண்பிக்கப்படவுள்ளது. புலம்பெயர் நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளிலும் திரையிடலுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.





○ கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மாயா போன்ற படங்களில் தொடர்ச்சியாக நடித்துவரும் நயன்தாரா டோரா, மீஞ்டூர் கோபியின் படங்களைத்தொடர்ந்து எழுத்தாளரான பாலகுமார் இயக்கும் பொம்பள என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதில் கதாநாயகியான நயன்தாராவுடன் நமீதாவும் இணைந்து நடிக்கவுள்ளார்.

○ யாழ் இந்துக் கல்லூரி சாரணியத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு ஈழத்து இசையமைப்பாளரும் அக் கல்லூரியின் பழைய மாணவருமான மதீசனின் இசையில் மயூரேசனின் வரிகளில் பாடல் ஒன்று வெளியாகியுள்ளது. வவுனிக்குளத்தில் 7 ஆம் திகதி முதல் பதினோராம் திகதி வரை இடம்பெற்ற சிறப்புப் பாசறையை முன்னிட்டு இணையத்தில் வெளியிடப்பட்ட இப்பாடல் பலரது பாராட்டுக்களையும் வரவேற்பினையும் பெற்றுள்ளது.

...த்தை முழுமையாகப்
...ந்த தயாரிப்பு தரப்பினர்
...க்கியராஜ் கண்ணனுக்கு
...தயாரிப்பிலேயே அடுத்த
... இயக்க ஒப்பந்தம் செய்து
...கொடுத்து விட்டார்களாம்.
...தருக்கு 5கோடி சம்பளம்
...ளது என கோடம்பாக்கத்
... கொள்கின்றார்களாம்.



தமன்னா நடித்துவரும் கத்திச் சண்டை படத்தில் ஒரு பாடலை ஸ்ருதிஹாசன் பாடினால் நன்றாக இருக்கும் என படக்குழு கூற தமன்னாவும் தனது தோழியான ஸ்ருதியிடம் கூற அவரும் மறுப்பேதும் சொல்லாமல் நட்புக்காக சம்பளமும் வாங்காமல் பாடிக்கொடுத்து உள்ளார்.



நடிகர் ஆர்யா தமிழில் கடம்பன் படத்தைத் தொடர்ந்து கைவசம் படங்கள் இல்லாமையால் மலையாளப் படத்தில் வில்லனாக நடிக்கவுள்ளார். மம்முட்டி நடிக்கும் 'தி கிரேட் ஃபாதர்' படத்தில் மிரட்டல் வில்லனாக நடிக்கவுள்ளார் ஆர்யா.



'அப்பா' படத்தின் வெற்றியை அடுத்து சமுத்திரக்கனி கிட்ணாவை இயக்க ஆயத்தமாகியுள்ளார். 'கபாலி' படத்திற்காக முடியை குறைத்துக்கொண்ட தன்ஷிகா இப் படத்திற்காக வேகமாக வளர்த்து வருகின்றார். கிட்ணாவில் வெவ்வேறு தோற்றங்களில் நடிக்கவுள்ளார் தன்ஷிகா. தன்ஷிகாவின் மூன்று படங்கள் வெளியாவதற்கு தயாராக உள்ளதாலும் அதீத உற்சாகத்தில் இருக்கிறாராம் தன்ஷிகா.




'இறுதிச் சுற்று' படத்துக்கு பிறகு தமிழ், தெலுங்கு, மலையாளப் படங்களில் நடிக்கவும் கவனம் செலுத்தி வருகிறார் மாதவன். ஒரு சில படங்களில் ஒப்பந்தம் ஆகியுள்ள அவர், தமிழில் 'சார்லி' படத்தின் ரீமேக்கில் துல்கர் நடித்த வேடத்தில் நடிக்க இருக்கிறார். அதோடு இயக்குநர் கரு.பழனியப்பன் இயக்கும் ஒரு புதிய படத்தில் நடிக்கவும் ஒப்பந்தமாகியுள்ளார். 'கிராமஃபோன்' என்ற தலைப்பு பரிசீலனையில் இருக்கிறது!

புலவர் புரொடக்சன் தயாரிப்பில் - பீ.சே.கவீஸ் இயக்கத்திலும் புலவர் வீடியோ ரமேஸின் ஒளிப்பதிவு மற்றும் படத் தொகுப்பிலும் உருவாகியிருக்கும் காணொளி பாடல்தான் யுகவீரா. நடிகர் ஜெய் ஆகாஸின் பிரதான நடிபாகத்தோடும் ஈழத்தின் பல கலைஞர்களுடைய பங்களிப்போடும் உருவாகியிருக்கும் இப் பாடலுக்கான இசையினை வர்ணன் ஜீ சேகரன் வழங்க பாடலுக்கான வரிகளை சாகித்யா எழுத ஜூட் தர்சன் பாடலை பாடியிருக்கிறார். பாடலுக்கான நடன உருவாக்கத்தினை கிரியேட்டிவ் டான்ஸர்ஸ் மற்றும் ஹிமாலயா நடனக் குழுவினர் இணைந்து வழங்கியிருக்கிறார்கள்.






தனுஷின் வேலையில்லாப் பட்டதாரி படத்தின் கன்னட ரீமேக்கின் உரிமையை ராக்லைன் வெங்கடேஷ் பெரும் தொகை கொடுத்து வாங்கியுள்ளார். இதில் கதாநாயகனாக மனோரஞ்சன் நடிக்க கதாநாயகியாக அமலாபாலை ஒப்பந்தம் செய்ய பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றது.






1960 களில் செல்வச்சந்நிதி - தொண்டைமனாறு




Thurairatnam Thayalan

தமிழ் படித்து சாகவேண்டும்



Kiri Shanth



காவேரி - கர்நாடகா - தமிழ்நாடு

பொதுவாக இந்த மாதிரியான கால கட்டங்களில் பலர் தமக்குள் உள்ள மிருகத் தனங்களை வெளிப்படுத்தியபடி இருப்பார்கள், யார் முதல் அடித்தார்? யார் இரண்டாவதாக அடித்தார்? என்ற கதைகளையெல்லாம் வைத்து மக்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மனிதர்கள் எல்லா இடத்திலும் இருப்பார்கள். அவர்களை நோக்கி எங்கள் இதயங்கள் துடிக்க வேண்டுமே தவிர மிருகங்களின் வெற்றுக் கூச்சலுக்கு அல்ல. எந்தக் கருத்து நிலையை அதிகம் உருவாக்குகிறோமோ அது தான் அதிகம் தாக்கத்தை செலுத்தும். அது எது என்பதை ஒவ்வொருவரும் தீர்மானிக்கலாம். அதனூடாக நாங்கள் யாராய் இருக்கிறோம் என்பதை நாங்களே கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

# சுவரில் கொய்தவை

ஜீ உமாஜி

மரத்தடியிலையா இருக்கு
தன்னையுணர்ந்தபோது போதிமரத்தின் கீழிருந்தான்!

Vasan ST

வாழ்க்கைல கடைசி வரை தனக்குனு சமைக்காத ஜீவன் #அம்மாான்னா
தனக்குனு சம்பாதிக்காத ஜீவன் #அப்பா

Mathi Theepan

இரணமடு தண்ணீர யாழ்ப்பாணத்துக்கு திறந்துவிட எதிர்ப்பு காட்டிற கூட்டங்கள்
இப்ப காவேரி பிரச்சனைக்கு ஊளையிடுதுகள்

Amalraj Francis

எல்லோரையும் திருப்திப்படுத்த நினைப்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற மாட்டான்
லெனின் சொன்னாரு

Sritharan Thirunavukarsu

இந்த நிலத்தை பொதுமக்களிடம் வழங்குவோம் இதனை வழங்க மாட்டோம் என்று படைத்துறை சார்ந்தவர்கள் பத்திரிகைக்கு அறிக்கை விடுவது ஜனநாயக நாட்டின் மரபு அல்ல அதனை அரசாங்க தலைவர்கள் சொல்ல வேண்டும்

Thiagarajah Rajarajan

மன்னர் ஆட்சிகளையும் நிலப்பிரபுத்துவ கட்டமைப்புகளையும் உடைத்தெறிய முன்னொருகால் இங்கு மக்கள் புரட்சி வெடித்தது அதுவே உலகளவில் பிரெஞ் புரட்சி என்றழைக்கப்பட்டது ஆனால் இன்றோ ஒருசிலர் நலனுக்காக றெமியார்ட்டின் +ரியர் காஸ் கொண்டு கருத்து சுதந்திரங்களை கட்டி போடும் பாரிஸ் புரட்சி வெடித்தது

Janojan Jeno

சம்பூரில் இருக்கிறேன்
மக்களின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியை அவர்களுடன் சேர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் மீள்குடியேற்றத்தின் பின் அம் மக்களின் முகங்களில் உண்மையான சந்தோசம் ஒட்டிக் கொண்டிருக்கிறது நன்றி சொல்லவும் பகிர்ந்துகொள்ளவும் அதிகம் இருக்கிறது



வி. சபேசன்

## சிறிலங்கா அரசு ஏன் ஒரு இனவாத அரசு?

மலேசியாவில் தனது தூதுவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய விளக்கத்தை சிறிலங்கா அரசு உடனடியாக மலேசிய அரசாங்கத்திடம் கோரியிருந்தது. ஒரு அரசு என்னும் அடிப்படையில் அது தனது அழுத்தங்களை கொடுத்திருந்தது.

ஆனால், தனது நாட்டைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் ஒரு பிரதான கட்சியின் தலைவராகவும் விளங்குகின்ற ஒருவர் மீதும், தனது நாட்டில் இருந்து புலம் பெயர்ந்த சென்ற மக்கள் மீதும் பிரான்சில் வைத்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் பற்றி இன்று வரை சிறிலங்கா அரசு எந்த விளக்கத்தையும் பிரான்ஸிடம் கேட்கவில்லை.

தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அழுத்தம் எதையும் சிறிலங்கா அரசு கொடுக்கவில்லை.


இதற்குக் காரணம் மலேசியாவில் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர்கள், பிரான்ஸில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்.

தனது நாட்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் கூட, அவர் தமிழர் என்றால் சிறிலங்கா அரசு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காது.










## இந்தவார மீம்ஸ் (Meme)




**இணையவாசிகளுக்கு** உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள், சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/

# கிளிநொச்சி தீ சதியா விபத்தா?

அரவான்



கிளிநொச்சி சந்தைக் கட்டடத் தொகுதியில் தீ விபத்து. இதுதான் கடந்த வாரம் வடக்கு மக்களிடம் அதிகம் பேசப்பட்ட, பகிரப்பட்ட விடயம். ஒரே இரவில் கொட்டகை வடிவில் அமைக்கப் பட்டிருந்த 124 கடைகளை தீச்சுவாலை விழுங்கியிருந்தது. பழங்களும், உடு புடைவைகளும், அழகுசாதனப் பொருட் களும் கருகிப் போய், சாம்பல் மேட்டில் சமாதியாகியிருந்தன. கிட்டத்தட்ட இறுதிப்போரின் இறுதி நாட்களை அந்தக் காட்சி நினைவு படுத்தியது. கண்முன்னே எரிந்துபோய்க் கிடக்கும் தங்கள் குடும்பத் தின் பசியைப் போக்கிய கடைகளை வெறித்துப் பார்த்தபடி நின்றார்கள் கடைக்காரர்கள். அழுவதா, அல்லது எரிந்த பொருட்களை அப்புறப்படுத்து வதா என்று முடிவெடுக்கக் கூட அவர்க ளால் இயலாததாக இருந்தது. முதல்நாள் இரவு வரை வாழ்வின் முன்னேற்றம் பற்றிய எத்தனையோ கனவுகளை அவர்க ளுக்கு உண்டுபண்ணிய கடை, இப்போது சுடலை போல இருப்பதை எப்படி ஜீரணிக்க முடியும்? கடந்த சில தசாபதங்களில், வடக்கில் ஏற்பட்ட மிகப் பெரிய தீவிபத்தாக கிளிநொச்சி சந்தைக் கடைத் தொகுதிகளின் எரிதல் பதிவாகி யுள்ளது.நல்லவேளையாக எந்தவித உயிர்ப்பலிகளும் நேரவில்லை என்பதே ஒரேயொரு ஆறுதலான விடயம்.

போருக்குப் பின்னர் ஏனைய மாவட் டங்களை விடவும் கிளிநொச்சி மிக விரைவாக தன் போர்க்காலத் தழும்பு களை மாற்றத் தொடங்கியிருந்தது. வீதிகள் யாவும் கார்ப்பெற்றால் மூடப்பட் டது. பரந்தளவிலான கட்டடக்காடு முளைத்தெழுந்தது. நகரத்தின் மத்தியில் இரவில் ஒளிவீசும் விளக்குகளின் வெளிச் சத்தில் கிளிநொச்சியின் அழகு இன்னும் கூடியிருந்தது. புலிகளின் காலத்தில் தனக்கிருந்த முகத்தை தொலைத்து இன்னொரு முகத்தோடு ஒப்பனை நகரமாகக் கிளிநொச்சி எழுந்து கொண் டது. வெளிப்பூச்சுக்கள் அதனை துரித மாக மீண்டெழுந்த நகராகக் காட்ட முனைந்தன. புதிய தொழில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. வங்கிகளும், நிதி நிறுவனங்களும் இந்த ஒப்பனை நகருக்கு படையெடுத்தனர். உண்மையில் வெளிப்பூச்சுக்கள் தான் கிளிநொச்சியின் புற அடையாளங்களை மாற்றி இருந்த னவே தவிர, நகரத்தை தாண்டிய அதன் குறுக்குவெட்டு முகத்தின் வாழ்வியல் இன்னமும் அதலபாதாளத்திலேயே இருக்கின்றது. கிளிநொச்சி சந்தையை வெளியில் இருந்து பார்க்கும் போது பிரமாண்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் அதன் ஒய்யாரக் கொண்டையை நன்றாக உற்று நோக்கினால் உள்ளே ஈரும் பேனுமே நிறைந்திருப்பதைக் காணமுடி யும். அப்படியானவற்றுக்கு சந்தையின் பழக்கடைகள், உடு புடைவைக் கடை கள், அழகுசாதனப் பொருள் கடைகள் என்பன மிகச் சிறந்த உதாரணங்கள்.

"ஆடு அல்லது மாடு வளர்ப்புப் பண்ணைகளில் உள்ள கொட்டகைகள் கூட இதைவிட மிகவும் பாதுகாப்பான தாகவும் தர நிர்ணயத்தோடும் நிர்மாணிக் கப் பட்டிருக்கும்" என்று கடைக்காரர்கள் சொல்லுமளவுக்கு, நாலைந்து தகரங்கள், சில பலகைத் துண்டுகளை மட்டும் கொண்டு உருவாக்கப்பட்ட கொட்டகை களே கடைகள் என்ற பெயரில் வாட கைக்கு வழங்கப்பட்டிருந்தன. அம்பாள் குளத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்தக் கடைகள், அங்கு மக்கள் வருகை இன்மையால், உரிய வியாபார இலக்கை எட்டமுடியாது என்று கருதியே கிளி நொச்சி நகருக்குள்- சந்தைத் தொகுதிக் குள்- தற்காலிகமாக அமைக்கப்பட்டன. இரண்டு வருடங்கள் இந்தத் தற்காலிகக் கொட்டகைகளில் வியாபாரம் செய்யுங் கள். அதற்குள் நிரந்தரக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுவிடும் என்றே சொல்லப் பட்டிருந்தது.ஆனால் ஆறு வருடங்கள் கடந்த பின்னும் தொடர்ந்தும் அதே தற்காலிகத் தகரக்கொட்டகைகளிலேயே அந்தக் கடைகள் தொடர்ந்து நடத்தப் பட்டு வந்துள்ளன. கிளிநொச்சி நகரக் கடைகளை விடவும் இந்தக் கடைகளில் ஓரளவு நியாய விலையிலும், தரமானது மான பொருட்களை வாங்க முடியும் என் பதால், தம்முடைய பொருளாதாரத்துக்கு ஏற்ப கிளிநொச்சி மக்களில் பெரும்பாலா னோர் சந்தைக் கடைகளின் வாடிக்கையா ளர்களாக இருந்தனர்.

இந்த நிலையில் தான் கடந்த 16 ஆம் திகதி முன்னிரவில் கிளிநொச்சி சந்தைக் கடைகள் திடீரெனத் தீப்பற்றிக் கொண் டன. மிக நீண்ட போராட்டத்தின் பின்னர் தீ முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது, 124 கடைகள் முற்றாக எரிந்து அழிந்தி ருந்தன. பல மில்லியன் ரூபா சொத்துக் கள் சில மணி நேரத்தில் கருகிப்போயின. உடனடியாக அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. மேலதிக இழப்பீடுகள் வழங்குவது குறித்தும், நிரந்தரக் கட்டடம் அமைப்பது குறித்தும் துரித கதியில் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இந்தத் தகவல்கள் எல்லாம் ஏற்கனவே ஊடகங்களில் வெளியானவை தான். ஆனால் இப்போது "கிளிநொச்சி கடைகள் எரிப்பு தற்செயலானதல்ல, திட்டமிட்ட சிலரின் சதி நடவடிக்கை" என்று கதைகள் அடிபடத் தொடங்கி உள்ளன.

கொஞ்சம் ஆழமாக விசாரித்தபோது கிளிநொச்சி கடைகள் எரிந்த விடயம் தற்செயல் நிகழ்வாகவோ அல்லது எதிர் பாரா விபத்தாகவோ இருப்பதற்கான சாத் தியங்களைக் கொண்டிருக்கவில்லை.

1. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கடைக்காரர்கள் திருஷ்டி கழிப்பதற்காக கடையில் உள்ள பழையபெட்டிகளோடு, மிளகாய், உப்பு, வேப்பிலை என்பன அடங்கிய "எரிபொருளை" வாசலில் வைத்து எரிப்பதுண்டு.

அப்படி "எரிபொருளில்" இருந்து பறந்த பொறியால் தான் இந்த தீ பற்றியி ருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால் தீர விசாரித்த வகையில் சம்பவம் நடந்த வெள்ளிக்கிழமை அவ்வாறு எரிபொருளை எரித்தவர்கள் எல்லோ ருமே அவை அணைந்ததை உறுதிப்ப டுத்திய பின்னரே சென்றிருக்கிறார்கள். ஆகவே வெள்ளிக்கிழமை "எரிபொருள்" எரிப்பால் தீப்பரவல் ஏற்படவில்லை.

2. எல்லா தீ விபத்துகளுக்கும் சொல் லப்படுவதுபோல மின்னொழுக்கே இதற்கும் காரணம் என ஊடகங்கள் பலவும் களத்துக்கு செல்லாமலே எந்தவித ஆதாரங்களுமின்றி செய்தியறிக் கைகளை பிளந்து கட்டின. ஆனால் மின்னொழுக்கு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் எதுவுமே இல்லை என்று அடித்துச் சொல்கிறார்கள் வர்த்தகர்கள். மின்னொழுக்கு ஏற்பட்ட மைக்கான தடயங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதேவேளை வழமையாக கடைகள் பூட்டப்பட்டதும் பிரதான மின் ஆழி நிறுத்தப்பட்டு விடும். ஆனால் சம்பவம் நடைபெற்ற தினம் தீயை அணைக்க முற்பட்ட சமயத்தில் சிலர் மின்சாரத்தால் தாக்குண்டுள்ளனர். அதன் பின்னரே பிரதான ஆழி இயங்கு நிலையில் இருப்பது தெரிய வந்து, அது செயலிழக் கம் செய்யப்பட்டது.

3. முதலில் புடைவைக் கடைகளிலோ அல்லது அழகுசாதனக் கடைகளிலோ தீப்பிடித்து இருந்தால் அது வேகமாக எல்லா இடங்களுக்கும் பரவுவதென்பது இயல்பானதே.ஆனால் கிளிநொச்சியில் முதலில் தீப்பரவல் கண்டுபிடிக்கப்பட் டது பழக்கடைகளில். நீர்த்தன்மை நிறைந்திருக்கும் பழங்களைக் கொண்ட கடைகளில் சிறு நெருப்பு பொறியோ அல்லது சாதாரண மின்னொழுக்கோ அல்லது தீபத்தின் சுடரோ மிகப்பெரிய தீச்சுவாலையை உண்டு பண்ண முடியாது.

பெற்றோல், மண்ணெய் போன்ற எரிபொருள் திரவங்களை ஊற்றி எரித்தால் தான் இந்தக் கடைகளில் தீ பற்றிக் கொள்ளும்.



(20 ஆம் பக்கம் பார்க்க...)

சிறுகதை



# சிவகாமியின் காதல்

○ தர்சினி

எத்தனை நாள் எதிர்பார்ப்பு!! இன்று அதை அடைந்த ஏகாந்தத்தில் மூழ்கித்திளைத்து அமைதி காக்கின்றார் கதிர்வேல். அவரைச்சுற்றி ஆயிரமாயிரம் பேச்சுக்கள். எதுவுமறியாது சலனமின்றி சிவகாமியை தேடிச்சென்ற திருப்தியில் கட்டையாய் படுத்துக்கிடக்கின்றார். "உனக்காக உயிரைக்கூட விடுவேன் கண்ணம்மா" என்று வாலிப வயதில் மையல் கொண்ட வேளையில் சொன்ன வார்த்தையை நிஜமாக்கிய திருப்தி அவர் முகத்தில். வலுக்கட்டாயமாக தன்னை இவ்வுலகிலிருந்து அகற்றிக்கொண்டமை சரிதானென்று அவரது முகத்திலிருந்த அந்த மயான அமைதியுடனான புன் சிரிப்பு சொல்லாமல் சொல்லியது.

"என்ன நடந்ததாம்? வீட்டில மகளும் மருமகனும் வேலைக்கு போறதால கவனிக்காமல் விட்டிட்டினமா?" என்று கிசு கிசுத்த கலாவிடம் "என்ன பேய்க்கதை பேசுறாய் கலா? சும்மா சொல்லக்கூடாது, இவருக்கு வாய்ச்ச மருமகன் வேற யாருக்கு வாய்ச்சுது? இவருக்கு மகன் இருந்தா கூட இப்பிடி பார்த்திருப்பனோ தெரியா.. இந்த விசர் மனுசன் பார்த்த வேலையால அதுகளுக்குத்தான் கெட்ட பெயர்" என்று பக்கத்து வீட்டு கமலம் கதிர்வேலின் குடும்பத்துக்காக வக்காலத்து வாங்கினாள். "மனிசி போன பிறகு மனுஷன் சரியா தொய்ஞ்சுதான் போனார்" என்று அங்கலாய்த்துக் கொண்டார் சம்பந்தன். சம்பந்தனின் வார்த்தைகள் எவ்வளவு நித்தியமானவை?

காதல் கொண்டு கைப்பிடித்த காதல் மனைவி சிவகாமியை அவளின் 40ஆவது வயதில் கையாலாகாத்தனத்துடன் எமனிடம் காவு கொடுத்துவிட்டார் கதிர்வேல். திடீரென்று வந்த காய்ச்சலின் தீவிரத்தை வைத்தியர்கள் கூட கட்டுப்படுத்தும் வழியறிந்திராத ஒரு தருணத்தில் கதிர்வேலையும் பூப்பின் விளிம்பில் நின்றிருந்த அவர் மகளையும் கைவிட்டு சிவகாமி தன்னை சட்டமிட்ட கண்ணாடிக்குள் இருத்திக்கொண்டாள். அன்றிலிருந்து அந்த பூந்தளிருக்கு தாய்க்குத் தாயாயும் தந்தைக்குத் தந்தையாயும் இருந்து வளர்த்தெடுத்து அவள் மையல்கொண்ட கணவனிடம் கைப்பிடித்து கொடுக்கும் வரை சிறுபொழுதேனும் அவர் சோர்ந்து விடவில்லை. இரவின் தனிமையில் வரும் சிவகாமியின் நினைவுகள் அவரை உறுதியுடன் இருத்திக்கொண்டன. ஆனால், மகளுக்கான கடமைகள் முடிவடைந்த பின் வரும் சிவகாமியின் நினைப்புக்களுக்கு பழைய பலம் இருக்கவில்லை. அவை அவரை சிறிது சிறிதாக குலைத்து பலவீனமானவன் ஆக்கிக் கொண்டன.

சில பொழுதுகளில் முதுமையின் தனிமையையும் நோய்களின் அவஸ்தையையும் சட்டமிட்ட கண்ணடிக்குள்ளிருந்து புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் சிவகாமி மீது அவருக்குக் கோபத்தை வரவழைத்தது. "பூமியில் உள்ளவரை நான் உங்களைத் தனியாக விட்டுவிட மாட்டேன்" என்று மூச்சுக்கு முன்னூறு தரம் உயிர்ப்புடன் சொன்னவள், பூமியை விட்டகன்ற இந்த ஏழிரண்டு வருடங்களில் என்னை தன்னோடு அழைக்கும் முயற்சியில் துளியளவும் ஈடுபட்டாளில்லை என்று தினம் தினம் அங்கலாய்த்துக் கொண்டார். "வீடு போ! போ!" என்றும் "காடு வா! வா!" என்றும் அழைக்கும் வயதில் இருந்தும் கூட மரணம் ஸ்பரிசித்துப் பார்க்க மனமின்றி தள்ளியே நிற்பதில் அவர் மனம் சோர்ந்து விட்டார். தற்கொலை செய்து கொண்டேனும் சிவகாமியிடம் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டதன் விளைவாக சிறிது சிறிதாக சேர்த்துக் கொண்ட தூக்க மாத்திரைகள் எப்போதும் அவர் தலையணைக்கடியில் மறைவாக தூங்க ஆரம்பித்தன.

மூப்பின் விளிம்பில் நின்று கொண்டிருந்த அவரது ஒவ்வொரு செய்கையும் சிவகாமியை எதிர்பார்த்து, எதிர்பார்த்து, ஏமாந்து ஏமாந்து அவரை உருக்க ஆரம்பித்தன. அவரது மகளும் மருமகனும் அவரை கண்ணுக்குள் வைத்து பக்குவமாய் பார்த்துக் கொண்டும் கூட, சிவகாமி இருந்திருந்தால் என்னை அணைத்துத் தெம்பூட்டி என் எண்ணங்களுக்கு நல்லதொரு இணையாய் சகியாய் இருந்திருப்பாள் என்ற எண்ணம் அவருக்கு தினமும் தோன்றாமலில்லை.

சளி நெஞ்சை அடைத்து துப்பவேண்டும் என்ற எண்ணம் சதா தோன்றும் கடைசிக் காலங்களில் அவர் மகள் சட்டிக்குள் மண் இட்டு "இதிலை துப்புங்கப்பா.. அடிக்கடி வெளில ஏன் கஷ்டப்பட்டு போறீங்கள்" என்று சிரத்தையுடன் மகளுக்கான கடமையை செய்யும் வேளையிலும் கூட, இருமும் போது நெஞ்சை தடவி ஆசுவாசப்படுத்தி தூங்கும் வரை தலை தடவும் சிவகாமியின் தாய்மையை காற்றில் தேடிக் கொண்டார்.

அவர் மகள் வேலைக்கு போகும் நேரங்களில் கூட மதிய நேரத்திற்கான மாத்திரைகளை தனியாக எடுத்து வைத்து மறக்காமல் விழுங்கும்படி ஞாபகப்படுத்தினாலும் கூட, சிவகாமி இருந்திருந்தால் மாத்திரைகளையும் தண்ணீரையும் தந்து "குளிசையை போட்டு விட்டு படுங்கோ" என்று சொல்லி குளிசையை விழுங்குகையில் நெஞ்சை தடவி குளிசை கழுத்துக்குள் இருந்து வயிற்றுக்குள் போவதற்கு உதவியிருப்பாள் என்ற எண்ணம் சிவகாமியின் இல்லாமையை அவருக்கு கொடுமையுடன் உணர வைத்தது.

கதிர்வேலுக்கு குழைந்த சோறுதான் பிடிக்குமென்று அவர் மகள் வேலைக்கு போகுமுன் அதிகாலையில் பக்குவமாய் சமைத்து வைத்தாலும், பரிமாற சிவகாமி இல்லையே என்று சதா அவளுக்காக ஏங்கிக் கொண்டார். எனக்காக ஒரு வாய் சேர்த்துச் சாபிடுங்கோவன் என்ற சிவகாமியின் குரலுக்காயும், கடைவாயில் ஒட்டிய சோற்றுப் பருக்கையை துடைக்க சிவகாமியின் சேலைத் தலைப்புக்காயும் தாயைத் தொலைத்த குழந்தையாய் ஏங்கினார்.

நோய் உடலைத்தின்னும் நாட்களில் சிவகாமியின் கதகதப்பான கைகளுக்காகத் தவித்தார். அவளது சேலைத்துணியை அணைத்துக் கொண்டு தலையணையை கண்ணீரால் ஈரமாக்கிக் கொண்டார். "இப்ப முதலை விட காய்ச்சல் சுகமாயிடுச்சா?" என்று மணிக்கு பத்து தரம் நச்சரிக்கமாட்டாளா என்று ஏங்கினார்.

பகல் நேரத்துப் பொழுதைப்போக்க ஒரு நேரக் கழிப்பானாய் பாக்கு, வெத்திலை போடுகையில், சிவகாமி இருந்திருந்தால் சரியான அளவுகளில் பாக்கு, வெத்திலை, சுண்ணாம்பு எடுத்து இடக்கையில் அடக்கி வலக்கையின் பெரு விரலால், அதை நீவி நல்லதொரு கலவையாய் ஊட்டி விட்டிருப்பாளோ? அன்றில் அதற்கும் மேலாகத் தானும் கூட வெத்தி லையை குதப்பி தன் உதட்டை சிவக்க வைத்திருப்பாளோ? என்று எண்ணி தன் கற்பனையை களைப்பித்துக் கொண்டார்.

முதுமையில் நரைகளுடன் முகத் தோல் சுருங்கி அவரது சிவகாமி எப்படி யிருப்பாள் என்று கற்பனையில் அவளை சிலையாய் வடித்து வடித்து முடிவில் எதுவும் பொருந்தாமல் தினம் தினம் தோற்றுப் போனார். சாய்வு நாற்காலியில் அமர்ந்து சூனியத்தை வெறிக்கும் தருணங்களில், சிவகாமி இருந்திருந்தால் அவளுடன் நேரம் போக பழைய காதல் கதை பேசி அவளை சிவக்க வைத்திருக் கலாம் என்று அவருக்கு தோன்றும். காதல் கதை பேசுகையில் அவள் வெட்கித்து. "ச்சீ நீங்க ரொம்ப மோசம்" என்று சொல்லித் தலையில் செல்லமாய் தட்டி இருப்பாளோ அன்றில் "கட்டையில போற வயசில உங்களுக்கு காதல் கதையா?" என்று கோபப்பட்டிருப்பாளோ என்று கற்பனை செய்து செய்தே அவரது மூளையின் ஒரு பகுதி சேதாரமாகி விட்டது.

காதலிக்கும் நாட்களில் "முதுமையில் கூட உன்னை சுற்றிச் சுற்றி வருவேன் கண்ணம்மா" என்றும் "முதுமையில் கூட என்னை ஏன் ஈர்த்தாய் என்று புரியாத புதிராகத்தான் இருப்பாய் சிவகாமி" என்றும் எத்தனையோ தடவை அவளிடம் சொல்லி இருப்பார். அவளிடம் சொல்லாமலேயே எந்த காதலனும் கொடுத்தறியாத முதுமையில் காதலையும் தான் காதலிக்கப்படுகின்றோம் என்ற எண்ணத்தையும் அவளிற்கே அவளுக்காய் கொடுக்க வேண்டும் என்று கற்பனைக் கோட்டை கட்டியிருந்தார். எதற்கும் வாய்ப்பளிக்காமல் நாற்பதுகளின் ஆரம்பத்தில் அவரது காதல் வாழ்க்கையில் அவரை நடுத்தெருவில் விட்டு விட்டு போய்விட்ட சிவகாமியை கோபித்துக் கொண்டார். இளமையின் தனிமையில் அவள் "உங்கள விட்டிட்டு என்னால தனியா இருக்க முடியாது. ஆனால் ஆசை தீர வாழ்ந்த பிறகு உங்கள அனுப்பின பிறகுதான் நான் போவன்" என்று சொல்லி அதற்கு தன் துணையின்றி அவரால் வாழமுடியாதென்றும் அவரது முன் கோபம் முசுட்டுக் குணங்களை தன்னால் மட்டும் தான் சகித்துக்கொள்ள முடியும் என்றும் ஆயிரமாயிரம் காரணம் சொல்வாள். கடைசியில்???

பல்லில்லாத வாயால் மெல்லுவதற்கு பக்குவமாக பாக்கை உரலிலிட்டு துகளாக்கி கொண்டிருந்த கதிர்வேலை மறுபடி வரமுயற்சித்த அந்த இருமல் ஸ்தம்பிக்க வைத்தது. இரும ஆரம்பிப்பதும் பின்பு அது தொண்டைக்குள் சிக்கி புரையேற வைத்துக் காணாமல் போவதுமாய் இம்சையின் பிடியில் சிக்கித் தவித்தார். இந்த இருமலின் அவஸ்தையில் இப்போதெல்லாம் சரியான தூக்கமின்றி பசியின்றி சிவகாமியின் நினைவுகளுடன் நீண்ட நெடிய பொழுதுகளை முட்டித்தள்ளுவதில் அவருக்கு மூச்சு முட்டிபோகிறது. சிவகாமியிடம் போய் விட வேண்டும் என்ற எண்ணம் முன் எப்போதும் இல்லாமல் இப்போதெல்லாம் வலுத்துக் கொண்டது.

சிவகாமி வரப்போவதுமில்லை, தன்னை அழைக்கப்போவதுமில்லை என்பதை தாமதமாக புரிந்துகொண்டார். "அவள் ஆயுளையும் சேர்த்துத் தந்து தவிக்கவல்லவா விடுகிறாள்?" சிவகாமியை முறைத்துப்பார்த்தார். நானிங்கு தினம் தினம் அவளை எண்ணி தவிப்பது தெரிந்தும் அவள் சிரித்துக் கொண்டுதானே இருக்கிறாள்? சுய நலக்காரி!!!!! நீ என்னைக் கூப்பிடா விட்டால் என்ன? நான் உன்னிடம் வருகின்றேன்" என்று திடமான மனத்துடன் தூக்க மாத்திரைப் போத்தலை கையிலெடுத்துக் கொண்டார். இப்போதும் கூட சட்டமிட்ட கண்ணடிக்குள் இருந்து புன்னகைத்துக் கொண்டிருந்தாள் சிவகாமி.

# யாழ்.சர்வதேச திரைப்பட விழா

## இன்னும் தீரா சர்ச்சைகள்



○ ஆரூரன்

யாழ்ப்பாணத்துக்கென தனியான ஒரு சர்வதேசத் திரைப்பட விழா இப்போது நடைபெற்று வருகிறது. உலகின் புகழ் பெற்ற நகரங்களைப் போல நாமும் நமக்கென்றோரு சர்வதேச திரைப்பட விழாவைத் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக நடத்துவது பெருமைக்குரிய விடயம் தான். இனித் தொடர்ந்து வரும் வருடங்களிலும் இந்தப் பயணம் நீளும். சர்வதேச திரைப் படங்களை-அதுவும் விருதுகள் பெற்ற படங்களை- இலவசமாக எங்களூரில் பார்க்கும் வாய்ப்பு கிடைப்ப தென்பது சினிமா ரசிகர்களுக்கு இனிப்பான விருந்துதான். போரின் காயங்களில் இருந்து மீண்டு கொண்டிருக்கும் ஒரு நகரத்துக்கும் அதன் மக்களுக்கும் இது போன்ற திரைப்பட விழாக்கள் ஒத்தடமாக அமையும். இந்த வருடமும் 70க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப் படுகின்றன. மிகப்பெரும் பணம், நேரம் என்பவற்றை செலவிட்டு இந்தச் சர்வதேச திரைப்பட விழாவை நடத்துகின்ற ஏற்பாட்டாளர்கள் பாரட்டுக்குரியவர்களே இருப்பினும் ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் சேர்வது நல்லதல்ல.

என்னதான் யாழ்.சர்வதேச திரைப்பட விழா பற்றிய நல்ல அபிப்பிராயங்கள் இருப்பினும் சில செயற்பாடுகள், அதன் மீதான கேள்விகளையும், ஆதங்கங்களையும் உண்டாக்குகின்றன.

முதலாவது சர்ச்சைக்குரிய செயற்பாடு சர்வதேச திரைப்பட விழா நடைபெறும் நாட்களின் தெரிவிலேயே ஏற்பட்டு விடுகின்றது. கடந்த வருடம் செப்ரெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை திரைப்பட திருவிழா நடைபெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிகழ்வை தொடக்கி வைத்திருந்தார். ஆனால் நிகழ்வு ஆரம்பித்த செப்ரெம்பர் 15 ஆம் திகதி தான் நல்லூரில் சாகும் வரை உண்ணா விரதம் இருந்த தியாகி திலீபன் தன்னுடைய உண்ணாநோன்பை தொடக்கிய தினம். அத்தோடு திரைப்பட விழா நடைபெற்ற காலப்பகுதியில் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் போர்க்குற்றம் தொடர்பில் இலங்கைக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்படவிருந்தது. எனவே இவ்விரண்டு முக்கிய நிகழ்வுகளையும் மக்களிடமிருந்து மறக்கடித்து, திசை திருப்பும் ஒரு முயற்சியாகவே யாழ்.திரைப்பட விழா பற்றி சிலரால் கடந்த வருடம் நோக்கப்பட்டது. தமிழர்களுக்காக பன்னிரு நாள்கள் பசியோடு நல்லூரில் போராடிய ஒரு வீரனை தமிழ் மக்கள் தம் உணர்வுகளில் ஏந்தி வைத்துள்ளனர். திலீபனுக்கு காவடி எடுத்து வந்து வழிபட்டவர்களும் இங்கு இருக்கிறார்கள். புலிகளின் ஏனைய போராளிகளை விடவும், திலீபனுக்கு தனியிடம் தமிழ் மக்களிடையே உண்டு.
இதன் காரணமாக திரைப்பட விழாவுக்கு எதிரான கருத்துக்கள் ஒரு தரப்பினரால் பரவலாக முன்வைக்கப்பட்டன. ஆயினும் நிகழ்வு திட்டமிட்டபடி நடைபெற்று முடிந்தது. ஒருவேளை இப்படியான எதிர்மறையான கருத்துக்கள் வந்திராவிட்டால் திரைப்பட விழாவுக்கான பார்வையாளர் எண்ணிக்கை இன்னும் அதிகரித்திருக்கக் கூடும்.

தவறு விடுதல், எதிர்பாராத் தவறுகள் வருதல் என்பது இயல்பே. ஆனால் அந்தத் தவறுகள் தொடர்வதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. கடந்த வருடம் எத்தனையோ பேர் எடுத்து சொல்லியும், இந்த முறையும் யாழ். திரைப்பட விழாவுக்காக காலத்தெரிவு சர்ச்சைக்குரியதாகவே அமைந்திருக்கிறது. கடந்த முறை திலீபன் உண்ணாவிரதம் தொடங்கிய தினத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததைப் போல, இந்தமுறை திலீபனின் உண்ணாவிரதக் கடைசி நாட்களைக் குறிவைத்துத் திரைப்பட விழாவுக்கான காலத்தெரிவு இடம் பெற்றுள்ளது. இதனால் கடந்த வருடம் தற்செயலாகவே திலீபனின் நினைவு நாளில் யாழ்.திரைப்பட விழா நடைபெற்றது என்று நினைத்தவர்கள் கூட, உண்மையாகவே திலீபனின் நினைவு தினத்தை மறக்கச் செய்யத் தான் இந்தத் திரைப்பட விழா இடம் பெறுகின்றதோ என ஐயப்படத் தொடங்கிவிட்டார்கள். முற்றுமுழுதாக ஏற்பாட்டாளர்களே இத்தகைய எதிர்மறையான விமர்சன உருவாக்கத்துக்கு காரணம். கடந்த வருட சர்ச்சையைக் கருத்தில் கொண்டிருந்தால் இம்முறை காலத்தெரிவின் போது, திலீபனின் நினைவு நாட்களைத் தவிர்த்து, செப்ரெம்பர் மாதத்தின் ஏனைய 18 நாள்களில் 5 நாட்களை திரைப்பட விழாவுக்காக தெரிவு செய்திருக்க முடியும். அப்படியல்லாமல் திரும்பவும் வலிந்து சர்ச்சையை விலைக்கு வாங்குவது போல நாட்களை தெரிவு செய்த ஏற்பாட்டாளர்களே அதற்கான எதிர்மறையான விமர்சனங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள்விட்ட தவறே திரைப்பட விழாவுக்கு ஒரு அரசியல் சாயத்தை வலிந்து பூசவைத்துள்ளது.

திரைப்பட விழாவுக்கான காலத்தெரிவில் நல்லூர் திருவிழா முடிய வேண்டும் என்பதில் காட்டிய அக்கறையை திலீபனின் நினைவு தினம் முடிய, அல்லது அதற்கு முன்னதாக வைக்க வேண்டும் என்பதில் காட்டவில்லை.


அடுத்த வருடமும் இதே பல்லவி தொடருமானால் நிச்சயமாக யாழ்.திரைப்பட விழாவுக்கான எதிர்ப்பலை இன்னும் அதிகரித்து, அது தேவையில்லாத முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி விடக்கூடும். நந்தவனத்து ஆண்டி போல, குயவனைக் கெஞ்சிக் கூத்தாடி, வாங்கி வந்த யாழ். திரைப்பட விழா எனும் தோண்டியை, காலத்தெரிவில் காட்டப்படும் அலட்சியத்தால் போட்டுடைக்காமல் பாதுகாப்பது ஏற்பாட்டாளர்களின் கைகளிலேயே உள்ளது.

குடாநாட்டின் கொண்டாட்டமென்று இதனை ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் உண்மை வேறு விதமாக இருக்கிறது. யாழ்.திரைப்பட விழாவில் பங்கேற்கும் குறும்படங்கள், திரைப் படங்கள் என்பனவற்றை கொழும்புக்கே அனுப்ப வேண்டியுள்ளது. தனது நகரத்தின் திரைப்பட விழா ஒன்றுக்காக இன்னொரு நகரத்துக்கு தபாலில் இறுவட்டுக்களை அனுப்பும் நிலை யாழ்ப்பாணத்துக் குறும்படப் படைப்பாளிகளுக்கு நேர்ந்துள்ளது. இது பற்றி திரைப்பட விழா ஏற்பாட்டாளர்களிடம் விளக்கம் கேட்டபோது, “திரைப் படங்களை மதிப்பீடு செய்யும் நடுவர்கள் வெளிநாடுகளில் இருந்து கொழும்பில் வந்து தங்கி இருப்பதால், அவர்களின் வசதிக்காகவே படங்களைக் கொழும்புக்கு அனுப்புமாறு கோரினோம்” என்று கூறினார்கள். நடுவர்களின் மதிப்பீடு, திரையரங்க வசதி, தணிக்கை என்பவற்றுக்காக கொழும்புக்கு படங்களைக் கொண்டு செல்வது தவறல்ல. ஆனால் உங்கள் நகரத்தின் திரைப்பட விழா என்று சொல்லிவிட்டு, இன்னொரு நகரத்துக்கு படங்களை அனுப்புமாறு கோருவது பொருத்தனமான செயலல்ல. வேண்டுமானால் யாழ்.படைப்பாளிகளின் படங்களை யாழ்ப்பாணத்தில் ஒரு தற்காலிக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவித்து, இறுதித்தினம் முடிவடைய அவற்றை கொழும்புக்கு விழாக் குழுவினர் கொண்டு சென்று நடுவர்களிடம் மதிப்பீடு செய்யக் கொடுக்கலாம். அத்துடன் குறும்படத்துக்கு நடுவர் மதிப்பீடு அவசியமில்லை. ஏனெனில் யாழ்.திரைப்பட விழாவில் குறும்படங்களுக்கு பார்வையாளர் விருதே வழங்கப்படுகின்றது. குறும்படங்களுக்கு பார்வையாளர்கள் வழங்கும் வாக்குகளின் எண்ணிக்கையே அந்த விருதைத் தீர்மானிக்கிறது. (இந்த முறை கூட ஆரோக்கியமானதல்ல. அதிக எண்ணிக்கையான பார்வையாளர்கள் ஒரு சாதாரண/ அதற்கும் குறைவான படத்துக்கு அதிக வாக்குகளை வழங்கும் போது மிகச் சிறந்த குறும்படங்கள் விருதுக்குரிய தகுதியை இழக்க நேரிடுகின்றது) எனவே குறும்படங்களையாவது யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்..அதுவும் இந்த முறை செய்யப்படவில்லை. அடுத்த வருடம் இதுவும் சீர்செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு கடந்து போக மட்டுமே முடிகின்றது.

மூன்றாவது பிரச்சினை என்னவெனில், திரைப்பட விழாவின் வெளிப்படுதன்மை. யாழ்.திரைப்பட விழாவுக்கான உத்தியோக பூர்வ இணையத்திலும், முகப்புத்தகப் பக்கத்திலும் தான் விழாவுக்கான திகதி, போட்டி விண்ணப்பம் என்பன வெளியிடப்பட்டன. எனவே இந்த இணையத்தை/ முகப் புத்தகப் பக்கத்தை அறிந்தவர்கள், பின் தொடருநர்கள் மட்டுமே இந்தத் திரைப் படவிழா குறித்து அறிந்து, தம் படைப்புக்களை அனுப்ப முடிந்தது.போட்டிக்கான முடிவுத் திகதி முடிந்த பின்னர் தான் பத்திரிகைகள் வாயிலாக போட்டி பற்றியும் போட்டித் திகதி நீட்டிக்கப்பட்டமை பற்றியும் அறிவிக்கப்பட்டது. முதலே இது குறித்து தேசியப் பத்திரிகைகள், உள்ளூர் பத்திரிகைகள் வாயிலாக அறிவித்திருந்தால் இன்னும் பலரை இந்தத் தகவல்கள் எட்டியிருக்கும். இப்போது சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லை என்ற மாதிரி, கடந்த முறை போட்டியில் பங்கேற்றவர்களே இம்முறையும் குறும்படப் போட்டிகளில் பங்கேற்கும் நிலைமை. கடந்த முறை கூட குறும்படங்கள் பகிரங்க அறிவித்தல் ஏதுமின்றி “அஜந்தா 14” என்ற செயற்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவையே காட்சிப்படுத்தப்பட்டன. அவற்றில் பெரும்பாலான குறும்படங்கள் அவற்றின் படைப்பாக்கத் திறனைக் கேள்விக்குட்படுத்துபவையாகவே இருந்தன. எனவே குறும்படங்களுக்கான அல்லது திரைப்படங்களுக்கான கோரலில் சர்வதேசரீதியான அறிவிப்புக்கள், செய்திகள் பரவலாக ஊடகங்களில் வெளிவருவதை யாழ்.திரைப்பட விழாவின் ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்படிக் கவனத்தில் கொள்ளப் படவேண்டிய ஊடக வெளிச்சத்தை இந்த முறையும் ஏற்பாட்டாளர்கள் கடைசி நேரத்தில் பெற முயன்றமை படைப்பாளிக்கே பாதகமாக இருக்கும். அத்துடன் தங்கள் நகரத்தில் நடக்கும் ஒரு சர்வதேசத் திரைப்பட விழாவுக்கு கூட- முறையான அறிவித்தல் இன்மையால்- பங்கேற்கும் வாய்ப்பை குறும்பட படைப்பாளிகள் சிலர் இழந்துள்ளனர்.

அடுத்த முறையாவது இந்த சர்ச்சைகள் இல்லாத திரைப்பட விழாவைக் காண முடியுமா?

Jaffna
INTERNATIONAL
CINEMA FESTIVAL



# சோறும் வேறும்

த.அஜந்தகுமார்

அ)

அம்மாவும் தங்கச்சியாக்களும் எங்கேயோ ஒரு கலியாண வீட்டுக்குப் போறதுக்காக வேளைக்கே சோறும் கறியும் காய்ச்சி வைச்சிட்டு ஒரு "நடப்போட" போட்டினம். பதினொரு மணிபோல அப்பா வயிற்றில கையை வைச்சுப் பசிக்குது எண்டார். நானும் ஒரு துள்ளுத் துள்ளிக் குசினிக்குப் போய் கோப்பையில சோறைப் போடைக்கைதான் கவனிச்சன், ஒரே நுள்ளான். என்ரை கையிலயும் ஏறத் துவங்கீட்டுது. எனக்கு விசராக்கிப் போட்டுது. அப்பான்ரை பசிய நினைக்கக் கவலையாக் கிடந்திச்சுது. அடுப்பைப் பார்த்தா நெருப்புத் தணலும் இல்ல, எல்லாம் சாம்பலாப் போச்சுது. வெளியில வந்து நுள்ளானை கையால பிடிச்சு நசிப்பம் எண்டு பாத்தா அது பிடிச்சு அமத்த அமத்த ஒவ்வொரு சோற்றுப் பருக்கையும் பெத்துத் தள்ளுற மாதிரி எங்கிருந்தோ வந்து கொண்டே இருக்குதுகள். வெயிலில் வைச்சிட்டுப் பார்த்துக் கொண்டு நிற்பம் எண்டு முடிவெடுத்தன். அவை அந்தச் சுட்டெரிக்கும் வெயிலில் மேல்நோக்கி வருவதும் சில அவசரமாய்க் கீழ் நோக்கிப் போவதுமாய் இருந்தன. அந்தப் போக்கும் வரத்தும் வெயில் பட எனக்கு ஆக்கினையாய் இருந்தது. என் முயற்சி பூரண வெற்றியளிக்காது என்பதை உணர்ந்து கொண்டேன். கிண்ணத்தைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தேன். அப்பா என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். குளுக்கோமாவினால் அப்பாவின் கண்களின் பார்வை நன்றாகக் குறைந்து போயிருந்தது. தோள்களில் கையை வைத்தேன் கையை நீட்டினார். நான் ஒரு முடிவெடுத்தேன். கறியுக்கையும் நுள்ளான் இருக்கோ எண்டு பாக்கையில்லை. எனக்கும் சோறைப் போட்டு ஒண்டையும் இனிப் பாக்கிறயில்ல "நுள்ளான் சாப்பிட்டா நூறாண்டு வாழலாம்" எண்டு சொல்லிற வதானே என்று அப்பாவுக்கும் கொடுத்து நானும் குழைத்துச் சாப்பிடத் தொடங்கினேன். இரண்டு மூன்று நாள் நுள்ளான் வயிற்றுக்குள் ஓடித் திரியிற மாதிரி ஊருற மாதிரி இருந்திச்சு. இப்ப எழுதயிக்கையும் கையில ஊருற மாதிரிக் கிடக்கு.

ஆ)

எனக்கு அவற்ற தாடியில சரியான விருப்பம். நல்ல வெள்ளைத் தாடி. வயித்துக்குக் கிட்ட வந்து நிற்கும். நுனியை முடிஞ்சு விட்டிருப்பார். அவற்றை கண்கள் நல்ல பிரகாசம். நரம்பெல்லாம் வெளியில தெரியும். அவற்றை கை எப்பவும் சரியான நடுக்கமாய் இருக்கும். கோயில்ல அவர்தான் பூசையாக்குறவர். நான் தாடியப்பா எண்டுதான் சொல்றனான். அவர் இனிப்பில்லாத பச்சையரிசிப் புக்கையும் கொஞ்சம் தோல் கறுத்த கதலி வாழைப்பழமும் தருவார் எனக்கு அதைச் சாப்பிடச் சரியான விருப்பம். அவர் சாமியாரான கதையை ஒராள் சொன்னதில் இருந்து சரியான கவலை. அவர் சின்னனில இருந்து மச்சம் சாப்பிடுறதில்லை. ஆனா மனிசிக்காரி சாப்பிடுற விசயம் இவருக்குக் கட்டினபிறகுதான் தெரிஞ்சது. ஆனா அதைப் பொருட்படுத்தாமல் இருந்தார். இவர் மச்சம் சாப்பிறதில்ல எண்டு தெரிஞ்சும் அவ மச்சம் மணக்கிற ஒரு கோப்பையுக்கை இவருக்கு சோறைப் போட்டுக் கொடுத்திருக்கிறா. இவர் கோபத்தோட "சந்நியாசி வேசங் கொண்டு சாகிறன்ரி அம்மா உன்னால" எண்டு சொல்லிப்போட்டு வெளிக்கிட்டுட்டாராம்.

இ)

எனக்கு அவர் ஒரு அண்ணன் முறை. என்னை உணவகத்துக்கு சாப்பிட அழைத்திருந்தார். என்னுடன் வந்திருந்த பேராசிரியரையும் அழைத்து வருகிறேன் என்பதை அவருக்குச் சொன்னேன். மகிழ்ச்சியோடு அழைத்து வரச்சொன்னார். இலண்டனில் உள்ள அந்த உணவகத்தின் பெயரான "சம்பல்" என்பதும் அங்கே பின்னணியாக அழகுபடுத்தப்பட்டிருந்த எங்கள் பாரம்பரியமான சமையல் பாரம்பரியப் பொருட்களும் மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தன. சாப்பாடு வந்தது. சாப்பிடத் தொடங்கினோம். பேராசிரியர் கோப்பையோடு போராடிக் கொண்டிருந்தார். போதும் என்பதுவாய் அவர் நிமிர்ந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அண்ணர் விடவில்லை. "சாப்பிடுங்கோ சேர்" என்றார். இவர் இரண்டு மூன்று வாயை வைத்துவிட்டு மீண்டும் நிமிர்ந்தார். ஆனால் அண்ணர் விடவில்லை. கோப்பையை வழிக்கும் வரை அண்ணரின் வார்த்தைகள் பேராசிரியருக்கு ஆய்க்கினை கொடுத்தபடியே இருந்தன. எனக்குச் சங்கடமாக இருந்தது. கடையை விட்டு வெளியே வந்தோம். பேராசிரியர் மெல்லிசாய் சிரிச்சு மண்டிக் கொண்டு சொன்னார், "என்ரை மனிசி கூட இப்பிடிச் சாப்பிடெண்டு ஆக்கினை பண்ணினதில்ல" நான் சங்கடத்துடன் சிரித்தேன். அண்ணர் சொன்னார் "எனக்கு இங்க வந்த பிறகு சோற்றின் அருமை அதிகம் தெரியும். எனக்கு அதை யாரும் கொட்டினால் என்னை அறியாமலே ஏதும் சொல்லிப் போடுறனான். மனிசியோடும் பிள்ளைகளோடும் மல்லுக் கட்டி அது வேறை ஆக்களோடையும் தொத்திட்டுது. குறை நினைக்காதையுங்க சேர்" என்றார்.



கடையில் இருக்கும் வரை சோறைக் கொட்டிப் போடுவினம் எண்டுதான் அவர் "சன்னதம்" ஆடியிருக்கிறார் எண்டு எனக்கும் புரிஞ்சுது. பனியுக்கை கஷ்டப்படுறவன் சுடுசோறைச் சாப்பிடுறதே கனவாக இருக்கேக்கை அண்ணற்றை எண்ணம் பிழையில்லை என்பதைப் போலவே பேராசிரியரும் என்னைப் பார்த்துச் சிரித்தார். இவை அனுப்பிற காசை வைச்சுக்கொண்டு இங்க சன்னதம் ஆடுறவையின்ரை எண்ணந்தான் எனக்கு உடனே வந்திச்சு. சிரிப்பும் நெளிஞ்சு மறைஞ்சுது

ஈ)

போராளியாக இருந்த மலைமகளின் "ஒரு கோப்பைத் தேநீர்" என்ற கதையில வாற ஒரு சம்பவம் எனக்கு இப்ப உடனே ஞாபகத்துக்கு வருகுது.

"காப்பரணைப் பலப்படுத்தவெனத் தரப்பட்டிருந்த உரப்பைகளுள் நல்லதாக ஒன்றை எடுத்துக் கழுவி உதறி வெயில் படக்கூடிய இடமாகப் பார்த்து, விரித்து, அதன் மேல் சோற்றுப் பருக்கைகளைப் பரப்பிக் காயவிட்டு மீண்டும் அரிசியாக்கினோம் தேநீர் சுடவைக்கும் அலுமினியப் பாத்திரத்தில் அதைக் கொட்டிக் கிளறிச் சூடேற்றி, அடுப்பிலிருந்து இறக்கி, அந்தப் பாத்திரத்தில் வைத்தே இடித்துப் பொடியாக்கினோம். வெகு அபூர்வமாக வந்த பிட்டையும் கூட காயவைத்து வறுத்தோம். அதில ஒரு பிடி அள்ளி வாயில் போட்டால் நறுக் முறுக் என்ற ஒலியுடன் தேவாமிர்தமாக வாயிலே கரையும்...... கைதவறிக் கூட ஒரு சோற்றைக் கீழே போடமாட்டோம். மூன்று நேரமும் எஞ்சிய சோற்றை சிற்றுண்டியாக்கும் திட்டம் உடனடியாகவே அனைத்துக் காவலரண்களுக்கும் பரவலாக்கப்பட்டது" (புதிய கதைகள், பக் 18 -19)

எஸ்.ராமகிருஷ்ணனின் நாவல்களில் எனக்கு மிகவும் பிடித்த நாவல் "நெடுங்குருதி" அந்த நாவலில் வரும் சென்னம்மா என்ற பாத்திரம் பல நாட்களாக என்னைத் தொந்தரவு செய்தது.

"சென்னம்மாவின் கைகள் தரையைத் தேய்த்தபடியே வந்து மெல்ல எறும்புகளை அள்ளி வாயில் போட்டு மென்று தின்று விடுவாள். அவள் உதட்டு இடுக்கில் சிக்கி வெளியேறும் எறும்புகள் கூட அகன்ற அவள் முகத்தின் மேடு பள்ளங்களைக் கண்டு திகைத்து பயத்தோடு புருவ மயிர்களில் தடுமாறும் போது அவள் விரல்கள் எறும்புகளைத் தேடிப்பிடித்து நாக்கில் ஒட்ட வைத்துக்கொள்ளும்"

சி.மகேந்திரனின் "நானும் சினிமாவும்" என்ற நூலில் சோற்றின் அருமையை அவர் சொல்லும் விதம் அலாதியானது. விதைக்கும் போது சில நெல் மணிகள் தவறிவிடுகின்றன. அதில் சில முளைப்பதில்லை. கதிராகும்போது சிலவற்றைப் பறவைகள் தின்றுவிடுகின்றன. அறுவடையில் சில தவறிவிடுகின்றன. வீடு கொண்டும் வரும் போது சில, அரிசியாக்கும் போது சில, அரிசியாக்கியதை சோறாக்கும் போது சில என்று கோப்பைக்கு எவ்வளவோ போராடி வரும் சோற்றைச் சாதாரணமாக நாம் கொட்டிவிடுவது அபத்தம் அல்லவா? என்ற பொருள்பட எழுதியிருந்தார்.

உணவுஎன்பதுதனியேவயிற்றுக்கானது மட்டுமல்ல. அதுமனதோடும் பண்பாட்டோடும் பிணைந்தது. வாழ்வின் அடையாளம் ஆவது. 2006 இல் ஏ -9 வீதி பூட்டப்பட்ட போது தட்டுப்பாட்டின் போது பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்பில் சஞ்சரித்திருந்தோம். உணவை மருத்துவர்கள் மருந்து என்கிறார்கள். ஒரு சாண் வயிற்றுக்கானது வாழ்வும் உழைப்பும் என்று சொல்லிக் கொண்டே அதில் நாம் அக்கறை கொள்வதில்லை. கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத் தான் கற்பித்தானா? என்ற வறுமை வரும் போது அருமை வரும் போது புதுப்புதுச் சேமிப்புகளில் மனம் இறங்கி விடுவதும் நடந்துவிடுகின்றது. நோய் வந்து கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமலும் இருக்கும் போதும் அதன் பெறுமதி பிரமாண்டம் கொள்கின்றது. அப்போது உயிராகவும் உணவு மாறும். உணவு என்பது உயிரையும் தரும், உடலையும் வளர்க்கும். உயிரையும் அழிக்கும், உடலையும் கெடுக்கும். எல்லாம் எம்கையிலும் வாயிலும்தான்.

## பாவம் இந்தக் குழந்தைகள்



ஞானா

உலக நாடுகளெங்கும் முளைவிட்டுள்ள போர்ச் சூழலால் 50 மில்லியன் பிள்ளைகள் வரை இடம் பெயர்ந்துள்ளார்கள் என்கிறது UNICEF அமைப்பு. பெற்றோர் கூட வராமல் அகதி அந்தஸ்து கோரும் பிள்ளைகள் தொகை கடந்த இரண்டு வருடங்களில் மும்மடங்காக அதிகரித்திருப்பதாக எச்சரித்துள்ளது இந்த அமைப்பு.

யுத்தம், வன்முறை காரணமாக தனியனாகவே தமது நாடுகளின் எல்லைகளைக் கடந்து வேற்று நாடுகளுக்கு செல்வது வெகுவாக அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. 100,000 க்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர் பெற்றோர் எவருமின்றி 78 உலக நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருப்பதாகவும், 2014 இல் காணப்பட்ட தொகையைவிட மும்மடங்கு அதிகரித்திருப்பதாகவும் அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

20 மில்லியன் வரையிலான பிள்ளைகள் போர்ச்சூழல் காரணமாக மாத்திரம் இடம்பெயரவில்லை. வீட்டில் நிலவும் வறுமையின் கொடுமையும் இவர்களை வீட்டையும் நாட்டையும் விட்டு விரட்டியடித்துள்ளன.

2015 ஆம் ஆண்டில் இந்த ஐ.நா அமைப்பின் பராமரிப்பின் கீழ் வந்துள்ள பிள்ளைகளில் 45 வீதமானவர்கள் சிரியா, ஆப்கானிஸ்தான் நாட்டிலிருந்து வந்தவர்களாம்.

படிப்பும் இன்றி, பணமும் உண்ண நல்ல உணவும் இன்றி இப்படிக் குழந்தைகள் தவிக்க, எல்லா வசதிகள் இருந்தும் தங்கள் புலன்களை வேறுவழிகளில் செலுத்தி சீரழியும் பிள்ளைகளை நினைக்க மனம் வேதனைப்படுகின்றது.



○ தணிகன்

# அன்பார்ந்த ஊடக பிரபலங்களே


தற்காலச் சூழலில் மலிந்த ஒரு விடயமாக எல்லோராலும் பேசப்படும் விடயம் வீதி விபத்துக்களும் அதனால் ஏற்படும் மரணங்களுமே. இது உயிர் சம்பந்தப் பட்ட, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய, மிகமுக்கியமான ஒரு விடய மாக இருந்தாலும், மேடை அமைத்து விவாதிக்க இது ஒரு விவாதப் பொருளு மல்ல. அதில் பயனுமல்ல. ஆனால் அதை பற்றி விவாதிப்போர் அதை புரிந்து கொள்வதில்லை.

வீதிவிபத்து மரணங்கள் என்பது ஜீரணிக்க முடியாத ஒன்றுதான். ஆனால் வீதி விபத்துக்களை முற்று முழுதாக தவிர்க்கவும் முடியாது தடுக்கவும் முடியாது. ஏனென்றால் அது ‘விபத்து’. எதிர்பாரா நேரத்தில் எதிர்பாரா விதமாக திடீரென ஏற்படும் சம்பவமே விபத்து. ஒரு கொடூரமான வீதிவிபத்துக்கு பின்னர், இந்த ஊடக (முக்கியமாக முகநூல்) பிரபலங்களின் தொல்லை தாங்க முடியவில்லை. எல்லாம் ஒரு கிழமைக்கு மட்டும் தான் என்பது தெரிந்தாலும் அதற்குள் இவர்கள் இந்த ஊடகவெளியில் படுத்தும் பாடு சகிக்க முடியவில்லை.

‘அன்பார்ந்த சாரதிகளே..’ ‘மதிப்புக் குரிய முதலமைச்சரே..’ ‘மாண்புமிகு ஜனாதிபதியே..’ என்று ஆளாளுக்கு தலைப்பை போட்டு எழுதி தள்ளுகிறார் கள். இதனால் வீதிவிபத்து குறையத்தான் போகின்றதா, போற உயிர்கள் போகாமல் தான் இருக்குமா? இல்லவே இல்லை. நடக்கின்ற விபத்துகள் நடந்து கொண் டே தான் இருக்கும். போகின்ற உயிர்க ளும் போய்க்கொண்டே தான் இருக்கும். ஊடகமொன்றிலோ இல்லை முக நூலிலோ அதை பற்றி பகிர்வதனால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. நானும் வீதி விபத்துக்களுக்கு எதிரான எனது கருத்துக்களை கூறிவிட்டேன், வீதி விபத்துக்களை குறித்தும் அதனால் ஏற்படும் மரணங்கள் குறித்தும் நானும் வருந்துகின்றேன் என்ற ஒரு மனத்திருப்தி மட்டுமே அங்கு எஞ்சுகின்றது.

வீதிவிபத்துக்கு பொதுவான காரணங் களாக இருப்பவை மூன்று காரணிகள். வீதி, வாகனம், சாரதி. அபாயகரமான வீதி கள் என்பது ஒரு காரணியாக இருந்தாலும் இப்போது நடைபெறும் வீதி விபத்துக்க ளுக்கு அவை முதன்மைக் காரணியாக அமைவதில்லை. செம்மையான கார்பெட் வீதிகள், அடிக்கு அடி எச்சரிக்கை பலகைகள், வீதிஒழுங்கு சமிக்ஞைகள், போக்குவரத்து பொலிஸ் என வீதியின் தரமும் பாதுகாப்பும் முன்னர் இருந்ததை விட பலமடங்கு உயர்வாகவே உள்ளது. எனவே நாம் பயணிக்கும் வீதிகள் பாது காப்பானவையே.


இரண்டாவது காரணியாக வாகனம் இருக்கின்றது. வாகனம் தரமற்றதாக இருக்கும் போதும், சடுதியான இயந்திர கோளாறும் ஏற்படும் போது மட்டுமே விபத்தின் முதன்மை காரணியாக வாக னம் அமைகின்றது. ஆனால் ஒப்பீட்டள வில் இத்தகைய சந்தர்ப்பங்கள் மிகவும் அரியதானதாகவே அமைகின்றன.



இந்த இரண்டையும் விட பெரும் பாலும் முதன்மைக் காரணியாக இருப்பது சாரதிகளே. சாரதிகளின் அச ண்டையீனம், மிதமிஞ்சிய வேகம், வீதி ஒழுங்குகளை மீறல், தூக்கமின்மை, தமக்கிடையான போட்டி ஓட்டங்கள் என்று சாரதிகளின் பிழைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனாலும் இந்தப் பிழைக ளெல்லாம் காலாகாலமாக வாகன சாரதிகளால் இழைக்கப்படுகின்றவைதான்.

இங்கு சொல்லித் திருந்தியவர்களை விட பட்டுத் திருந்தியவர்களே எம்மிடை யே அதிகம். ஆனால் அப்படிப்பட்டுத் திருந்தும் சந்தர்ப்பங்களில் எதாவது ஒரு உயிர் பலியாகின்றது. எனவே சக மனிதர் கள் நாம் என்ன சொன்னாலும் அதை எம்மைப் போன்ற இன்னொரு சக மனிதன் செவிமடுத்து கேட்பது என்பது மிகவும் அரிது. அதிலும் தமிழர்களுள் அந்த நல்ல பண்பு இல்லையென்றே சொல்லலாம். எனவே முகநூலிலும் ஊடகங்களிலும் நீட்டி எழுதப்படும் எந்தவொரு அறிவுரைகளையும் அவர்கள் செவிமடுக்க போவதில்லை. தயாராகவுமில்லை.

இதுவரை தொடர்ந்து அசண்டையீ னமா இருந்து வந்த ஒரு வாகன சாரதி தொடர்ந்தும் அவ்வாறே இருக்கப் போகின்றான். கார்பெட் வீதிகளில் வேகம் நூறில் பறந்து பழகிய பேருந்து சாரதி வேகத்தை இனிமேல் அறுபதுக்கு குறைக்கப்போவதில்லை. வேகம் நூறில் தொடர்வது நிச்சயம். இதேபோல் தான் வீதியொழுங்குகளை மதிக்க தெரியாத வன் தொடர்ந்தும் வீதியொழுங்குகளை மீறுவான் என்பதில் சந்தேகமில்லை.



சரியான தூக்கம் இல்லாமல் நீண்ட தூரப் பேருந்து சேவையில் தொடர்ந்து ஈடுபடும் சாரதிகளின் ஒரேயொரு குறிக் கோள் பணம் ஈட்டுவதே தவிர பொதுநல சிந்தையோ சேவை மனப்பான்மையே அல்ல. எனவே உங்களின் வேண்டுகோள் அவனது காதுகளை எட்டப்போவ தில்லை.இத்தைகைய பிழைகளைவிடும் சாரதி ஒருவனாலே வீதி விபத்துகள் ஏற்படுகின்றன. இத்தனை பிழைகளுள் ஒன்றை செய்யக் கூடிய ஒருவன் தன் உயிரை பற்றியே சிந்திக்கவில்லை. அவனிடம் போய் அடுத்தவன் உயிரைப் பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள் என்று சொல்வது முட்டாள் தனம்.

எனவே தான் சொல்கின்றேன், உங்களது ஆத்ம திருப்திக்காக நடந்த விபத்துக்களின் படங்களை தரவேற்றி உங்களது ஆதங்கங்களை முகநூலிலும் ஊடகங்களிலும் மட்டும் கொட்டிதீர்க்கும் அன்பர்களே, இனிமேலாவது அதை நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களது வேண்டுகோள் நீங்கள் எதிர்பார்க்கும் நபரை நிச்சயம் சென்றடையப் போவதில்லை. மாறாக உங்களது பதிவும் நீங்கள் பகிரும் படங்களும் அந்த விபத் தில் மரணித்தவர்களின் உறவுகளையே இன்னும் மனதளவில் பாதிக்கும்.

சாலையில் நூறு வாகனங்கள் இருக்கு மிடத்து அதிலுள்ள முறையற்ற ஒரு சாரதி எஞ்சியதொண்ணூற்றொன்பது வாகனகளுக்கும் அச்சுறுத்தலாகவே இருப்பான். நீங்கள் எழுதும் பதிவுகளால் பகிரும் புகைப்படங்களால் அந்த ஒருவன் திருந்த போவதுமில்லை. எந்த விபத்தும் நடக்காமல் தடுக்கப்பட போவதுமில்லை.

வீதிவிபத்தின் புகைப்படங்களை முந்திக்கொண்டு முகநூலில் பகிரும் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

வீதி விபத்தை பற்றிய செய்திகளை பகிரும் போது அதில் மரணித்தவர்களின் புகைப்படங்களையும், விபத்தின் உயிர் சேதங்களையும், இரத்தம் சிந்தும் மரணித் தவர்களது உடல்களின் படங்களை தர வேற்றம் செய்யும் முன் சற்று யோசி யுங்கள். இது அவர்களது உறவுகள் பலரையும் சென்றடையும், எந்த ஒருவரும் தமது அன்புக்குரியவரை அப்படியொரு நிலையில் பார்க்க விரும்பமாட்டார்கள். விபத்தின் தாக்கம் கொஞ்ச நாளில் மறைந்தாலும் நீ ங்கள் பதிவேற்றிய புகைப்படங்கள் அழியப்போவதில்லை. உடமைச் சேதங்களை பகிர்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருந்தாலும் உயிர் சேதங்களை பகிரும் முன்னர் சற்று யோசியுங்கள்.

அதை விட, சாரதிகளுக்கு முக நூலிலும் ஊடகவெளியிலும் அறிவுரை கூறுவோருக்கும் வேண்டுகோள் விடுப் போருக்கும் நான் வழங்கும் அறிவுரை யும் வேண்டுகோளும். நான் ஒரு ஊடக பிரபலம், சமூகத்தில் என்ன விடயம் நடந்தாலும் பதிவிடுவேன் என் கருத்துக் களை கொட்டுவேன் என்று நினைத்தால், உங்களுக்கு சிறிய அறிவுரை. நீங்கள் தாரா ளமாக கருத்துக்களை தெரிவியுங்கள், மனுக்களையும் மடல்களையும் எழுதுங் கள் ஆனால் ‘அன்பார்ந்த சாரதிகளே..’ என்று தொடங்காதீர்கள். அது பயனற்றது.

‘மதிப்புக்குரிய வாகன உற்பத்தியாளர் களே..’ என்று எழுதுங்கள். நவீன தொழில் நுட்பங்களை கொண்ட தானியங்கிப் பொறிமுறையைக் கொண்ட வாகனங்களை அதிகளவிலும் குறைந்த விலையிலும் சந்தைப்படுத்துங்கள் என்று வேண்டுங்கள், அது முடியாதென்றால் குறைந்தபட்சம் இலங்கை போன்ற பொருளாதார பலமற்ற நாடுகளுக்காக உச்சவேகம் எண்பது மட்டுமே கொண்ட வாகனங்களையும் தயாரியுங்கள் என்று வேண்டுங்கள்.

‘மாண்புமிகு இலங்கை போக்குவரத்து அமைச்சே..’ என்று எழுதுங்கள். வாகன இறக்குமதியில் ஊழல் இல்லாமல் நேர்மையாக தரமான வாகனங்களை இறக்குமதி செய்யுங்கள், ஒவ்வொரு வாகனத்துக்குமான சரியான ஆயுட் காலத்தை நிர்ணயுங்கள், பாவனையி லுள்ள தரமற்ற வாகனங்களைத் தடை செய்யுங்கள் என்று வேண்டுங்கள். போக் குவரத்து விதிமுறைகளை இறுக்கமாக் குங்கள், போக்குவரத்து பொலிஸாரது சேவையை அதிகரியுங்கள் என்று வேண்டுங்கள்.

ஏனென்றால் வீதிவிபத்துகளை தவிர்க்க மனித இயந்திரத்தை திருத்த முடியாது. திருத்த வழியுமில்லை. எனவே தான் இரும்பு இயந்திரங்களை திருத்தவும் மாற்றவும் வேண்டுங்கள் என்கின்றேன். இது என்ன விசர்தனமான வேண்டுகோள் என்று நீங்கள் நினைப்பீர்களானால் உங்களின் ‘அன்பார்ந்த சாரதிகளே..’ என்று தொடங்கும் வேண்டுகோள் அதை விட விசர்த்தனமானது என்பதை மிகவும் தாழ்மையாக கூறிக்கொள்கின்றேன். ●

# பிரான்ஸ் வன்முறை:...

(10 ஆம் பக்க தொடர்ச்சி...)

### விடுதலைப்போராட்டமே தமிழ்த்தேசியத்தை வளர்த்தது

தமிழ்த்தேசியத்தின் வளர்ச்சிக்கு சுமார் எழுபது வீதப் பங்களிப்பை வழங்கியது விடுதலைப்போராட்டமே. வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம் என அனைவரையும் இணைத்தது இதுவே. மலையகத்தின் மனோகணேசன், பிரபா கணேசன், யாழின் மகேஸ்வரன் போன்றோர் கொழும்பில் இருந்தும் மட்டக்களப்பில் பிறந்த கிஷோர் வன்னியில் இருந்தும் வவுனியாவைச் சேர்ந்த ஸ்ரீரங்கா நுவரெலியாவில் இருந்தும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடிகின்றதென்றால் தமிழ்த்தேசியத்தின் வளர்ச்சியே. இதற்கு முன்னர் தமது வாழ்விடத்தை மீட்டு வேறு இடத்தில் போட்டியிட்ட அனைவரும் (அமிர் உட்பட) தோல்வியே தழுவிக்கொண்டனர்.



இன்று யதார்த்தத்திற்கு மாறாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு செயற்படுகின்றது. புலிகள், புலிகளோடு சம்பந்தப்பட்டவர்கள் எவரும் அரசியல் அரங்கில் வந்து விடாமல் இருக்க வேண்டுமென்பதில் இதில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஒத்த கருத்துடன் உள்ளன. இக் கட்சிகள் ஒன்றின் தலைவர் ஈழத்தில் பிரபலமாக இருந்த அரசியல் ஆய்வாளர் ஒருவரை தமிழகத்தில் சந்தித்தார். அப்போது அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இவரிடம் வினவப்பட்டது. அதற்கு அவர் "இவங்கள் கொஞ்சக் காலம் உள்ளுக்க இருக்கட்டுக்கும் வெளியில் வந்தால் அரசியலைக் குழப்பிப் போடுவாங்கள்" என பதிலளித்தார். இதே பிரமுகருடன் 2010 தேர்தலின் போது முன்னைய எம். பிக்கள் சிலருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கவில்லையே என பி.பி.சி நிருபர் கேட்டார். அதற்கு அவர் "அரசுடன் இணைந்து செயற்பட்டோர், வெளிநாட்டில் கூடிய காலம் இருந்தோர் தவிர ஏனையோருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது" எனப்பதிலளித்தார். அரசுடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்ற வகையில் கிஷோர், தங்கேஸ்வரி, கனகரத்தினம் ஆகியோரை நிராகரித்தது சரியே. ஆனால் கஜேந்திரன், பத்மினி, போன்றோரின் கடவுச்சீட்டுக்களுடன் மாவை, சம்பந்தன் ஐயா, செல்வம் மற்றும் இவரது கடவுச்சீட்டுக்களை ஒப்பிட்டு பார்த்திருந்தால் யார் வெளி நாட்டில் அதிக காலம் இருந்திருக்கிறார்கள் என்பது புரிந்திருக்கும். இவருக்கு இந்தியாவும் வெளிநாடு தான் என்பது புரியவில்லையே. மேலும் நாட்டுக்கு வெளியே போகாத சொலமன் சூ சிறிலை வசதியாக இவர் மறந்து விட்டார். கஜேந்திரன், பத்மினி, சிறில் போன்றோர் புலிகளின் சிபாரிசில் முன்னைய தேர்தலில் போட்டியிட்டவர்கள் என்ற வகையிலேயே 2010 தேர்தலின் போது புறக்கணிக்கப்பட்டார்கள் என்பது தான் உண்மை.

### பயங்கரவாதிகள் என்ற பதம்

இதே போன்று பயங்கரவாதம் - பயங்கரவாதிகள் என்ற பதத்தினை பா. அரிய நேந்திரன், சுமந்திரன் போன்றோர் பயன்படுத்தினர். பாராளுமன்றில் உரையாற்றிய அரியநேந்திரன் "பயங்கரவாதத்தை அளித்தவர்களுக்கு விசர் நாய்களைக் கொல்வது பெரிய விடயமல்ல" எனக்குறிப்பிட்டார். விலங்குகள் தொடர்பான சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வேளையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அது போல தென்னிந்தியத் திருச்சபை தொடர்பான வழக்கொன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் நடைபெற்ற போது ஒரு தரப்பினருக்காக வாதாடிய சுமந்திரன் மறுதரப்பினரை "இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள்" எனச்சுட்டிக்காட்டினார். ஆகவே போராளிகள் தொடர்பான விடயத்தில் பெரும்பாலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒத்த கருத்தினையே கொண்டுள்ளனர். இதே வேளை முன்னாள் போராளிகளின் சமூக அந்தஸ்து, அரசியல் கைதிகளின் விடுதலை, அவர்களின் நலன் தொடர்பாக சிலர் அக்கறையுடன் செயற்படுவதையும் மறுப்பதிற்கில்லை. தேர்தல் சமயத்தில் மட்டும் எல்லோரும் கைதேர்ந்த நடிகர்களாகி விடுகின்றனர். கிளிநொச்சியில் "பிரபாகரனைச் சந்தித்தது மறக்க முடியாத அனுபவம்" என்பார் மாவை. "பிரபாகரனே எமது தலைவர்" என முழக்கமிடுவார் மற்றொருவர். விருப்பு வாக்கை கூட்ட தில்லாலங்கடி வேலைகள் அனைத்தையும் செய்வர். எனவே கூட்டமைப்பினருக்கு எதிரான அரசியல் செயற்பாடு என்பது ஒவ்வொருவரதும் தனி உரிமை அது வன்முறையாக மாறிவிடக்கூடாது. ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டங்களைக் கூட்டாமல் அந்தந்த நாட்டின் சட்டங்களை மதிக்கும் வகையில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும். மாவையை துரோகி என்பவர் அரசியல் தஞ்சக்கோரிக்கையை வாபஸ் பெற்று விட்டு நாட்டுக்கு வந்து மேடை பெற்று தனது கருத்தை தாராளமாக சொல்லலாம். ஏற்பது ஏற்காதது எமது மக்களைப் பொறுத்தது. அவர்கள் தானே வாக்களிப்பவர்கள். முதலில் எமது மக்களின் உணர்வுகளைப் புரிய முயற்சிக்க வேண்டும். தவறானவர்களை தேர்ந்தெடுத்து விட்டோம் என மக்கள் உணர்ந்தால் அடுத்த தேர்தலில் அவர்களை நிராகரிப்பர். அப்படி நிராகரிக்கப்பட்ட பலர் முன்னாள் எம்.பிக்கள் என்ற பெயரில் உலா வருகின்றனர்.

இதேவேளை உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அடுத்த மாநாடு கிளிநொச்சியில் நடைபெற உள்ளது. 1974 இன் பின்னர் எமது மொழி தொடர்பாக உலகளாவிய ரீதியில் எமது மண்ணில் நடைபெற இருக்கும் மாநாடு இது. இதில் உங்களது கண்ணீர் புகைக் குண்டுக்கருவிகளுக்கு ஓய்வு கொடுங்கள். பீப்பாக்குண்டு, மலக்குண்டு, எறிகணை, பல்குழல் பீரங்கி, கிபிர், கொத்துக்குண்டு, எரிகுண்டு அனைத்தையும் சந்தித்த மக்கள் முன்னால் உங்கல் கண்ணீர்ப் புகைக்குண்டு அச்சமூட்டாது. முடிந்தால் செஞ்சோலைப்பிள்ளைகளின் வாழ்வுக்கு வழிதேடிக் கொடுங்கள், திருமணமாகாத முன்னாள் பெண் போராளிகளுக்கு ஏதாவது வழியில் உதவ முடிந்தால் உதவுங்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் உங்கள் கவனம் திரும்பட்டும்.

மேலும் தமிழ்த் தேசிய முன்னணி, தமிழ் மக்கள் பேரவை, சிலந்திக்கட்சி போன்றோரும் பிரான்ஸ் சம்பவம் தொடர்பாக தமது மௌனத்தைக்கலைக்க வேண்டும். நாகரிகமான அரசியலை வெளிப்படுத்த முயல வேண்டும்.

(15 ஆம் பக்க தொடர்ச்சி...)



# கிளிநொச்சி தீ....

4. கிளிநொச்சியில் சந்தைக் கடைத் தொகுதி எரிந்து சாம்பரான அடுத்த நாள் மாங்குளம் பகுதியில் ஒரு ஹன்ரர் வாகனத்தைப் பொலிசார் சோதனையிட்ட போது,அதற்குள் உடுபுடவைகள், அழகுசாதானப் பொருட்கள் என்பன அதிகளவில் இருந்துள்ளன. வழக்கமாக வவுனியா, கொழும்பில் இருந்தே இப்படியான பொருட்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்லப்படும். அதற்கு நேர்மாறாக கிளிநொச்சியில் இருந்து வவுனியாப் பக்கமாக இந்தப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவது ஏன் என்ற கோணத்தில் பொலிசார் விசாரித்த போதே உண்மை தெரிய வந்தது. கிளிநொச்சி தீவிபத்தின் போது, நடத்தி வருகிறார்கள். குறித்த தினத்தில் சந்தையில் மாலைவேளை நடமாடியோர், காவல் கடமையில் இருந்தோர், கடைக்காரர்கள் என பல்வேறு தரப்பினர் பற்றியும் விபரங்கள் சேகரித்து, அவர்களிடம் ஆரம்ப விசாரணைகளை பொலிசார் முன்னெடுத்துள்ளனர். அத்துடன் சந்தைக் கட்டடத் தொகுதியில் பூட்டப்பட்டிருந்த "சீசிரிவி" கமெராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளையும் ஆராய்ந்துள்ளனர். இதன் மூலம் இந்த தீப்பரவல் விபத்தா? சதியா? என்பதை விரைவில் உறுதி செய்துவிட முடியும்.

கடைகளில் பொருட்களை திருடியோர் நெருப்பு வைத்திருக்கலாம், பிரதேச சபையுடன் அண்மைக்காலமாக முறுகல் போக்குடன் செயற்பட்டவர்கள்



தப்பிப் பிழைத்த சில கடைகளின் பொருட்கள் வெளியில் கொண்டுவரப்பட்டன என்றும் அவற்றையே அந்த வாகனத்தில் திருடிச் சென்று கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அது கூட நம்பும்படியாக இல்லை. ஏனெனில் தீவிபத்து இடம் பெற்ற பின்னர் தீயை அணைப்போர், கடைக்காரர்கள், பொலிசார், விடுப்பு பார்க்க வந்தவர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் என்போரால் சந்தை வளாகம் எப்போதும் நிறைந்தே காணப்பட்டது. இப்படியான சூழலில் எல்லோரின் கண்களையும் கட்டி விட்டு ஒரு வாகனம் நிறையச் சாமான்களை களவாக ஏற்றிக்கொண்டு செல்வது சாத்தியமா என்ற கேள்வி எழுகின்றது. "சிலவேளை நெருப்பு பிடிக்க முதலே சாமான்களை எடுத்திட்டாங்கள் போல. களவை மறைக்கத் தான் நெருப்பு வைச்சாங்களோ தெரியாது" என்கிறார் பாதிக்கப்பட்ட கடைக்காரர் ஒருவர்.

இத்தகைய காரணிகள் கிளிநொச்சி தீவிபத்து தற்செயல் நிகழ்வு என்பதை விடவும் திட்டமிட்ட சதியாக இருக்கலாமோ என்ற ஊகங்களையே அதிகம் எழுப்புகின்றன. பொலிஸாரும், குற்றப்புலனாய்வு துறையும் இந்தக் கோணத்தில் விசாரணைகளை பிரதேச சபைக்கு அபகீர்த்தியை உண்டாக்கும் நோக்கில் தீயை மூட்டியிருக்கலாம், கடைக்காரர் எவரேனும் அல்லது சிலர் தீயைப் பற்ற வைத்து இருக்கலாம், எந்தப் நோக்கமும் அற்ற விஷமிகள் சிலர் தம் "பம்பலுக்காக" இப்படி நெருப்பைக் கொளுத்தி மகிழ்ந்திருக்கலாம் இப்படிப் பல்வேறு கோணங்களில் கிளிநொச்சி தீ விபத்து யோசிக்க வைக்கிறது. எனினும் இவற்றில் முதலிரு கோணங்களே அதிக கவனத்தைக் கோருவனவாக உள்ளன.

வழக்கமாக ஏதேனும் விடயங்கள் மர்மமாக உள்ளபோது "மலிஞ்சால் சந்தைக்கு வரும் தானே" என்று சொல்வதுண்டு. இப்போது சந்தை தீப்பற்றிய விடயமே மர்மமாக உள்ளபோது, அது எந்தச் சந்தைக்கு வருவதாம்?






மேற்கு வானில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். அவர்கள் இப்பொழுது ஒரு மலைக்கணவாய் ஊடாக நடந்து கொண்டிருந்தனர். இரு பக்கங்களிலும் அடர்காட்டுடன் கூடிய மலைகள் உயர்ந்து நின்றன. வானத்தில் கழுகள் சஞ்சரித்தன. குரல் தந்தன. கோபுரந்தாங்கிப் பூதம் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டது.

"எசமான்.." என்று வசந்தனிடம் இரந்தது.

வசந்தன் புரிந்து கொண்டான். அதற்குக் கழுகு முட்டைகள் இப்பொழுது தேவைப்பட்டன. உயர் மலைச் சிகரத்தின் பக்கக் குடைவுகளில் கழுகளின் கூடுகள் தெரிந்தன.

"அப்படி என்னை கூப்பிடாதே. வசந்தன் என்றே அழை" என்றான் வசந்தன்.

"சரி நாங்கள் சற்று நேரம் இங்கிருக்கிறோம். நீ கெதியாகக் கழுகு முட்டைகளுடன் திரும்பி வா. பாவம் கழுகுகள். முழு முட்டைகளையும் எடுத்து விடாதே"

"எனக்கு ஒரு முட்டை கிடைத்தால் போதும். அதனைப் படிப்படியாக இரட்டிப்பாக்கிக் கொள்ள எனக்குத் தெரியும்"

"அப்ப சரி.." என்றான் வசந்தன். அவர்கள் அனைவரும் அவ்விடத்தில் அமர்ந்து கொண்டனர். கோபுரந்தாங்கிப் பூதம் கணவாயின் பக்க மலைச் சாய்வில் ஏறத் தொடங்கியது. அது ஏறுவதை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அது வெகுலாவகமாக ஏறியது. மரங்களைப் பற்றியும், குன்றுகளைப் பற்றியும் கால்களை அவதானமாக ஊன்றி ஏறியது. ஓரிடத்தில் காலிடறித் 'தொப்' பென விழுந்தது.

"ஐயோ.." எனச் சீலன் அலறிவிட்டான்.

பூதம் வெட்கத்துடன் இவர்களைப் பார்த்துக் கைகளை அசைத்துவிட்டு, தன்னைச் சமாளித்துக் கொண்டு ஏறத் தொடங்கியது.

"நல்லா அவருக்கு நொந்திருக்கும்.." என்று பச்சாதாபப்பட்டாள் அமலா.

வசந்தனுக்கு அருகில் ரகு வந்தான். இருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டனர்.

"நீ வெகு துணிச்சல்காரன், வசந்த்.." என்றான் ரகு.

"இந்த உலகம் வீரர்களுக்குரியது.." என்றான் வசந்தன்.

"புத்திசாலித்தனத்தோடு சேர்ந்த வீரமாக இருக்க வேண்டும்"

அவர்கள் இருவரும் சற்றுநேரம் மௌனமாக இருந்தனர். ரகு கேட்டான்:

"வசந்த், கோபுரந்தாங்கிப் பூதம் கேட்ட கேள்விக்கு கமலம் ரீச்சர் சொன்ன பதில் பிழையா?"

"ஆமாம் பிழைதான். 7 அப்பிள் பழங்கள் என்பது தான் சரி. முதலில் கிடைத்த பழங்கள் 7 அதை இரட்டிப்பாக்கினால் 14 வரும். அதில் அரைப் பங்கினையும், ஒன்றையும் சேர்த்தால் 8 வரும். 8 பழங்களை ஒருவனிடம் கொடுத்துவிட்டு, மிகுதி 6 பழங்களையும் இரட்டிப்பாக்கினால் 12 வரும். அதில் எட்டை மற்றவனிடம் கொடுத்துவிட்டு, மிகுதி 4 பழங்களை இரட்டிப்பாக்கினால் 8 வரும். அதனை மூன்றாமவனிடம் கொடுத்தது. ஆகவே முதலில் பையில் இருந்த பழங்கள் 7 ஆகும்"

"கமலம் ரீச்சருக்கு இந்தக் கேள்விக்கு ஏன் பதில் தெரியவில்லை?"

"கவனமாக அவதானிக்கவில்லை. பயம், அவசரம் இரண்டும் சேர்ந்து பிழையான பதிலைக் கூற வைத்து விட்டது"

வசந்தனின் விழிகள் மலைச்சாய்வில் நிலைத்தன. கோபுரந்தாங்கி ஒரு கழுகுக் கூட்டினை நெருங்கிக் கொண்டிருந்தது. வானில் வட்டமிட்ட கழுகு ஒன்று 'விர்' ரெனத் தாழ்ந்தது. மலைச்சரிவில் தொத்தி ஏறிக் கொண்டிருந்த கோபுரந்தாங்கியை நோக்கி, தன் கூரிய அலகையும் கால்களையும் நீட்டிக் கொண்டு பறந்து வந்தது. அது பறந்து வந்ததைப் பூதம் கவனிக்கவில்லை. பலமான கொத்தலும் கீறலும் முதுகிலும் இரத்தம் கோடிட்டது.

அது தன் ஒரு கரத்தால் கழுகினை விரட்டியபடி, கூட்டுக்குள் கையை விட்டு ஒரு முட்டையை எடுத்துக் கொண்டு இறங்க ஆரம்பித்தது. முட்டையை இழந்த தாய்க் கழுகு பெரிதாகச் சத்தமிட்டது. வானில் பறந்து கொண்டிருந்த பல கழுகுகள் திடீரெனக் குவிந்தன. அத்தனை கழுகுகளும் ஒருங்கே கோபுரந்தாங்கி மீது பாய்ந்தன, அது எதிர்பார்க்கவில்லை. கைப்பிடி தவற, அப்படியே உச்சியில் இருந்து 'பொத்தென்' நிலத்தை நோக்கி விழுந்தது. பெரியதொரு குன்று சரிவதைப் போல மலைச்சாய்வில், உருண்டு உருண்டு கீழ் நோக்கி வந்தது.

(புதிர்கள் தொடரும்...)




## கோபத்தால் கிடைத்த வரம்

ஒரு பெண்ணம் பெரிய காட்டை அடுத்து மலைக்கோட்டை என்ற சிற்றூர் இருந்தது. அங்கே ஒரு உழவன் வாழ்ந்து வந்தான். அவன் மான் ஒன்றை அன்பாக வளர்த்து வந்தான். அந்த மானும், அவனிடம் அன்பாக இருந்தது. வேலை முடிந்து அவன் வீட்டிற்கு வருவான். அவனை வரவேற்க, மான் துள்ளிக் குதித்தபடியே ஓடி வரும். அவனைச் சுற்றி, சுற்றி வந்து தன் மகிழ்ச்சியைக் காட்டும்.

அவனும் அதைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சுவான். அன்றும் வழக்கம் போல, வீட்டிற்கு வந்தான் அவன். அவனை வரவேற்கும் மான் வராததைக் கண்டான். பரபரப்புடன் வீட்டுத் தோட்டத்திற்குச் சென்றான். அங்கும் மான் இல்லாததைக் கண்டான். மானைத் தேடி ஊர் முழுவதும் அலைந்தான். எங்கும் கிடைக்கவில்லை.

கோபத்தால் துடித்தான் அவன்

"இங்கே உள்ள எவனோதான் என் மானைக் கொன்று இருக்க வேண்டும். அவன் எங்கே இருந்தாலும் கண்டு பிடித்துக் கொல்ல வேண்டும். அப்போதுதான் என் உள்ளம் ஆறும்" என்று நினைத்தான்.

அவன் செய்த முயற்சி எதுவும் பயன் தரவில்லை. மானைக் கொன்றது யார்? என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனால் அவன் கோபம் அதிகம் ஆனது.

மானைக் கொன்றவனைக் கண்டு பிடிக்க அவனுக்கு நல்லவழி தோன்றியது. கடவுளை நினைத்து கடுமையான தவம் செய்தான்.

அவன் முன் கடவுள் தோன்றினார்.

"கடவுளே! என் மானைக் கொன்றவனை இங்கே கொண்டு வந்து நிறுத்துங்கள். நான் அவனைக் கொன்று பழி தீர்க்க வேண்டும்" என்று கோபத்துடன் சொன்னான் அவன்.

"அன்பனே! கோபம் கொடியது. யார் கோபம் கொள்கிறாரோ... அவரை அந்தக் கோபமே அழித்து விடும். கோபத்தை விடு. உன் மானை வேண்டுமானாலும் தருகிறேன். வேறு எந்த வரம் வேண்டுமானாலும் கேள் தருகிறேன்" என்றார் அவர்.

கோபம் சிறிதும் அடங்காத அவன், "எனக்கு மானும் வேண்டாம், வரமும் வேண்டாம். மானைக் கொன்றவன்தான் வேண்டும்" என்றான்.

"அப்படியே ஆகட்டும்" என்ற அவர் அங்கிருந்து மறைந்தார்.

பயங்கரமாக கர்ஜித்தபடி சிங்கம் ஒன்று அவன் முன் தோன்றியது.

"ஐயோ! என் மானைக் கொன்றது இந்தச் சிங்கமா? கோபத்தால், இப்படி ஒரு வரம் கேட்டு விட்டேனே. என்ன செய்வேன்?" என்று அலறினான் அவன்.

அதைப் பொருட்படுத்தாத சிங்கம், அவன் மேல் பாய்ந்து அவனைக் கொன்று தின்றது.

## அசைந்தாடு

அசைந்தாடம்மா அசைந்தாடு
ஆசைக் கிளியே அசைந்தாடு
இசையோடொன்றாய் அசைந்தாடு
ஈரக் குலையே அசைந்தாடு

உதய நிலாவே அசைந்தாடு
ஊதும் குழலே அசைந்தாடு
எழிலாய் வந்து அசைந்தாடு
ஏற்றத் தோடு அசைந்தாடு

ஐயம் விட்டு அசைந்தாடு
ஒழுக்கம் பேணி அசைந்தாடு
ஓவிய நூலே அசைந்தாடு
ஔவிய மின்றி அசைந்தாடு!

- சாரணா கையூம், பதுளை.






## குட்டீஸ் பரிசுப் பொதி - 11

★தியாகி திலீபன் பிறந்த ஊர் எது?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:


முடிவுத்திகதி: 04.10.2016

குட்டீஸ் பரிசுப்பொதி - 11
புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### குட்டீஸ் பரிசுப் பொதி - 09 முடிவுகள்

★ ஸ்ரீபிரபுசங்கர்
08.லோரன்ஸ் றோட்
கொழும்பு - 04
கொ/இந்துக் கல்லூரி - தரம்-4

★ யதுஷா பானுராஜா
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி
தரம்-7



## இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்...

இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே.. என்று ஆரம்பிக்கும் பாடல் வரி உங்கள் ஞாபகத்திற்கு வருகிறதா? இருக்கும் இடத்தில் இல்லாவிட்டால் சங்கடந்தான். இந்தப் பெண்ணின் பெயர் Harnaam kaur. இங்கிலாந்தைச் சேர்ந்த இவள் வயது 24.

ஆணின் முகத்தில் இருக்க வேண்டியது இவள் முக்த்திற்கு வந்துவிட்டது தான் இங்குள்ள பிரச்சினை. ஆறு அங்குல நீளத்திற்கு வளர்ந்து இவளை முழு ஆணாக்கியிருக்கும் இவள் தாடி, இவளை ஒரு சரித்திரம் படைக்க உதவியிருப்பது பலரும் எதிர்பாராத ஒன்று.

இவளை உலக சாதனைகளைப் பதிவுசெய்யும் கின்னஸ் நிறுவனம் மிகக் குறைந்த வயதில் மிக நீண்ட தாடி கொண்ட பெண் என்ற சாதனையாளராக்கி இருக்கின்றது.

இவ்வளவு காலமும் பலருடைய கேலிப் பேச்சுக்கு ஆளாகி மனம் நொந்து போயிருந்த இந்த [illegible] பெண்ணுக்கு, இந்தச் சாதனை ஆறுதலளிக்கும் ஒரு களிம்பாகி இருக்கின்றது என்று பலரும் அபிப்பிராயப்படுகின்றார்கள்.



## சாரதி இல்லாத வாகனங்கள்

மனித உழைப்பைச் சுருக்கிக் கொண்டே வருவது தான் இன்றைய விஞ்ஞானம்.

உலகப் பிரபல்யம் பெற்ற அமெரிக்காவின் [illegible]ார்ட் மோட்டார் நிறுவனம் சாரதிகள் இல்லாத [illegible]டோ பைலட்டுகளைக் கொண்ட கார்களை [illegible]முகப்படுத்துகின்றது. தனது தொழிற்சாலை [illegible]க்கும் இடத்திலிருந்து 10 மைல் மேற்காக பல்லா[illegible] டொலர்கள் பெறுமதியான [illegible]ராடார்களுடன், [illegible]ராக்கள், கம்யூட்டர் சிப்ஸ், இன்னும் பல நவீன [illegible]விகள் பொருத்தப்பட்ட இந்தக் கார்களை [illegible]ள்ளோட்டத்திற்கு நிறுவனம் விட்டுள்ளது.

வெள்ளோட்டத்தின் போது சாரதிகள் ஆசனத்தில் [illegible]வர் உட்கார்ந்திருந்தாலும், ஆட்டோபைலட்டே [illegible]ர ஓட்டிக்கொண்டிருந்தார்.

குறைநிறைகளை உன்னிப்பாகக் கவனிக்கும் [illegible]த நிறுவனம், 2021 இல் இவற்றை சந்தையில் [illegible]பனைக்கு விடும் என்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் பலரை அழுத்து[illegible]றது. அதற்குள் இவர்கள் இன்னொரு தலையிடி[illegible]ல சாரதிகளே இல்லாத வாகனங்களை வடிவ[illegible]த்து, சாரதிகளின் வேலை வாய்ப்புகளுக்கு மண்[illegible]டுகிறார்கள் என்று சிலர் எண்ணக்கூடும்.

இன்னும் எத்தனை எத்தனை மாற்றங்களோ? [illegible]டந்தவனுக்குத்தான் வெளிச்சம்.

## மரணபயம் மறைந்திடட்டும்



யாரைத்தான் விட்டுவைக்கின்றது இந்த மரணபயம்? அரசனாக இருந்தாலென்ன ஆண்டியாக இருந்தாலென்ன சாவைக் கண்டு கிலி கொள்ளாதவர்கள் நம்மிடையே யாருமே இல்லை.

ரஷ்ய நாட்டவர்கள் மட்டும் என்ன விதிவிலக்கா? இந்த மரண பயம் என்பதை மரண பயத்தால்தான் போக்க முடியும் என்று நம்புகின்றார்கள் இவர்கள். என்ன குழப்பமாக இருக்கின்றதா? முள்ளை முள்ளால்தானே எடுக்க முடிகின்றது? இன்றைய நாட்களில் இந்த ரஷ்ய நாட்டவர்களிடம் ஒரு விசித்திரமான பழக்கம் தொற்ற ஆரம்பித்திருக்கின்றது. அதாவது உயிரோடு புதைக்கப்படும் பொல்லாத பழக்கந்தான் அது. ஆறடி ஆழமான புதைகுழியில் புதையுண்டு கிடக்க வரிசையில் காத்து நிற்கிறார்களாம் இந்த நாட்டவர்கள். இதை ஒரு வியாபாரமாகச் செய்யத் தலைப்பட்டுள்ளது இங்குள்ள ஒரு நிறுவனம்.

மரண பயத்தைப் போக்க இதைவிடச் சிறந்த வழி வேறேதும் இல்லை என்பது இவர்களது விளம்பரம். இதைப் பற்றி பொலிஸார் கண்டுகொள்வில்லையா? ஒரு பெண் இந்த நிறுவனம் பற்றி "இந்த நிறுவனத் தலைவர் ஒரு மருத்துவரல்ல. இவரோடு கூட வேலை செய்பவர்களும் அனுபவசாலிகள் அல்ல" என்று சொல்லி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளாள்.

என்றாலும் இந்த நிறுவனத்திற்கு போதுமான வாடிக்கையாளர்கள் கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பயம்போக்கும் இந்த சிகிச்சைக்கு ஒருவரிடமிருந்து வசூலிக்கும் கட்டணம் 3000 ரூபிள்ஸ். (சுமாராக 7000ரூபாய்கள்) மரண பயம் ஒருபுறம் இருக்க சாவைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பது மகா மோசமான வியாதி!




## கருணைக் கொலை

நமது நாட்டில் இல்லாவிடினும், ஒருவர் ஏதொவொரு குணப்படுத்த முடியாத நோயால் தாங்கமுடியாத வேதனை அனுபவித்து வரும்போது அந்த நோயாளியின் உயிரைக்கவர பல நாடுகளில் சட்டம் இடமளிக்கின்றது. ஒருவர் உயிரைப் பறிக்க இன்னொருவருக்கு உரிமை இல்லை என்ற நிலையில், நோயாளியைச் சார்ந்தவர்களின் முழுச் சம்மதத்துடன் அது சாத்தியமாகின்றது. Euthanasia என்று இதை ஆங்கிலத்தில் அழைக்கின்றார்கள்.

இது பழைய செய்தி.

புதுச் செய்தி என்னவென்றால் ஒரு 17 வயது நோயாளிக்கும் இப்படியொரு மரணத்தை சமீபத்தில் உண்டு பண்ணியிருக்கின்றார்கள். 2014 இல் வயதுக் கட்டுப்பாடு இந்த விடயத்தில் இல்லையென்று சட்டம் மாற்றியமைக்கப்பட்ட 2 வருடங்களுக்க பின்னர், இவ்வளவு சிறு வயதில் ஒருவர் மரணிப்பது பெல்ஜியத்தில் இதுவே முதற் தடவையாகும். அதாவது வயதுக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

எந்த வயதினரும் விஷஊசி ஏற்றிக் கொல்லப்படலாம் என்ற சட்டத்தை அமுல்படுத்தியுள்ள ஒரேயொரு உலக நாடு பெல்ஜியமாகும். இதன் அயல் நாடான நெதர்லாந்தில் குறைந்த பட்சம் 12 வயதாக இருந்தால் மாத்திரமே அனுமதிக்கப்படும். பெல்ஜியத்தில் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் இப்படியொரு முடிவை எடுக்க பெற்றோரின் முழுச் சம்மதமும், நோயாளி இனி மருந்துகளால் குணப்படுத்த முடியாது என்ற இறுதி நிலையையும் எட்டியிருக்க வேண்டும்.

2003 க்கும், 2013 க்கும் இடைப்பட்ட காலத்தில் இப்படியான மரணங்களை நாடுவோர் தொகை பெல்ஜியத்தில் எட்டு மடங்கு அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அதாவது 8752 நோயாளிகள் பல உலக நாடுகளிலிருந்து இங்கு வந்துள்ளார்கள்.

இங்கிலாந்தில் இப்படியான கருணைக் கொலைகள் அனுமதிக்கப்படாததோடு, யராவது இப்படி மரணித்தால் அதை ஒரு கொலையாகவே சட்டம் பார்க்கும். உச்ச தண்டனையாக ஆயுள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியும் வரலாம்.

காவழிர் ஞானா



உடலில் மிக அதிக அளவு பச்சை குத்திக்கொண்ட வயதாளிகள் என்ற கின்னஸ் சாதனை புளோரிடா நகரவாசிகளான சார்லொட் குட்டன் பேர்க் (67வயது) என்ற ஆணுக்கும் சக்ஹெல்ம்க் என்ற பெண்ணுக்கும் கிடைத்துள்ளது. 10 வருடங்களுக்கு முன்பு பச்சை குத்த ஆரம்பித்த இவர்களின் உடம்பில் 91.5 வீதம் பச்சை குத்தப்பட்டுள்ளதாம். விபரீத ஆசைகள் எப்படி எப்படியெல்லாம் மனித மனங்களில் முளைவிடுகின்றன பார்த்தீர்களா?

## சந்தனம் மிஞ்சினால்




சந்தனம் மிஞ்சினால் அதை எங்கெங்கோவெல்லாம் தடவுவார்கள் என்று ஒரு சொற்றொடர் வழக்கத்தில் இருந்து வருகின்றது. இங்கேயும் அந்த நிலைமை தான் போலிருக்கின்றது.

பணத்தை கட்டுக்கட்டாக வைத்துக் கொண்டு எப்படிச் செலவழிப்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் கனவான்களுக்கு, கட்டுக்கட்டாக ஜுடிபாக்களை கொடுக்கின்றது எமிரேட்ஸ் நிறுவனம்.

Etihad என்பது எமிரேட்ஸின் சகோதர நிறுவனம். ஆடம்பர பங்களாக்களை வாடகைக்கு விடுவதுபோல, அளவற்ற நவீன வசதிகள் கொண்ட விமானப் பயணத்தை இது அறிமுகம் செய்கின்றது. இலண்டனிலிருந்து மெல்பேர்ண் நகருக்குப் பயணிக்க விமானச் சீட்டுக்கு 80,000 டொலருக்கு மேற்பட்ட தொகையை வசூலிக்கின்றது.

என்ன இது பகற் கொள்ளை என்கிறீர்களா? ஏ 380 ரக எயர் பஸ்ஸில்தான் பயணம். ஒரு பயணிக்கு ஆடம்பர வசதிகள் கொண்ட 3 அறைகள் ஒதுக்கப்படும். ஐந்து நட்சத்திர ஹோட்டலின் அனைத்து வசதிகளையும் கொண்ட இந்த விமானத்திற்கு 'The Residence' என்று பெயரிட்டுள்ளார்கள். இந்த 3 அறைகள் தனி ஒருவரோ அல்லது ஒரு ஜோடியோ முற்பதிவு செய்யலாம்.

இதன் விஸ்தீரணம் 125 சதுர அடியாக இருக்கும். நன்கு பயிற்சி பெற்ற ஒரு சமையல் கலைஞரும், எடுபிடி வேலைகளைச் செய்ய ஒரு வேலையாளும் பயணத்தில் கூடவே இருப்பார்கள். அட இவங்களுக்கென்ன பைத்தியமா? ஒரு 1000 டொலரைக் கொடுத்தால் போதும். மனுஷி விழுந்து விழுந்து சமைத்து விருந்தே வைப்பாள். இதுதான் உலகம் என்கிறீர்களா?




இணையத்தளத்தின் பாவனையினால் எங்கள் தலை முறையில் இன்னொரு பக்கமும் முளைவிடத் தொடங்கியிருந்தது. எங்களின் முந்தைய தலை முறையில் அவர்களின் ஊர்ப் பெயரில் குழுக்களிற்குள் மோதல்கள் நடந்தன. அந்த வழக்கம் எங்களுக்குள் இருக்கவில்லை. நாங்கள் வாழும் மாநிலமே எங்களின் ஏரியாவாக உருவாக்கம் பெற்றது. முந்தைய தலை முறையின் வன்முறை 2000 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் கணிசமாக குறைந்திருந்தது. இவர்களை முடிவிற்கு கொண்டு வந்ததில் விடுதலைப் புலிகளின் கிளைகளிற்கும் ஒரு பங்குண்டு. ஒரு சில குழுக்களின் பெயரை அடுத்த தலைமுறை எடுத்துச் சென்றாலும் அதுமுழுவதுமாக நிலைக்கவில்லை. ஊர் குழுக்களின் பெயர்களைவிட நாங்கள் வாழுகின்ற மாநிலம் முக்கியமாகபட்டது. எங்களை பொறுத்தவரை எங்களிற்கு அதுதான் ஊர். அனைத்து ஊரவரின் பிள்ளைகளும் ஒவ்வொரு குழுவிலும் இருந்தது பழைய ஊர் குழுக்கள் காணாமல் போனதற்கு இன்னொரு காரணம்.

ஆரம்பத்தில் குழுக்களிற்கிடையிலான உரசல்கள் பெண்களினாலேயே நடந்தேறிக் கொண்டிருந்தன. இன்னொரு குழுவை அடக்குவதன் மூலம் பெண்களிடத்தில் ஒரு கதாநாயகன் அந்தஸ்தை பெறமுடிந்தது. இதுவும் தமிழ் சினிமாவின் தாக்கமே.

எங்களிற்கு தூசண வார்த்தைகள் பழக்கமே இல்லாதவை. எனது தலை முறை எங்கிருந்து இதனை கற்றிருக்க முடியும்? லண்டனிற்கு உறவினர்களிடம் சென்றிருந்த இரண்டு நண்பர்கள் வரும் போது அங்கே இந்த வார்த்தைகளையும் கற்றுக் கொண்டே வந்திருந்தார்கள். முதல்முறை அவர்கள் எங்களை அந்த வார்த்தை சொல்லியழைக்கும் போது, ஏனைய நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து வெட்கத்தில் சிரித்துக் கொண்டோம். நண்பர்களிற்குள் இந்த வார்த்தைகளை பயன்படுத்தும் போது எங்களிற்கு கோபமோ, உறைத்தலோ இருந்ததில்லை. மாறாக அது ஒரு வெறி போல் ஆகியது. எங்களின் வயதிற்கதிமான ஒரு தோற்றத்தை உணர்ந்தோம். பின்னர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இந்த கெட்ட வார்த்தைகள் சர்வ சாதாரணமாக பயன்படுத்தப்பட்டன. பந்துடன் சேர்ந்து கெட்ட வார்த்தைகளும் பறக்கும்.இந் நாட்டு மொழியில் கெட்ட வார்த்தையில் பேசும் போது வராத கோபங்கள் தமிழ் மொழியில் உள்ள கெட்ட வார்த்தைகளால் திட்டும் போதுவந்து விடுகின்றது. முதல் முறை இருந்த வெட்கம் இப்பொழுது இருக்கவில்லை. பேசுகின்ற ஒவ்வொரு வசனத்திலும் ஒரு கெட்ட வார்த்தை சேர்க்கப்பட்டது. இது நாங்கள் ரௌடி என்பதற்கான அடையாளமாக நினைத்துக் கொண்டோம்.

ஊர் பெயரில் இருந்த உதைபந்தாட்ட கழகங்களும் 2000 ஆம் ஆண்டுகளுடன் காணாமல் போயின. தமிழர்கள் அதிகமாக ஒவ்வொரு மாநிலத்தின் சார்பிலும் கழகங்கள் உருவாக்கம் பெற்றன. இது எமதுகுழு மோதல்களிற்கு இன்னும் உரம் போட்டது. எனக்கும் எனது நண்பர்களிற்கும் எப்பொழுதும் எங்களின் வயதிற்கதிகமானோரே நண்பர்களாக இருந்தனர். எனவே நாங்கள் வலுவான குழுக்களில் ஒன்றாக இருக்க முடிந்தது. எப்பொழுதும் எங்களின் பின்னால் அவர்கள் இருக்கின்றார்கள் போன்ற தோற்றத்தை உருவாக்கி வைத்துக் கொண்டோம். தமிழர்கள் அதிகமாக வருகின்ற இடங்களில் நாங்கள் குழுவாகவே சுற்றினோம். உண்மையில் எங்கள் குழு ஒரு பத்துபேரை கொண்டதாகக் கூட இருக்கவில்லை. இரண்டடிக்கு நின்று பிடிக்க முடியாத உடலமைப்பையே கொண்டிருந்தோம்.

இந்த ரகசியம் பல குழுக்களிற்கு தெரிந்திருக்கவில்லை என்பது எங்களின் அதிர்ஷ்டமாக இருந்தது. இதனை விட இன்னொரு காரணம் நாங்கள் அன்று இருந்த விடுதலைப்புலிகளின் அமைப்புடன் ஒட்டி உறவாடியது. எனது அப்பா ஆரம்ப கால பணியாளர் என்பதால் எங்களிற்கு அவர்களின் நிகழ்ச்சிகளில் தனிபாதுகாப்பு இருந்தது.

"ஒரு பிரச்சினையொண்டு. வாறியா?" அந்தப் பக்கத்திலிருந்து நண்பன் அழைத்தான் (பின்னொரு காலத்தில் தற்கொலை செய்து கொண்டான்).

"என்ன பிரச்சினை?"

அவனின் நண்பன் ஒருவனின் ஆளுடன் வேறு மாநிலத்து பெடியன் சேட்டை விட்டவனாம். எனக்கு அவனை பெரிதாக தெரியாவிட்டாலும் நான் மறுக்கமுடியாத கட்டாயம். போகா விட்டால் கோழை என்று ஒதுக்கிவிடுவார்கள். போனால் நாளை எங்களிற்கு ஒரு பிரச்சினையென்றால் அவர்களும் எங்களிற்காக வருவார்கள்.

"சரி வீட்டடிக்கு வா" என்று அழைப்பை துண்டித்தேன்.

எங்களிடம் இருந்த ஒரே ஒரு வாகனம் ஒரு வெள்ளைநிற வோல்க்ஸ்வாகன் மட்டுமே. எங்களில் வயதில் மூத்தவனிடம் மட்டுமே கார் ஓட்டுவதற்கான "லைசன்ஸ்" இருந்தது. பல சமயங்களில் ஐந்து பேர் உள்ளடக்க கூடிய அந்த காரிற்குள் ஏழுபேர் அடைந்து கொள்வோம்.

வேலை முடிந்துசரியாக 7 மணிக்கு எனது வீட்டின் கீழ் சந்தித்துக் கொண்டோம். நாங்கள் செல்ல வேண்டிய இடம் ஒன்றரை மணி நேர கார் பயண தூரத்தில் இருந்தது.

சில பல பொருட்களை கொண்டு நான் சிறிய ஆயுதங்களை தயாரித்து வைத்திருந்தேன்.

பேய்ஸ் போல் விளையாடுவதற்கான பிளாஸ்டிக் மட்டையை வாங்கி அதற்குள் ஒரு சிறிய ஓட்டையை போட்டு அருகிலிருந்த விளையாட்டு மைதானத்தில் மணல் எடுத்து அந்த ஓட்டைக்குள்ளால் அந்த மட்டைக்குள் மணலை செலுத்தினேன். பின்னர் அந்த ஓட்டையை இறுக்கமாக ஒட்டிவிட்டேன். இப்பொழுது அந்த மட்டையால் அடித்தால் எதுவும் முறியாது. வெறும் உள்காயங்களே வரும்.

அடுத்த ஆயுதம் எனது பழைய பெல்ட் ஒன்றை எடுத்து அதற்கு உள் புறத்தில் ஒரு இரும்பு சங்கிலியை சக்தி வாய்ந்த பசையால் ஒட்டிவைத்திருந்தேன். பார்ப்பவர்களிற்கு அது ஒரு சாதாரண பெல்ட் போன்றே காட்சியளிக்கும். இப்படியாக ஒரு சிறிய வெப்பன் சப்ளையராகவே செயலாற்றிக் கொண்டிருந்தேன். இன்னொருவன் தச்சு வேலைக்கான தொழிற்கல்வி படித்துக் கொண்டிருந்ததால் அவனும் வேலையிடத்திலிருந்து சில பல ஆயத்தங்களை செய்து கொண்டே வந்திருந்தான்.

போகிற வழியில் இன்னொரு குழுவுடன் சேர்ந்து கொள்வதென்று முடிவானது.

காரில் ஏறியதும் நாங்கள் புறப்பட்டதை இந்த சண்டையை ஒருங்கிணைத்து நடத்தும் நண்பன் நாங்கள் சேர்ந்து கொள்ள வேண்டிய குழுவிற்கு அறிவித்தான்.

அவன் போனை வைத்ததும் கேட்டேன்: "என்னடா சொன்னவங்கள்?"

"எல்லாரும் வாறியளோ எண்டு கேட்டவன்"

"எல்லாரும் எண்டா? நாங்க மொத்தமே அஞ்சுபேர்தானேடா"

அவர்களை பொறுத்த வரையில் நாங்கள் ஒரு பெரிய குழு என்ற நினைப்பு.

"சரி விடு, அங்க போனதும் சமாளிக்கலாம்" என்றான்.

"சுகமான குரல் யாரென்றால் சுசிலாவின் குரலென்றேன்" பாடல் ஒலித்துக் கொண்டிருக்க கார்வேக வீதியில் பறந்தது.

கிட்டத்தட்ட அனைவருக்கும் காதல் தோல்வியென்பதால் இந்த பாடலை அந்த கார் கேட்காத நாட்களே கிடையாது.

இப்படியான கார் பயணங்களில் எங்களிற்கு இன்னொரு பொழுது போக்கும் இருந்தது.

நேரத்தை விரட்டுவதற்குத் தமிழ் சற்தளங்களில் பெற்றுக் கொண்ட தமிழ் பெண்களின் தொலைபேசிஎண்களிற்கு போன் போட்டு பேசிக் கொண்டிருப்போம்.

சில நேரங்களில் மற்றவன் பேசிய பெண்ணின் நம்பரை அருகில் இருப்பவன் வாங்கி தனதுதொலைபேசியிலிருந்து அவளுடன் பேசிக் கொண்டிருப்பான். அவளோ அவனுடன் பேசவிருப்பமில்லாதது போல் பாசாங்கு செய்து கொண்டிருப்பாள். கோபம் தலைக்கேறியதும் "உனக்கு எந்த நடிகரை பிடிக்கும்" என்றுகேட்பான். அவளும் அஜித், விஜய் என்று ஏதாவது ஒரு நடிகரின் பெயரை சொன்னதும் "உங்கட கரி மூஞ்சையளுக்கு அஜித், விஜய் கேட்குதோ? நாங்கள் என்ன சிம்ரன், திரிஷா எண்டு கேட்கிறமே? வையடி ரெலிபோனை" என்று துண்டித்து விடுவான்.

இப்பொழுது முதலில் அவளுடன் பேசிக் கொண்டிருந்தவன் அவளிற்கு சிறிது நேரத்தின் பின்னர் போன் செய்வான். அவளும் தனக்கு ஒருத்தன் போன் செய்துஇப்படி பேசிவிட்டதாக கவலைப்பட்டுக் கொள்வாள். "நீ கவலைப்படாத. நம்பரை தா. நான் ஆளை கவனிக்கிறன்" அதாவது தான் ஒரு ரௌடியாம்.

"இல்லை பிரச்சினை வேண்டாம்" என்று அவளும் "சரி இனி போன் பண்ணிணா என்ரை பேரை சொல்லி என்ரை நம்பரை குடு" என்று தொடர்ந்து கொண்டேஇருக்கும் இந்த கதை.

எங்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டிய குழுவின் இடம் வந்ததும் அவர்களிற்காக காத்துக் கொண்டிருந்தோம். அவர்கள் வந்த பாடில்லை. ஒருங்கிணைப்பாளர் தொடர்பு கொண்டு விடயத்தை கேட்டான்.

"எதிர் குறுப்போன் எடுக்குதில்லையாம். அதனால இண்டைக்கு வேண்டாம்" என்றான்.

அவனை பச்சை பச்சையாக பேசிவிட்டு மறுபடியும் அதே பயணத்தை தொடர்ந்தோம். இப்போது நான் சராசரி சுவிஸ் வாழ் புலம்பெயரியாக இசைவாக்கம் பெற்றுவிட்டேன். பனித்தேசத்திலும் வடலியாக முளைக்கப் போகின்றேன்.

**(முற்றும்)**




புலக்காட்சி
சத்தியத்தின் சாட்சி
தரிசிப்பவனுக்கு தரிசனமாகிறது
வானவில் வெளிப்பட
நீர்த் துளிகள் வேண்டும்

சோதனைகள் வலியைத் தந்தது
வலிமையை வெளிப்படுத்துகிறது
ஆபத்துக்கள் வீரத்தை
விளம்பரப்படுத்துகின்றன
துன்பங்கள்
உன்னத சக்திகளை
கூர்தீட்டும் சாணைக்கற்கள்

பகைவர்கள் நம் வாழ்வில்
சுடரேற்றும் தீக்குச்சிகள்
படைக்கப்பட்டவை அனைத்தும்
பரிணாம வளர்ச்சிக்காக
புரியாத வாழ்க்கைப் புதிரில்
ஒவ்வொரு மனிதனும்
உதய சூரியன் தான்
உதிக்க வானம் வேண்டும்

கீர்த்ன




# பருவம் தவறிய மழை

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தினால் முதன் முதலாக நடத்தப்பட்ட தமிழ்நாடு பிறீமியர் லீக் தொடர் (ரி.என்.பி.எல்) சில தினங்களுக்கு முன்னர் முடிந்திருக்கிறது. 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல் போட்டிகளில் கடந்த வருடம் சூதாட்டப்புகாரில் சிக்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளுக்கு இரண்டு வருடங்களுக்குத் தடை விதிக்கப்பட்டன. இதையடுத்து இரு வருடங்களுக்கு இவ்விரு அணிகளும் ஐ.பி.எல்லில் பங்குபற்ற முடியாததோடு சென்னை மற்றும் ஜெய்ப்பூர் நகரங்களில் போட்டிகளை நடத்த முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. இருவருட தடையின் பின் 2018 ஐ.பி.எல் போட்டிகளில் இவ்விரு அணிகளும் விளையாடலாம் என்பதும் தற்போது ஊர்ஜிதமாகி உள்ளது. எனவே இடைப்பட்ட இரண்டு வருடங்களையும் அநியாயமாக இழக்க வேண்டாம் என்பதை உணர்ந்து தமிழகத்தின் இளம் வீரர்களை அடையாளம் காண்பதே பிரதான நோக்கு என்ற போர்வையில் சென்னை ரசிகர்களின் கிரிக்கெட் ஆர்வத்தை தமது வணிகநோக்கிற்குப் பயன்படுத்தத் தொடங்கியது தான் ரி.என்.பி.எல் தொடர்.

இத்தொடரின் நோக்கம் குறித்து இரண்டு முக்கியமான கேள்விகள் எழுகின்றன.

1. சென்னை சுப்பர் கிங்ஸ் தடை செய்யப்பட்ட காலத்தில்தான் தமிழகத்தின் வீரர்களை அடையாளம் காணும் எண்ணம் தோன்றியதா? தமிழ்நாடு பிறீமியர் லீக் போன்று கர்நாடகாவில் கர்நாடகா பிறீமியர் லீக் போட்டிகள் (கே.பி.எல்) 2009 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன. அதைப்போல சென்னையிலும் இத்தொடரை முன்னரே தொடங்காதது ஏன்? அப்போது சென்னை சுப்பர் கிங்ஸ் மூலம் கிடைத்த வணிக லாபம் அவர்களின் கண்ணை மறைத்து விட்டது தான் உண்மை. தற்போது அது இல்லை என்றானபோது தான் இந்த எண்ணம் தோன்றி உள்ளது.

2. ரஞ்சிக்கிண்ணம் போன்ற தொடர்களில் தமிழ்நாடு சார்பில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த வீரர்களும் பங்குபற்றி இருந்தாலும் இதுவரை தமிழ் நாட்டிலிருந்து இந்திய அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட வீரர்களாக ஸ்ரீகாந்த், சிவராம கிருஸ்ணன், டபிள்யூ.வி.இராமன், சடகோபன் ரமேஷ், ஹேமங் பதானி, பாலாஜி, முரளி கார்த்திக், அஷ்வின், முரளி விஜய், பத்ரிநாத், தினேஷ் கார்த்திக், அபினவ் முகுந்த் போன்ற அனைவரும் பிராமணர்களாகவே உள்ளநிலையில் ஏனைய சமூகத்தவர்களுக்கு தேசிய அணியில் இடம் இல்லை என்பதே இதன்மூலம் வெட்ட வெளிச்சமாகி உள்ளது. இந்நிலையில் ரி.என்.பி.எல் போன்ற தொடர்கள் புதிதாக ஆரம்பிக்கப்படுவது ஏனைய சமூக இளைஞர்களுக்கு ஆசைகாட்டி மோசம் செய்வதற்கு ஒப்பானது இல்லையா?

# மனம் வேண்டும்

பிரேசிலின் 'றியோ' நகரில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் உயரம் பாய்தலில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். இதனைக் கௌரவிக்கும் முகமாக அவருக்கு தமிழக மாநில அரசு சார்பில் இரண்டு கோடியும் இந்திய ஒலிம்பிக் சங்கம் சார்பில் 75 லட்சமும் இன்னும், சில நிறுவனங்கள் சில லட்சங்களையும் கொடுத்துள்ளன.

ஆனாலும் சென்ற மாதம் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பில் பதக்கம் வென்ற பி.வி.சிந்து, அவரது பயிற்சியாளர் கோபிசந்த் மற்றும் சாக்ஷி மாலிக், ஜிம்னாஸ்ரிக் போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்ற தீபா கர்மெகர் போன்றவர்களுக்கு சச்சின் டெண்டுல்கர் BMW கொடுத்ததைப் போல மாரியப்பனுக்கு வழங்காதது சமூக வலைத்தளங்களில் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. ஆனாலும் இம்முறை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் சச்சின் இந்தியாவின் தூதராக நியமிக்கப்பட்டமையால் மேற்கூறியவர்களுக்கு கார் வழங்கி இருந்ததில் ஒரு நியாயம் இருந்ததாகவே தோன்றியது.

அதேசமயம் சச்சின் இதுவரை ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற எல்லா வீரர்களுக்கும் கார் வாங்கி கொடுக்கவில்லை. 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பில் குத்துச்சண்டை' வீராங்கனையான மேரி கொம் வெண்கலப் பதக்கம் வென்ற போதிலும் பட்மின்ரனில் வெண்கலப் பதக்கம் வென்ற சாய்னா நெய்வாலுக்கு மட்டுமே BMW பரிசாக கொடுத்திருந்தார். அப்போது அவர் ஒலிம்பிக் தூதராக இருக்கவில்லை ஆதலால் அது அவரது தனிப்பட்ட விடயமாகவே நோக்கப்பட்டது.

சச்சினுக்கு இருக்கும் வசதிக்கு மாரியப்பனுக்கு கார் வாங்கிக் கொடுப்பது ஒன்றும் சிரமமில்லை என்றாலும் தூதராக இல்லாத ஒரு விளையாட்டு நிகழ்வுக்கு அவர் அவசியம் கார் வாங்கிக் கொடுக்க வேண்டுமா என்ற கேள்வியும் இயல்பாக எழுகிறதல்லவா? எனவே மாரியப்பன் விடயத்தில் சச்சின் கார் வாங்கிக் கொடுக்கவில்லை என்று ரசிகர்கள் விமர்சிப்பது சற்று அதிகப்பிரசங்கித்தனமாகவே தோன்றுகிறது.

ஆனாலும் கிரிக்கெட் தவிர ஏனைய விளையாட்டுகளும் வளர வேண்டும் என்று விரும்புவதாகப் பேட்டிகளில் கூறும் சச்சினுக்கு தான் ஒரு வாய்ச்சொல் வீரர் அல்ல என்பதை நிரூபிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக மாரியப்பன் விடயம் அமைந்தபோதிலும் அதனைத் தவறவிட்டதாகவே தோன்றுகிறது. அதேசமயம் விளையாட்டுக்களில் 'வென்றவர்களை' மட்டுமே கௌரவிக்கும் மனப்போக்கில் இருந்து விடுபட்டு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றிய இந்திய வீரர்கள் அனைவருக்கும் தலா ஒரு லட்சம் இந்திய ரூபா கொடுத்த நடிகர் சல்மான்கான் இந்த விடயத்தில் சச்சினை விட மேலானவராகவே தோன்றுகின்றார்.







தொகுப்பு: சி. ஹிமலன்

உலக ஊக்க மருந்து தடுப்புச் சம்மேளனத்தின் இணைய ஆவணங்களுக்குள் புகுந்த ரஷ்யாவைச் சேர்ந்த ஊடுருவல்காரர்கள் முதற்கட்டமாக வில்லியம்ஸ் சகோதரிகள் உட்பட நான்கு வீராங்கனைகள் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை உட்கொண்டதாகத் தெரிவித்துள்ளனர். 2010 முதல் 2013 வரை செரீனா வில்லியம்ஸ் தடைசெய்யப்பட்ட ஆக்சிகோடோன், ஹைட் ரோமார்போன், பிரட்நிசோன் உள்ளிட்ட மருந்துகளைப் பாவிப்பதற்கு அனுமதித்துள்ளமை இதன் மூலம் தெரியவந்துள்ளது.

தமது இணையத்தில் களவாணணிகளாலல் ஊடுருவியதை ஒப்புக்கொண்ட மேற்படி சம்மேளனம் வீராங்கனைகள் ஊக்கமருந்து உட்கொண்டதை மட்டும் மறுத்துள்ளது. ஆனால் வில்லியம்ஸ் சகோதரிகள் தமது அனுமதியின்றி தமது தனிப்பட்ட மருத்துவக் குறிப்புக்கள் வெளியிடப்பட்டதற்கு அதிருப்தி தெரிவித்தனரே தவிர அதனை மறுத்திருக்கவில்லை.




# கட்டம் சரியில்லை

பொய்யான தகவல்களை எந்தவொருசம்மேளனமும் பேணிப் பாதுகாத்து வைத்திருக்காது என்ற வகையில் இதனை நம்ப வேண்டிய ஒரு சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் 2016 ஒலிம்பிக் போட்டிகளில் ஊக்கமருந்துச் சர்ச்சை காரணமாக ரஷ்யாவைச் சேர்ந்த பல தடகள வீரர்கள் தடை செய்யப்பட்டிருந்ததனால் அதற்குப் பழிவாங்கலாகவே இவ்வாறானதொரு வதந்தியை ஊடுருவல்காரர்கள் பரப்பி இருக்கின்றார்களா? என்ற சந்தேகத்தையும் இது தோற்றுவித்துள்ளது.

இலங்கை வீரர் குசல் பெரேரா சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் ஊக்க மருந்துப் பாவனையில் முதலில் சிக்கியதாக அறிக்கை விடுத்து பின்னர் அவரை அக்குற்றச்சாட்டிலிருந்து விடுவித்ததிலிருந்தே உலக ஊக்க மருந்து தடுப்புச் சம்மேளனத்தின் மீதான நம்பகத் தன்மை அண்மைக்காலமாக கேள்விக்குள்ளாக்கப்படுவதாகவே அமைந்துள்ளது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 24.09.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.